Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்
# தீபம்
www.deepam.lk
விலை 30 ரூபா • தீபம் 64 • 30.10.2016



## புலிகளின் தோல்விக்கு காரணம் பிரபாகரனின் மகனா?



# 'ஆவா' குழுவின் பலம் என்ன?

## சுட்டது யார்? ஏன் சுட்டார்கள்?



**Athi Visva**
பொலிஸார் மேல் வெடி வைத்தபோதே மாணவர்கள் மீது சன்னம் பட்டது.
#சாகல #ரட்நாயக்கா
படுத்திருந்து மேல் வெடி வைச்சது அப்பிடித்தானே சார்.....???



**Balanathan Anojan**
ஆகாயம் நோக்கிச் சுட்ட குண்டுதான் மாணவர்கள் மீது பட்டுவிட்டது.
-சட்டம் ஒழுங்கு அமைச்சர்
வெறியில நிண்டா அப்பிடிதான் சார். வீதி ஆகாயம் மாதிரி தெரியும். மோட்டார் சைக்கிள் விமானம் மாதிரி தெரியும். இத தான் காலக்கொடுமை எண்டு சொல்லுறது.



**Kiruthigan Kuhendran**
ஆகாயத்தை நோக்கி சுட்ட அமைச்சரின் நாளைய விளக்கம்.
மகாஜனங்களே!
நிக்காம போனதுக்கு 'தடக்கொல' போடச்சொல்லித்தான் கட்டளை இட்டோம்.
கடமையிலிருந்த பொலிஸ்ண்ட வோக்கி டோக்கீல என்னண்டு விழுந்துதோ அந்தாள் 'தடயமில்லாமல் கொலை' பண்ணீட்டார்.
இட்ஸ் ஜஸ்ட் ஏ டெக்னிக்கல் எறர்.



**மன்னார் அமுதன்**
வெள்ளிக்கிழமை (21.10.2016) #Wings நிகழ்ச்சிக்காக நானும் Thuram Uthayan, Croos Mc Millan என 08 பேர் கிளிநொச்சி நோக்கி தனி வாகனத்தில் சென்றுகொண்டிருந்தோம்.
வெள்ளாங்குள மூன்று சந்திச்சாலையில் நின்ற காவல் அலுவலர்கையை ஆட்டிக்கொண்டு நின்றார். அது நிறுத்தச் சொல்வதற்கான சைகை இல்லை. விசிலும் ஊதவில்லை. அது ஏசி இல்லாத வாகனம். ஜன்னல் திறந்திருந்தது. 40-50kmph இல் போய்க்கொண்டிருந்த எங்கள் வாகனத்தை ஐந்து நிமிட இடைவெளியில் துரத்திப் பிடித்து மீண்டும் வெள்ளாங்குளத்திற்கு வரச்செய்து தண்டம் எழுதி நீதிமன்றத்தில் லைசன்சை பெற்றுக்கொள்ளுமாறு காவல் "துரை" சொல்லிவிட்டார்.
பத்திரங்கள் எல்லாம் சரியாக உள்ளன... நீங்கள் நிறுத்தச் சொல்லுமாறு சைகை செய்யவில்லை... ஏன் விசிலடிக்கவில்லை... துரத்திவருமளவிற்கு நாங்கள் ஓடவில்லையே என்ற எங்கள் கேள்விகளுக்கெல்லாம் "கோர்ட்ஸ்க்கு போட்டாதான் இவனுகளுக்கு சரி" என்ற முணுமுணுத்த பதில் மட்டும் வந்தது. விசிலடிக்காமல் துரத்தி வந்தது "ஒரு தமிழ் காவல் தான்" பேர் கூட "சஜிவனோ சொஜிவன்" காவல்துறை தவறே செய்வதில்லை.... எப்போதும் பொதுமக்கள் தான் தவறு செய்பவர்களாக இருக்கிறார்கள்... தவறு செய்பவர்கள் எப்போதும் குழந்தைகளாகவும் ஏழைகளாகவும் அதிகாரமற்றவர்களுமாகவே இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்களை அந்தக் குற்ற உணர்வுக்குள் தள்ளிவிடுவது எளிதாக இருக்கிறது. கிளிநொச்சி போன பின் தான் இரவுச் சம்பவம் கேள்விப்பட்டேன். நல்லகாலம் எங்களைச் சுடாம விட்டான்.



**திருக்குமரன் பாமரன்**
தலைல பேனும் கையில போனும் இருந்தால் நம்ம கை சும்மாவே இருக்காது.




**Mohanraj Raj**



நீ என்னா பெரிய வசூல் மன்னனா?
தெரில, அப்படி தான் பேசிக்குறாங்க!

**Navarathnam Sharu**





விஜய்: இன்னிக்கு நெறைய பேருக்கு இல்லாத கெட்ட பழக்கம் என்கிட்ட ஒன்னு இருக்குது..

அதான் இது



**வரதன் கிருஸ்ணா**



நாம் தமிழர் என்ற பெருமை பேசுவதைவிட கடாரம்வரை சென்று நாடு பிடித்தவனை உலகம் ஏன் இதுவரை கண்டு கொள்ளவில்லை ? எமது இனம் அழிந்து போக வேண்டும் என்ற சிந்தனையா என்று தெரியவில்லை? சரி" பின்னர் திரைப்படங்கள் ஊடாக பெண்களின் தொப்பிளில் பம்பரம் விட்டு அழகு பார்த்தோம், அதைவிட "ஹம்லட் போட்டு காட்டினோம், விளக்கெண்ணையை ஊற்றி வெள்ளித்திரையில் அழகு பார்த்தோம் இதையும் விட்டுவிட்டோம்? இப்போ தமிழகத்தில் தீபாவளிக்கு பெண்களுக்கான "லேட்டஸ்ட் ஜீன்ஸ் விற்பனைக்கு வந்துள்ளதாம் எனக்கு ஒரு நண்பர் அனுப்பி வைத்திருந்தார் இதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை பார்த்து தமிழரின் கலாசாரம் எப்படி சீரழியப்போகிறது என்பதை பாருங்கள் நட்புக்களே .



**Chandra Sekar**



தீபாவளிக்கு பஸ்ல ஊருக்கு போர நம்ம பசங்க எதிர்பார்ப்பதும் நடப்பதும்....



# ‘ஆவா’ குழுவின் பலம் என்ன?

ஜக்சன்துரை

ஆவா என்றால் சிங்களத்தில் ‘வந்தேன்’ என்று அர்த்தம்.

யாழ்ப்பாணத்தை கலக்கி வருவதாக சொல்லப்படும் குழுவின் பெயரும் ஆவாதான். யாழில் எங்கு வாள்வெட்டு நடந்தாலும்... எங்கு ரௌடித்தனம் நடந்தாலும் அதை பொலிசார் ஆவா குழுவின் தலையிலேயே போட்டுவிடுகிறார்கள். “ஆவா குழு அட்டகாசம்“ என பத்திரிகைகளும் சுவாரஸ்ய தலைப்புக்கள் இட்டுக் கொண்டிருந்தன.

இது இரண்டு வருடமாக நடக்கும் நிகழ்வு.

ஆவா குழுவை பற்றி ஏராளம் தகவல்கள் ஊடகங்களில் வந்து கொண்டிருந்தன. இணைய ஊடகங்கள்தான் இதில் ஒருபடி முன்னால் நின்றன. ஆவா குழுவை பற்றி ஏராளம் கதைகள். ஆஊ என்றால் போட்டுத் தள்ளுவார்கள், கத்தியை தூக்கினால் இரத்தம் காணாமல் வைக்காத பரம்பரை, யாரையாவது தூக்குவதென முடிவு செய்துவிட்டால் தூக்காமல் விட மாட்டார்கள், நவீன ஆயுதங்கள் வைத்துள்ளார்கள், கப்பம் வாங்கி பணத்தின் மேல் படுத்திருக்கிறார்கள், அவர்களின் முன்பாக யாரும் சாரத்தை மடித்துக் கட்டிக்கொண்டு கூட போககூடாதுஞ் இப்படி இணையங்கள் எழுதி பீதியை கிளப்பிக் கொண்டிருந்தன.

யாழ்ப்பாணத்தில் எங்கு வாள் வெட்டு நடந்தாலும், வெட்டுவாங்கியவர் “ஆ”என்பதற்குள் “ஆவா” என செய்தி வந்து கொண்டிருந்தது. ஆவா பீதியை மேலும் அதிகரிப்பதைபோல மானிப்பாய், இணுவில், சுன்னாகம், உடுவிலை அண்மித்த பகுதிகளில் அடிக்கடி வாள்வெட்டு, ரௌடிகளின் அட்டகாசம் தலைவிரித்தாடியது.

உண்மையில் ஆவா குழு இருக்கிறதா?

**சங்குவேலி பகுதியில் நடந்த கொலையொன்றும் ஆவா குழுதான் செய்ததென்றார்கள் பொலிசார். சம்பந்தப்பட்டவர்கள் தலைமறைவாகிவிட்டனர், தேடிக் கொண்டிருக்கிறோம் என்றனர் பொலிசார். சம்பவம் நடந்து பல மாதங்கள் ஆகிவிட்டது. யாரும் கைதாகவில்லை. வாள்வெட்டுக்கள் நின்றபாடாக இல்லை.**



இருந்தால் அவர்களின் பலம் என்ன? பொலிசார், புலனாய்வுத்துறைக்கு டிமிக்கி கொடுத்துக்கொண்டிருப்பது எப்படி? இதற்கெல்லாம் விடை தெரிய வேண்டுமென்றால் ஆவா பற்றி ஆரம்பத்திலிருந்து அறிய வேண்டும்.

ஆவா

ஆவா குழு என்ற பெயரை யார் வைத்தார்கள் என்ற சர்ச்சை இன்றும் நீடிக்கிறது. ரௌடிக்கும்பல் ஒன்றை பிடித்து ஆவா என பெயரிட்டது பொலிஸ்தான் என்ற அபிப்பிராயமும் உள்ளது. அடிக்கடி பொலிஸ் நிலையம் வந்து கையொப்பம் இடுவதால் ஆவா (வந்தேன்) குழு என்ற பெயரிடப்பட்டதாக ஒரு தகவல் உள்ளது.

ஆவா இன்று பேராபத்தாக உருவகப்படுத்தப்பட்டாலும் ஆவாவின் ஆரம்பம் பற்றி வேறுவிதமான கதையுள்ளது. அது காதல் விவகாரம்.

மானிப்பாய் பகுதியை சேர்ந்த ஓரிரண்டு வாலிபர்கள்தான் ஆவாவிற்கு பிள்ளையார் சுழி போட்டவர்கள் என்கிறார்கள். வாலிப வயதில் ஏற்பட்ட காதல் தகராறுதான் பிரச்சனையின் ஆரம்பம். அந்த அடிதடி முற்றி வாள்வெட்டாகியது. ஒருமுறை வெட்டியவர்கள் பின்னர் எடுத்ததற்கெல்லாம் வெட்டத் தொடங்கிய போதுதான் சிக்கல் ஆரம்பித்தது.

அந்த குழுவில் இருந்தவர்கள் மிக இளையவர்கள். உயர்தரம் முடித்துவிட்டு, மீசை அரும்பத் தொடங்கியவர்கள். காதல் கத்தரிக்காய் என சண்டையை ஆரம்பித்தவர்கள் மெல்லமெல்ல ஏரியாவில் ரௌடியாக போர்ம் ஆகிவிட்டார்கள். வடிவேலு பாணியில் நானும் ரௌடிதான் என ரௌடி ஜீப்பில் ஏறினால் ரௌடியாகத்தானே வாழ வேண்டும்!

பிறகென்ன, சுற்றயல் பிரதேசங்களில் காதல் பிரச்சனையா?, காசு பிரச்சனை, வாய்க்கால் வரப்பு பிரச்சனையாஞ் அனைத்திற்கும் அந்த ரௌடிகளை கூப்பிட ஆரம்பித்துள்ளனர்.

இதற்குள் இன்னொரு தகவலுமுண்டு. அது மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலம். இப்படி உள்ளூரில் ரௌடியாக போர்ம் ஆனவர்களை உலக லெவல் ரௌடியாக்கப்பட்ட பேச்சு அரசல்புரசலாக உள்ளது. கோத்தபாயவின் இராணுவச்சட்டம் நிலவிய காலமது. யுத்தம் முடிந்து சிவில் நிர்வாகம் நிலவுகிறதென கூறப்பட்டாலும் இராணுவத்தளபதிகளே அனைத்தையும் ஆட்டுவித்தார்கள்.

அந்தக்காலத்தில் அனேகருக்கு இருட்டடி விழுந்தது. கட்டிடங்களிற்கு கழிவு ஓயில் ஊற்றப்பட்டது. பெற்றோல் குண்டு வீசப்பட்டது. வாள்வெட்டும் நடந்தது. அரசியல் எதிரிகள் இப்படி பழிவாங்கப்பட்டனர். இதை செய்தது யார்?

புலனாய்வுப்பிரிவின் பின்னணியில் ரௌடிக்குழுக்களை வைத்தே இப்படியான நடவடிக்கைகள் நடந்ததாகவும் அப்போதே இணையங்கள் செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத் தளபதியாக இருந்த மகிந்த ஹத்துருசிங்க பதவிவிலகிச் செல்லும்சமயத்தில்தான் ஆவா குழு வேட்டையாடப்பட ஆரம்பித்தது. பயன்படுத்திவிட்டு கைகழுவுகிறார்கள் என்ற பேச்சும் அப்போது எழுந்தது.

அதன் பின்னர் ஆவா குழுவிலிருந்த ரௌடிகள் துரத்தி துரத்தி வேட்டையாடப்பட்டனர். 2014 ஆரம்பத்தில் ஆவா குழு ரௌடிகள் 09பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டதுடன் வேட்டை ஆரம்பித்தது. 21வயதான ஆவா வினோத் என்ற ரௌடி தான் அதன் தலைவனாக இருந்தான் என பொலிசார் கூறினர். இதன்போது யுவதியொருவரும் கைதாகியிருந்தார்.

அவர்களிடமிருந்து வாள், கைக்குண்டு போன்ற உயிராபத்தை ஏற்படுத்தும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. அதன் தொடர்ச்சியாக மேலும் கைதுகள் நடந்தன.

ஆவா அடங்கிவிட்டதென கூறப்பட்ட நிலையில் மானிப்பாய், கொக்குவில், சுதுமலை, இணுவில், தாவடி, சுன்னாகம், மருதனார்மட பகுதிகளில் மீண்டும் வாள்வெட்டு தலைதூக்கியது. குடாநாட்டின் வேறு இடங்களிலும் கொள்ளை, கொலை, வாள்வெட்டு நடந்தது. எல்லா குற்றச்செயல்களையும் ஆவாவின் தலையில் போட்டனர் பொலிசார். கணிசமான ஆவா ரௌடிகள் கைதுசெய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டு கண்காணிப்பில் இருந்த நிலையில் மீண்டும் மீண்டும் அந்த குழு ரௌடித்தனம் புரிந்தது என்பதுதான் ஆச்சரியம்!

அண்மையில் சங்குவேலி பகுதியில் நடந்த கொலையொன்றும் ஆவா குழுதான் செய்ததென்றார்கள் பொலிசார். சம்பந்தப்பட்டவர்கள் தலைமறைவாகிவிட்டனர், தேடிக் கொண்டிருக்கிறோம் என்றனர் பொலிசார். சம்பவம் நடந்து பல மாதங்களாகி விட்டது. யாரும் கைதாகவில்லை. வாள்வெட்டுக்கள் நின்றபாடாக இல்லை.

இப்பொழுது இறுதியாக சுன்னாகத்தில் சிவில் உடையில் நின்ற இரண்டு பொலிஸ்காரர்கள் வாளால் வெட்டப்பட்டுள்ளனர். அதைவிட அதிர்ச்சி, அதற்கு உரிமைகோரி ஆவா குழுவின் பெயரில் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டது. உண்மையில் ஆவா குழுதான் துண்டுபிரசுரத்தை வெளியிட்டதா அல்லது “வேறு” தரப்புக்கள் வெளியிட்டதா என்ற சந்தேகம் பரவலாக எழுப்பப்பட்டு வருகிறது. அந்த பிரசுரத்தில் வரிக்குவரி உள்ள எழுத்துப்பிழைகள் சந்தேகத்தை மேலும் அதிகரிக்கிறது.



ஆவாகுழுவில் இயங்கியதாக கூறப்படும் பெண்




பொலிசாரின் துப்பாக்கிச்சூட்டில் மாணவர்கள் கொல்லப்பட்ட சர்ச்சை நிலவிய போது, ரௌடிகள் உண்மையில் இருக்கிறார்கள் என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தவும் அந்த பிரசுரம் விநியோகிக்கப்பட்டிருக்கலாம்.

இப்பொழுது அது விவகாரமல்ல. விவகாரம் யாழில் இவ்வளவு படையினர், பொலிசார், புலனாய்வாளர்கள் இருந்தும், எப்படி டிமிக்கி கொடுத்துக்கொண்டு ஆவா குழு இயங்குகிறது? வாளுடன் வீதியில் திரிகிறது? ஆட்களை வெட்டிச்சாய்க்கிறது?

இதை புரிந்தவர்கள் ஆவாவின் பலத்தை இலகுவாக ஊகிக்கலாம்.

# தோல்விக்கு காரணம் சாள்ஸ் அன்ரனியா?



சொர்ணம்

இறுதி யுத்தத்தில் புலிகள் ஏன் தோல்வியடைந்தார்கள் என்பது இன்றுவரை முக்கியமான பேசுபொருள். சர்வதேச நாடுகளின் கூட்டிணைவு, போர்விதிமுறைகளை மீறி ஆயுதங்களை பயன்படுத்தியது என பலரும் சொன்னாலும் சரியான தகவல்கள் இதுவரை வெளியாகியிருக்கவில்லை. தோல்விக்கான காரணங்களை துல்லியமாக யாரும் அடையாளம் காணவில்லை.

சர்வதேச கூட்டிணைவு தோல்விக்கு காரணமென்றபோதும் அந்த கூட்டிணைவால் எப்படியான பாதகங்கள் நிகழ்ந்ததென்பது பற்றிய விலாவாரியான தகவல்கள் வெளியாகியிருக்கவில்லை. அவை வெளிவராத பட்சத்தில் இறுதியுத்த விவகாரம் சிதம்பர இரகசியத்தை போலாகிவிடும்.

புலிகளின் தோல்விக்கு பிரதானமான காரணங்கள் சில உள்ளன.

1. புலிகளின் கடல்பலம் முடக்கப்பட்டது.
2. கடல்பலம் முடக்கப்பட்டதுடன் இணைந்ததாக ஆயுத இறக்குமதி தடைசெய்யப்பட்டது.
3. புலிகளின் புலனாய்வு கட்டமைப்பை தென்னிலங்கையில் சீர்குலைத்தமை.
4. மரபுவழி யுத்தத்தை விரும்பிய புலிகள் நவீனபோரியல் முறைமைக்கு தங்களை தயாராக்கி கொள்ளாமை.
5. புலிகளின் பிரதேச இரகசியங்களை இலங்கை பாதுகாப்புதுறை விரல்நுனிக்கு கொண்டு வந்தமை.
6. இலங்கை பாதுகாப்புதுறை பற்றிய அலட்சியம்.
7. நீண்ட சமாதானம்



## இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 6



சார்ள்ஸ் அன்ரனி

விடுதலைப்புலிகள் தோல்வியடைந்தமைக்கான நேரடி காரணங்கள் இவை. சர்வதேச கூட்டிணைவு போன்ற மறைமுக காரணங்கள் ஏற்படுத்திய நேரடி விளைவுகள் இவை.

விடுதலைப்புலிகளை பொறுத்தவரையில் மரபுவழி யுத்தத்தையே விரும்பினார்கள். எல்லா அமைப்புக்களும் சிறிய குழுக்களாக இருக்க முறையான இராணுவ கட்டமைப்பை உருவாக்குவதில் பிரபாகரன் ஆர்வமாக இருந்தார். தேவையான ஆயுதம், முறையான பயிற்சி, படையணி கட்டமைப்பு என அவர் முறையான சிந்தனையை கொண்டிருந்தார். அதுதான் புலிகளின் அசாதாரண வெற்றிகளிற்கு காரணமாக இருந்தது.

புலிகளை சிறிய அணியாக எதிராளிகள் கணக்குப்போட்டுக்கொண்டிருக்க, அவர்கள் தமக்குள் நிறைவான கட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். இந்திய இராணுவம் புலிகளை கெரில்லாக்களாக கருதியது. ஆனால் அந்த சமயத்தில் புலிகள் கெரில்லாவும் அல்லாத மரபு இராணுவமும் அல்லாத இடைப்பட்ட வடிவமொன்றை எடுத்துவிட்டார்கள். இந்திய படைகள் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியபோது புலிகள் மரபுஇராணுவத்தை போன்ற பாணியில் எதிர்தாக்குதல் நடத்தியபடி பின்வாங்கினர்.

இதற்கு முன்னரே யாழ்ப்பாண கோட்டையை முற்றுகைக்குள் வைத்திருந்து, வடக்கிலுள்ள படையினரை முகாம்களிற்குள் முடக்கி ஒரு அரை மரபு இராணுவ தகுதியை எட்டிவிட்டனர். 1986 இல் ஒப்ரேசன் லிபரேசன் மூலம் இராணுவம் கைப்பற்றிய நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம் மீதான தாக்குதல் கூட அரை மரபுவழி தாக்குதல்தான்.

பின்னாளில் 1991 இல் ஆனையிறவு பெருந்தளம் மீதான ஆகாய கடல்வெளி சமர்தான் புலிகளின் மரபுவழி இராணுவமாகியதாக ஆய்வாளர்கள் கூறினாலும், அதற்கு முன்னரே மரபுவழி இராணுவ தகுதியை புலிகள் எட்டத் தொடங்கிவிட்டனர்.

மரபுவழி இராணுவமாக புலிகளை மாற்றுவது பிரபாகரனின் இலட்சியமாக இருந்துள்ளது. அதனை திறம்பட செய்துவிட்டார். இந்த சமயத்தில் எழுச்சிபெற்ற தளபதிகளான பால்ராஜ், சொர்ணம், அன்பு, பானு, தீபன் போன்றவர்கள் மூன்றாம் கட்ட ஈழப்போரில் ஜொலித்தார்கள். கெரில்லா அனுபவங்களுடன் உருவான மரபு போருத்தியை புலிகள் சிறப்பாக செயற்படுத்தினார்கள்.

உதாரணமாக சிலவற்றை குறிப்பிடலாம். நள்ளிரவின் பின் முகாமிற்குள் தாக்குதலை நடத்துவது, எதிராளிகளின் நிலையை இரகசியமாக ஊடறுத்து கடந்து பின்பக்கத்தால் தாக்குதலை ஆரம்பிப்பது, இரகசியமான நகர்ந்து ஆயுதக்கிடங்குகளை தகர்ப்பது என புலிகள் புதிதுபுதிதாக உத்திகளை கையாண்டு கொண்டிருந்தார்கள். இலங்கைப் படைகள் மரபுப்படையாக இருந்தாலும் புலிகளின் போருத்திகளை எதிர்கொள்ள முடியாமல் சிரமப்பட்டார்கள்.

ஒவ்வொரு நெருக்கடியான சமயத்திலும் மிகநுணுக்கமான திட்டமிடலுடன் புலிகள் ஒவ்வொரு களமுனையை திறந்தார்கள். ஒப்ரேசன் லிபரேசன் சமயத்தில கரும்புலி தாக்குதல் வடிவத்துடன் நெல்லியடியில் பேரதிர்ச்சி கொடுத்தனர். 1992 இலும் இப்படியொரு சம்பவம் நடந்தது.

1991 இல் புலிகளை மரபுப்படையணியாக உலகம் அங்கீகரித்த சமர் ஆகாய கடல்வெளி சமர் நடந்தது. 53 நாட்கள் நீடித்த பெருஞ்சமர். புலிகள் இப்படியொரு சமரை செய்வார்களென யாரும் எதிர்பார்க்கவில்லை. இலக்கை அடைய முடியாத அந்த சமரில் 573 போராளிகள் மரணமானார்கள். எப்படியும் வெற்றிபெற்றுவிட வேண்டுமென்ற எதிர்பார்ப்பில் அதிகளவான வெடிபொருட்களை புலிகள் செலவிட்டுவிட்டனர். ஆனால் தாக்குதல் வெற்றியளிக்கவில்லை. அமைப்பிற்குள் பெரும் வெடிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. கையிருப்பில் இருந்த வெடிபொருள் அடுத்த நடவடிக்கைக்கு போதுமானதாக இருக்கவில்லை. அப்பொழுது புலிகள் கடல்மார்க்கமாக ஆயுதம் கொண்டுவர ஆரம்பிக்கவில்லை. இராணுவத்தளங்களை தாக்கித்தான் ஆயுதங்களை எடுத்தார்கள். ஆனால், இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடக்கத்தில் கோட்டை, கொக்காவில், கொண்டச்சி முதலான படைமுகாம்களை தாக்கி அழித்துவிட்டனர். அதன்பின் பாதுகாப்பற்ற படைமுகாம்களை வடக்கில் அகற்றிவிட்டனர்.

இந்த சமயத்தில் புலிகள் கட்டைக்காடு மினிமுகாம் மீது தாக்குதல் நடத்தினர். ஆனையிறவு பெருந்தளத்துடன் இணைந்ததாக இருந்த கட்டைக்காடு தளம் ஆயுதக்களஞ்சியமாகவும் இருந்தது.

சொர்ணம் தலைமையில் கட்டைக்காடு மினிமுகாமை தாக்கியழித்து சுமார் 150 வரையான எப்.என்.சி துப்பாக்கிகளையும், பெருமளவான வெடிபொருட்களையும் கைப்பற்றினார்கள். அது புலிகளிற்கு பேருதவியாக இருந்தது. 1996 இல் முல்லைத்தீவு படைத்தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதலும் இன்னொரு பாய்ச்சலே.



ஆனையிறவு தாக்குதலில் பால்ராஜ், குசை

நான்காம் கட்ட ஈழப்போரில் இப்படியான பாய்ச்சல்களை புலிகளால் செய்ய முடியாமல் போய்விட்டது. காரணம், இராணுவத்தை குறைவாக எடைபோட்டதும், மரபுவழி போரில் தம்மை புதுப்பித்து கொள்ளாததுமே.

2002 இல் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கை நீண்டுகொண்டு சென்ற சமயத்தில் இராணுவம் தன்னை போதுமானளவு புதுப்பித்து கொண்டது. இதுவரை புலிகளுடன் போரிட்ட அனுபவத்தில் தன்னை மாற்றியமைத்துக்கொண்டது. முக்கியமாக படையணியை பெருக்கினார்கள். மரபும், கெரில்லாவும் இணைந்த போருத்தியை கையாண்டார்கள். பெரும் ஆளணியை களமிறக்காமல் சிறுசிறு குழுக்களை களமிறக்கினார்கள். புலிகளின் முதுகுக்குப்பின்னால் தாக்கினார்கள். வானிலிருந்து இலக்குகளை அடையாளம் கண்டு, வானிலிருந்தும் தரையிலிருந்தும் துல்லியமாக தாக்கும் வல்லமையை பெற்றதுடன், அடையாளம் காணல், வான் மற்றும் தரை தாக்குதலை சிறப்பாக ஒருங்கிணைத்தார்கள். கடல் நடவடிக்கையில் வான்படையின் துல்லிய தாக்கும் வல்லமையை பயன்படுத்தினார்கள். புலிகள் பாணியில் சிறிய கலன்களை களமிறக்கினார்கள். புலனாய்வு தகவல்களை ஒரேகூரையின் கீழ் கொண்டு வந்து நடவடிக்கை பிரிவுகளை ஒருங்கிணைத்தார்கள். புலிகளின் உலகளாவிய வலையமைப்பை உடைக்க சர்வதேச ஒத்தாசைகளை பெற்றார்கள்.

2006 இல் யுத்தம் ஆரம்பித்தபோது புலிகள் நினைத்ததை போல யுத்தம் இருக்கவில்லை. அவர்களால் இலகுவாக படைகளை எதிர்கொள்ள முடியவில்லை. முக்கியமாக புலிகளால் ஒன்றுதிரள முடியவில்லை. தமது வழக்கமான உத்திகளுடன் போருக்கு சென்ற புலிகள், போர்க்கள நிலவரம் தலைகீழாக மாறியிருந்தபோது சற்று தடுமாறிப் போனார்கள்.

இந்த தடுமாற்றத்திற்கு இன்னொரு காரணமுமிருந்தது. அதற்கு காரணம் பிரபாகரனின் மகன் சார்ள்ஸ் அன்ரனி! (தொடரும்)

## மழை வருது!

பருவமழை ஆரம்பித்துவிட்டது. நாடு முழுவதும் ஓரளவு மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. நீண்ட வறட்சியின் பின்னர் மழை நிலங்களையும், மனங்களையும் குளிர்வித்துள்ளது. முதல் மழை எப்போதும் அப்படித்தான். ஆனால் பருவமழை தொடரும் போது அதனை தாங்கும் விதத்தில் ஏற்பாடுகள் உள்ளதா?

ஒவ்வொரு மழைக்காலத்திலும் இயற்கை அனர்த்தங்கள் நிகழ்வது வழக்கமாகிவிட்டது. அப்போதெல்லாம் கட்சிகளும், மக்கள் பிரதிநிதிகளும் சிறிய உலருணவுப்பொதிகளுடன் சென்று படம்பிடித்து வெளியிடுவது வாடிக்கையாகிவிட்டது. வெள்ளத்தில் மக்கள் விறைத்துப் போயிருக்க சேதமதிப்பீட்டிற்கு அதிகாரிகள் செல்வதுதான் ஒவ்வொருமுறையும் நடப்பது.

இம்முறையும் பருவமழை ஆரம்பித்துள்ளது. பருவமழையை எதிர்கொள்ள அரச இயந்திரம் தன்னை தயார்படுத்தியுள்ளதா? பருவமழை பாதிப்பிலிருந்து மக்களை பாதுகாக்க போதுமான ஏற்பாடுகளை செய்துள்ளதா? மக்கள் பிரதிநிதிகள் இந்த விடயத்தில் போதிய அழுத்தம் கொடுத்தார்களா?

இந்த கேள்வியை ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மழைக்கும் மூழ்கும் பிரதேசங்கள் உள்ளன. மழையென்றாலே மாற்றிடம் தேட வேண்டிய பிரதேசங்கள் உள்ளன. வெள்ளம் தேங்கும் வீதிகள் உள்ளன. அந்த பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு விட்டனவா?

இலங்கை சிறிய பரப்பளவையுடைய நாடு. ஒவ்வொரு நிர்வாக பிரதேசங்களும் பிரமாண்ட பரப்பளவுடையதல்ல. அந்தந்த பிரதேசங்களின் நிர்வாக இயந்திரத்தின் பொறுப்பான பதவிகளில் உள்ளவர்களின் கடமை இது. பருவமழை பாதிப்புக்களிலிருந்து மக்களை பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுத்தோம் என்பதை அவர்கள் ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ள வேண்டும். மழைக்கால பாதிப்புக்களில் பெரும்பாலானவை ஒரேவிதமானவை. தாழ்வான மக்கள் குடியிருப்புக்கள் மூழ்கும். வீடற்றவர்கள் மழையை ஏந்திக்கொள்வார்கள். புனரமைக்கப்படாத கால்வாய்களால் ஓட முடியாமல் வெள்ளம் தேங்கும். போக்குவரத்து பாதிக்கப்படும். தொற்றுநோய் அபாயம். இவைதான் பெரும்பாலான பருவமழைக்கால பிரச்சனைகள். கடந்தமுறை, அதற்கு முதல்முறை, அதற்கு முதல்முறைஞ் இப்படி ஒவ்வொரு மழைக்காலத்திலும் இதே பிரச்சனை, ஒரே இடங்களில் ஏற்படும். அவை சரி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கில் வீடற்றவர்கள் கணிசமானவர்கள். யுத்தம் பாதித்த, அதிகாரிகள் கண்டுகொள்ளாத வன்னியின், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலையின் கிராமங்களில் வீடற்றவர்கள் கணிசமானவர்கள். யாழ்ப்பாணத்திலும் குறிப்பிட்ட தொகையான வீடற்றவர்கள், தாழ்நிலங்களில் குடியிருப்பவர்கள் உள்ளனர். தகர, ஓலை கொட்டகைகளில் வாழும் இவர்களின் குடியிருப்புக்களை வெள்ளம் அடித்து சென்றபின் மீண்டும் மீண்டும் தகரம் வழங்கும் நடைமுறைகளை அரசு கைவிட வேண்டும். இலங்கையில் ஐம்பது வீதமான மக்கள் வீட்டுப்பிரச்சனையுடன் உள்ளதாக அண்மைய புள்ளிவிபரமொன்று சொல்கிறது. வீடற்றவர்கள் என யாருமிருக்க கூடாதென ஒவ்வொரு முறை ஆட்சிக்கு வருபவர்களும் வாக்குறுதியளித்தாலும் ஒவ்வொரு குடிமகனிற்கும் பாதுகாப்பான குடியிருப்பை வழங்க எந்த அரசாங்கத்தாலும் முடியாமல் உள்ளது.

யுத்தம் பாதித்த வடக்கு, கிழக்கில் வீட்டு பிரச்சனை மிகப்பெரியது. இந்த மக்களிற்கான வீட்டு பிரச்சனையை சரி செய்யவே முறையான தேசியகொள்கையொன்று வகுக்கப்படவில்லை. அதனை வடக்கு கிழக்கிலிருந்து பாதிக்கப்பட்ட மக்கள் வாக்களித்து தேர்வு செய்த மக்கள் பிரதிநிதிகளும் அதிகமாக பேசவில்லை.

வெள்ளம் அதிகம் தேங்குவதற்கு இன்னொரு காரணம் சட்டவிரோத கட்டிடங்கள். தாழ்நிலங்கள் நிரவப்பட்டமை. இவற்றிற்கு அனுமதியளிப்பது அரச நிர்வாகம். வெள்ளத்தில் மக்கள் மூழ்கும்போது உலருணவுடன் செல்வதும் அரசநிர்வாகம்தான். கடந்த பருவமழையிலிருந்து பாடம் கற்றதாக எந்த அரச நிர்வாகத்தையும், கட்சியையும் அடையாளம் காண முடியவில்லை. கடந்தமுறை பாதிக்கப்பட்ட அதே இடங்களிற்கு இம்முறையும் அவர்கள் செல்லப் போகிறார்கள். ஒரேவிதமாக பேசப்போகிறார்கள்.

சிறந்த வடிகாலமைப்பையும், குளக்கட்டுமானங்களையும் வரலாற்று காலத்தின் முன்னரே அமைத்தவர்கள் நமது முன்னோர்கள் என்ற பழைய பெருமைகளை இன்னும் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் கையிலிருந்தும் வெள்ளப்பிரச்சனை ஏற்படாத வடிகாலமைப்பை உருவாக்க முடியாத திறனில்லாத நிர்வாக கட்டமைப்பையும், மக்கள் பிரதிநிதிகளையும் வைத்திருக்கிறோம்.

இருக்கும் குளங்களை நிரப்பிக்கொண்டிருக்கிறோம். தாழ்நிலங்களை மண்போட்டு உயர்த்துகிறோம். நீரிற்கு தங்க இடமுமில்லை. ஓட வழியுமில்லை.

ஒவ்வொரு மழைக்கும் மூழ்குபவர்கள் இம்முறை மூழ்கவில்லையெனில் உங்கள் பகுதி அரச நிர்வாகத்தில் உள்ளவர்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் பாராட்டுங்கள். இம்முறையும் மூழ்குகிறீர்களா? அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகளின் அசமந்தமும், திட்டமிடல் குறைபாடும்தான் ஒரே காரணம்.

ஆறுதல் வார்த்தைகளுடனும், நிவாரணப்பொருட்களுடனும் வருபவர்களிடம், தற்காலிக தீர்வுகளை விட நிரந்தர தீர்வுதான் உங்களின் எதிர்பார்ப்பென்பதை வலியுறுத்துங்கள்.

தீபம்
197, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633, 0214927561

ஆசிரியர்பீடம் : editor@deepam.lk ☎ 0214927562
சந்தா : subs@deepam.lk ☎ 0768255566
விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567
செய்திகளுக்கு : news@deepamnews.com

பத்திரிகை, இணையத்தளத்தில் செய்தியாளர்களாக செயற்பட ஆர்வமுள்ளவர்களிற்கு களங்கள் விரிந்துள்ளன.. செய்தித்துறை ஆர்வம், புத்தாக்க திறனுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளுங்கள்.
0768255562, editor@deepam.lk

# சொன்னார்கள்



**விமல் வீரவன்ச – எம்.பி, கூட்டு எதிரணி**

தற்போது கோட் சூட் அணிந்து கொள்ளையடிக்கும் யுகம் தோன்றியுள்ளது. மிஸ்டர் பீன் என்று சொல்லப்பட்டவர் மிஸ்டர் டேர்டியாக மாறியுள்ளார்.

பொருளாதாரம் ஒருபுறத்தில் சீரழியும் போது மறுபுறத்தில் வடக்கில் என்றுமில்லாதவாறு அணைந்து கிடந்த தீ ஜனவரி 8 க்கு பிறகு மீளவும் எரியத் தொடங்கியுள்ளது. என்றுமில்லாத வகையில் ஆவா போன்ற குழுக்கள் உருவாகியுள்ளன. கொலம்பியா போன்று கொழும்பில் பாதாள குழுக்களின் செயற்பாடு மேலோங்கியுள்ளது.



**சுஜீவ சேனசிங்க – இராஜாங்க அமைச்சர்**

கோப் குழு என்பது ஊடகங்கள் முன்னிலையில் கூட்டங்களை நடத்துவதில்லை. இது தனிப்பட்ட முறையில் இரகசியமாக இடம் பெறும் கூட்டமாகும். அதன் இரகசியத்தன்மை பேணப்படவேண்டும். இதில் நடக்கும் விடயங்களை வெளியில் வந்து ஊடகங்களுக்கு கூறமுடியாது. மாங் காய் மரத்தின் கீழ் இருந்து கொண்டு விசாரிப்பது போல் கோப் குழுவில் செயற்பட முடியாது.



**நாமல் ராஜபக்ச – எம்.பி, கூட்டு எதிரணி**

நாட்டில் பெண்கள் மது அருந்துவது அதிகரித்துள்ளதாக ஜனாதிபதி அண்மையில் கவலைப்பட்டிருந்தார். அவரது கவலை நியாயமானது. அண்மையில் பாடசாலைக்குள் வைத்து பெண்பிள்ளைகள் மது அருந்திய சம்பவம் நடந்தது. ஆனால் நிதியமைச்சர் என்ன செய்கிறார்? மதுபான தொழிற்சாலைகளிற்கு இறக்குமதி வரிவிலக்கு செய்துள்ளார்.


தீபம் வாரஇதழில் முழுநேர தட்டச்சாளர் (பெண்கள்) தேவை. உடன் தொடர்புகொள்ளுங்கள். அலுவலக நேரங்களில் தொடர்புகொள்ளவும். 0768255562.

எந்த சீரியஸான விடயத்தையும் சிக்கலில்லாமல் நகைச்சுவையாக கிறுக்க ஆர்வமாக இருக்கிறீர்களா? அரசியல், சமூகம், ஆன்மீகம் எந்த எல்லையையும் தொடலாம். உடனே வரைய ஆரம்பியுங்கள். தரமானவை தீபம் வாரஇதழிலும், தீபம் இணையத்தளத்திலும் வெளியாகும். உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி
editor@deepam.lk

எஸ்.நிதர்ஷன்




# சுட்டது யார்? ஏன் சுட்டார்கள்?





யாழ்ப்பாண பல்கலைகழகத்தின் இரண்டு மாணவர்கள் பொலிசாரின் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டது முழு இலங்கையையும் கொந்தளிக்க வைத்துள்ளது. தமிழர்கள் கொல்லப்பட்டபோது தெற்கில் அதிக அதிர்வலைகள் ஏற்படாமலிருந்த நிலைமாறி, இம்முறை தெற்கில் பரவலான போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. தெற்கு பல்கலைகழகங்கள், சிவில் அமைப்புக்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டன. கடந்த வாரம் இலங்கையின் பிரதான பேசுபொருள் மாணவர் கொலைதான்.

மாணவர்கள் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில்தான் கொல்லப்பட்டனர் என்பது உறுதியாகிவிட்டது. பிரேத பரிசோதனை அறிக்கையில் சுலக்சன் என்ற மாணவனின் விலா பகுதியை ஊடறுத்த ரவை நெஞ்சை பிளந்து சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அரச உயர்மட்ட தலைவர்கள் பலர் இதற்காக வருத்தமும் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் வடக்கில் பொலிசாரிற்கு எதிரான கொந்தளிப்பை தோற்றுவித்துவிட்டது. சம்பவம் நடந்த ஒருவாரத்திற்கு யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் போக்குவரத்து பொலிசார்கூட கடமையில் இருக்கவில்லை.

நள்ளிரவில் நடந்த இந்த கொலையை ஆரம்பத்தில் பொலிசார் மறைக்கவே முற்பட்டுள்ளனர். விபத்தில் மரணமானார்கள் என்று கூறித்தான் அவர்களின் சடலங்களை வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். அதனால் சம்பவதினம் மதியம் வரை உறுதியான தகவல் எதுவும் வெளியாகியிருக்கவில்லை.

எனினும், துப்பாக்கிச்சூட்டு சத்தம் ஏற்படுத்திய சந்தேகத்தால் மாணவர்கள் வைத்தியசாலையில் குழுமி உண்மையறிவதில் விடாப்பிடியாக நின்ற பின்னரே தகவல் வெளியாகியுள்ளது. 'மதியம் வரை வைத்தியசாலை தரப்பும் உண்மையை வெளியிடவில்லை. தகவலை மறைக்குமாறு வைத்தியர்களுடன் பொலிசார் பேரம் பேசினார்கள்' என்று மாணவர்கள் வெளிப்படையான குற்றச்சாட்டை வைத்தனர்.

குற்றத்தை மறைக்க முயன்றது பெருங்குற்றமென்பதை பொலிஸ்மா அதிபரும் பகிரங்கமாக கூறியுள்ளார். பொலிசார் சுட்டதில் சந்தேகம் இப்பொழுதில்லை. இனி ஆராயப்பட வேண்டியது ஏன் சுட்டார்கள் என்பதையே. இந்த கொலை திட்டமிடப்பட்ட ஒன்றா? மாணவர்கள் முன்கூட்டியே தேர்வு செய்யப்பட்ட இலக்குகளா? பொலிசார் மறித்தார்களா? எப்படியான சூழலில் துப்பாக்கிச்சூடு நிகழ்த்தப்பட்டது? எத்தனை ரவையை சுட்டார்கள்?

இரண்டு மாணவர்கள் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயத்தில் நடந்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றைய மணவரின் மரணம் தொடர்பான சந்தேகங்களிற்கும் விடைகிடைப்பதே தேவையற்ற சர்ச்சைகளை இல்லாமல் செய்ய ஒரேவழி.

ஆனால் இங்கே எழக்கூடிய கேள்வி பொலிஸார் தங்கள் மீது தவறில்லை எனில் துப்பாக்கிப் பிரயோகத்தை ஏன் மறைத்தார்கள்? தாங்கள் மறித்தும் மாணவர்கள் நிற்காததால் சுட்டதாக கூறுகிறார்கள். அப்பிரதேசம் வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகமான பகுதி. கஞ்சாக் கடத்தல் அல்லது வாள்வெட்டு கும்பலைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களோ என்ற எண்ணத்தில் தான் பொலிஸார் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்தது என்று பொலிஸ் தரப்பிலிருந்து நியாயம் கற்பிக்கப்படுகின்றது.

அந்த சமயத்தில் மாணவர்கள் எவ்வாறு நடந்த கொண்டிருந்தார்கள் என்பது தெரியாது. இருந்தும் இன்றைக்கு பொலிஸார் கூறுவது போன்று அந்த மாணவர்கள் குற்றச் செயல்களில் தொடர்புபட்டிருந்தாலும் மாணவர்களை நோக்கி அவர்களது உயிர் போகக் கூடிய அளவிற்கு துப்பாக்கியால் சுடுவதற்கான உத்தரவை வழங்கியது யார்? ஏன் அவ்வாறான உத்தரவை வழங்கினார்கள்? குற்றவாளிகளை பிடிப்பதில் தீவிரமாக இருந்தார்கள் என வைத்தாலும், யாழில் நடக்கும் கஞ்சாக்கடத்தல்களில் அனேக குற்றவாளிகள் தப்பிச்சென்றுவிட்டதாக பொலிசார் கூறுகிறார்கள். அவர்களில் ஒருவர் மீதுகூட இப்படியான தாக்குதல் நடக்கவில்லையே!

இந்த தாக்குதல் திட்டமிட்ட ஒன்றா என்ற சந்தேகமும் மக்களிடம் எழாமல் இல்லை. சம்பவத்தை பொலிசார் மறைக்க முயன்றது பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. இதில் முக்கியமானது, இந்த சம்பவத்தை மறைக்க இவ்வளவு முயற்சி செய்தவர்கள், இதற்கு முன்னர் எத்தனை சம்பவங்களை மறைத்துள்ளார்கள் என்பதே. கடந்தகாலத்தில் விபத்தாக சித்தரிக்கப்பட்ட எத்தனை மரணங்களின் பின்னணியில் ஆராயப்பட வேண்டிய விடயங்கள் உள்ளன?

சம்பவம் இடம்பெற்ற இடத்தில்

**சுகாஷ்**
சட்டத்தரணி

பொலிஸாருடைய அதிகாரத் துஷ்பிரயோகமாகவே இச் சம்பவத்தைப் பார்க்கின்றேன். இதில மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. பொலிஸார் தமது அதிகார எல்லையைத் தாண்டி, சட்டத்தை மீறி அதிகாரத் துஷ்பிரயோகத்தில் மனிதாபிமானமற்ற வகையில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இதிலும் மாற்றுக் கருத்திற்கிடமில்லை.

மாணவர்களை மறித்ததாகவும், அவர்கள் நிற்காமல் சென்றதால்; சுட்டதாகவும் பொலிஸார் இப்போது காரணம் சொல்லியிருக்கிறார்கள். இது சட்டத்தை தெரிந்த பொலிஸ் கதைக்கிற விசயமில்லை. இதிலிருந்து இலங்கையின் பொலிஸ்துறை எவ்வளவு தூரம் சட்ட அறிவில்லாமல் செயற்படுகிறதென்பது தெளிவாகிறது. சட்டத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது பொலிஸார் எவ்வாறு ஒரு நபரைக் கைது செய்ய வேண்டும் என்று. ஒரு நபர் பொலிஸாருடைய கட்டளைக்கு அடிபணிய மறுத்தால் முதலாவது அவர்களைக் கலைத்துப் பிடிக்க முயற்சிக்கலாம். அதனால்தான் 1000உஉ மோட்டார் சைக்கில் பாவிக்கும் உரிமை பொலீஸாருக்கு மட்டும் தான் இருக்கிறது. கலைத்துப் பிடிக்க முடியாத சந்தர்ப்பத்தில் காலுக்குக் கீழ் சுட்டிருக்கலாம். அவர்களைப் பாதுகாப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்காமல் எடுத்த எடுப்பிலே கண்மூடித்தனமாக சுட்டிருக்கிறார்கள்.

இதில் என்னுடைய கேள்வி என்னவென்றால் இதேமாதிரியொரு சம்பவம் தென்னிலங்கையில் நடந்தால் பொலிஸார் சுடுவார்களா? இப்ப இரண்டு விசயம் இருக்கிறது. ஒன்று, பொலிஸார் சட்டத்தை அப்பட்டமாக மீறியிருக்கின்றனர். இரண்டாவது, தமிழ் இளைஞர்களுடைய உயிர்தான் என்று மலினமான போக்கில் எள்ளிநகையாடியிருக்கிறார்கள். ஆகவே சட்டத்தரணி என்ற அடிப்படையில் இதனையொரு சட்ட மீறலாகவே பார்க்கின்ற நான், ஒரு பொதுமகன் என்ற அடிப்படையில் மனிதாபிமானமற்ற வெறிச் செயலாகப் பார்க்கின்றேன்.



ஆறுநாட்களின் பின் சம்பவ இடத்தில் மீட்கப்பட்ட ரவை வெற்றுக்கோது

இருக்கின்றவர்கள் காலையிலையே வழங்கிய தகவல்களின் பிரகாரம் அந்தப் பகுதியில் இரவு துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றதாகவும் அங்கே அழுகுரல் சத்தங்கள் கேட்டதாகவும் அந்தப் பகுதியில் இரவும் அதிகாலை மற்றும் காலை எனப் பெருமளவிலான பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்திருந்தார்கள். இதனைக் கொண்டே துப்பாக்கிச் சூட்டின் மூலம் இடம்பற்ற கொலை என்பது தெரிய வந்திருந்தது. ஆனாலும் பொலிஸார் இதனை மிகச் சாதூரியமாக மூடி மறைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். மாணவர்களுடைய மரணம் விபத்துப் போன்றெ சித்தரிக்கப்பட்டு மாலை நான்கு மணிவரை தகவல்கள் பரப்பப்பட்டு வந்தன.

அதனைவிட அந்தப் பகுதியில் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றும் அங்கு துப்பாக்கிச் சூடு இடம்பெற்றிருந்ததற்கான தடயங்கள் அழிக்கும் முயற்சிகளிலும் பொலிஸார் ஈடுபட்டிருந்திருக்கின்றார்கள். அதனை கண்கண்ட சாட்சிகள் உறுதி செய்கின்றன.

மாணவர் கொலையை தொடர்ந்து நடக்கும் சம்பவங்களின் பின்னணி குறித்த சந்தேகங்களும் எழுப்பப்படுகின்றன. சுன்னாகத்தில் நடந்த வாள்வெட்டு, அதற்கு ஆவா என்ற குழு உரிமை கோரியது, ஆங்காங்கு நடக்கும் குழப்பங்கள் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. வித்தியா கொலைக்கு மக்கள் கொதித்தெழுந்தபோது, 'இனம்தெரியாத' குழுவொன்று மக்களுடன் கலந்து கொந்தளிப்பை வன்முறையாக்கிய வரலாறுண்டு. இம்முறை இந்த விடயத்தில் அனைவரும் எச்சரிக்கையாக இருந்தனர். எனினும், கிளிநொச்சியில்தான் சிறிய அசம்பாவிதம் நடந்துள்ளது.


குற்ற பிரதேசத்திற்கு அழைத்துவரப்படும் சந்தேகநபர்

அந்த இடத்தில் பொலிஸாரினால் மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு வெற்று ரவைகளை பொலிஸார் அகற்றி தடயங்களை மறைக்கும் முயற்சியை மேற்கொண்டிருக் கின்றார்கள். குற்றம் இழைக்கப்பட்டதைத் தொடர்ந்து தடயங்களை அழிப்பதற்கான முயற்சியிலேயே பொலிஸார் பெரிதும் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்பது தெளிவா கின்றது. அவ்வாறு தடயங்கள் மறைக்கப்பட்ட பிரதேசத்தைத்தான் நீதிவான் பார்க்க முடிந்தது. மொத்தத்திலே இதை பொலிஸாரின் படுகொலை என்று தான் கூற வேண்டும்.

உயிரிழந்த மாணவர்களில் ஒருவர்; சூடுபட்டு உயிரிழந்தார் எனும் தகவலை விட அவரோடு கூடச் சென்ற மாணவன் எவ்வாறு உயிரிழந்தார் என்ற கேள்வி மக்கள் மத்தியில் மேலெழுந்து நிற்கிறது. மற்ற மாணவன் விழுந்து விபத்தின் மூலமாக இறந்ததாக கூறப்பட்டாலும், துப்பாக்கியால் சுடப்பட்டதை அவர் கண்டுவிட்டார் என்பதற்காக அடித்துக்கொல்லப்பட்டார் என்ற கருத்தும் பரவியுள்ளது. சிறிதரன் பாராளுமன்றத்தில்கூட இதனை பிரதி பலித்துள்ளார்.

அந்தவகையில் இந்த மாணவன் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கலாமா என்ற கோணத்தில் விசாரணைகள் மேற்கொள் ளப்பட வேண்டியது அவசியம். ஏனெனில், துப்பாக்கிச்சூட்டிற்கான தடயத்தை காலையில் மறைத்த பொலிசார், கண்கண்ட சாட்சியை விட்டுவைத்திருக்க மாட்டார்கள் என்ற கருத்தும் உள்ளது. இந்த சந்தேகங் களிற்கெல்லாம் முறையான நீதி விசாரணைதான் பதில் சொல்லும்.

எனினும், கடந்த 26ம் திகதி கைது செய்யப்பட்ட பொலிசாரை சம்பவ இடத் திற்கு அழைத்து சென்றபோது அவர்கள் நின்று சுட்ட இடம், மாணவர்கள் விழுந்த இடங்களை அடையாளம் காட்டியுள்ளனர். அங்கு சோதனை செய்தபோது ரி.56 துப்பாக் கியின் வெற்றுத்தோட்டாவும் மீட்கப்பட் டுள்ளது.

மாணவர் விவகாரத்தை பொலிசாரும், அரசும் இலகுவாக கடந்து செல்ல முடியாத அழுத்தத்தை மக்களின் இயல்பான தன்னெழுச்சி ஏற்படுத்தியுள்ளது. நாடு முழுவதும் தொடர்ச்சியான போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. பாராளுமன்றத்திலும் விவகாரம் எதிரொலித்தது. பிரதமர், பொலிஸ்மா அதிபர் வருத்தம் தெரிவித்தனர். ஆனால் இது தீர்வல்ல. இந்த ஒற்றுமை மாணவர் படுகொலைக்கு நீதி கிடைக்கும் வரை தொடர வேண்டும். தமிழர்கள் கிள்ளுக்கீரைகள் அல்லவென்பதை ஆயுதம் வைத்துள்ள ஒவ்வொரு சிங்கள பாதுகாப்பு துறை வீரனிற்கும் நமது ஒற்றுமைதான் புரியவைக்கும். ●

வித்தியா கொலை வழக்கின் ஆரம்பத்தில் ஒவ்வொரு விசாரணை அமர்வையும் ஊடகங்கள் போட்டிபோட்டு கொண்டு செய்தி சேகரித்தன. வித்தியாவிற்காக ஆஜராக நிறைய சட்டத்தரணிகள் வரிசை யில் நின்றனர். பெண்கள் அமைப்புக்கள் அதிக அக்கறையுடன் செயற்பட்டார்கள். நாளடைவில் இது மாறி, வித்தியா கொலைவழக்கு மற்றைய வழக்குகளை போலவே ஆகிவிட்டது. சட்டத்தரணிகள், பெண்கள் அமைப்புக்கள், ஊடகவிய லாளர்கள் அதை மறக்க ஆரம்பித்துவிட்டனர். இந்த வழக்கிலும் அப்படி நடக்காமல் இருக்க வேண்டும். பல்கலைகழக மாணவர்கள் இதில் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும். பல்கலைகழக சட்டத்துறை மாணவர்களிற்கு நீதி கிடைக்க தன்னாலான அனைத்தையும் செய்ய வேண்டும்.



# கசக்கும் வெளிநாட்டுப் பணம்

## கண்ணீர் துளிகளுடன் கட்டாரிலிருந்து ஒரு கடிதம்

அஹமட்

வெளிநாட்டுக்கு ஒருவன் தொழில்தேடி செல்கிறான் என்றால் ஏதோ ஒரு பொறுப்போடுதான் செல்வான். வெளிநாட்டுக்கு Free Visa வில் வாறவர்களில் ஒரு சிலபேர் சொந்தக்காசில் வீசா டிக்கட் எடுத்துக்கு வருவார்கள். இன்னும் ஒரு சிலர் அதற்கும் காசு இல்லாமல் கடன வாங்கி வீசா போட்டு டிக்கட் எடுத்து வருகிறார்கள்.

இங்க வந்து றூம் செலவு, சாப்பாட்டு செலவு, டெக்ஸியில போற வாற செலவு, போனுக்கு கார்ட் போடுற செலவு இப்பிடி செலவாத்தான் இருக்கும். இங்க தொழில் தேடி வாறவர்களுக்கு சொந்தக்காரர்கள் யாராலும் உதவி வழங்கப்படும். கூட்டாளிமார் இருந்தால் உதவி செய்வாங்க. இதுதான் வெளிநாடு.

இப்பிடி கஷ்டப்பட்டு வந்து தொழில் தேடினா ஒரு சிலருக்கு உடனே தொழில் கிடச்சிரும். ஒருசிலருக்கு நாலைந்து மாசத்துக்கு பிறகு தொழில் கிடைக்கும். இன்னம் ஒருசிலர் தொழில் கிடைக்காமலே நாட்டுக்கு திரும்பி போயிடுவாங்க.

ஆராலயும் ஒண்டும் செய்ய ஏலாது. நம்மிட டைம் வரும் வரைக்கும் பொறுமையா காத்துக்கு இருக்கணும். விசயத்துக்கு வாறன். இப்பிடி கஷ்டப்பட்டு ஒருத்தன் தொழில் எடுத்தா அவன் குறைந்தது ஒரு வருசத்துக்கு உழைக்கிற காசு குடும்ப செலவையும் பார்க்கவும், கடனை அடைக்கிறத்துக்குமே போயிரும்.

கடன் மட்டும் இல்ல இங்க சிக்கல். ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு பிரச்சினை யோட இங்கவந்திருப்பான். என்னைப்பொறுத்த வரைக்கும் பெரும்பாலும் இங்க இருக்கிற வனுகள் நிறைய கஷ்டத்த அனுபவிச்சிருப்பானுகள்.

அதால நாட்டில இருந்து ஆராலும் சொந்தக்காறங்களோ கூட்டாளிமாரோ அவசரத்துக்கு காசு கேட்டா காச வைச்சுக் கொண்டு இல்ல எண்டு செல்ல மாட்டா னுகள். நாட்டில இருக்கிறவங்கட எண்ணம் எப்பிடி எண்டா ரெண்டு மூணு வருசமா வெளிநாட்டில இருக்கான். எப்ப காசு கேட்டாலும் இல்ல எண்டு செல்றான் இது ஒரு பெரிய குற்றச்சாட்டு.

சாதாரணமாக இங்க இருக்கிறவன் அடுத்த மாசம் எடுக்கப்போற சம்பளத்துக்கு ஏற்கனவே பஜ்ஜட் பண்ணி வெச்சிருப்பான். இந்த சம்பளத்த எடுத்து இப்படி இப்பிடித்தான் செய்யணும் எண்டு. அவன் பத்தாயிரம் எடுக்கிறவன் எண்டாலும் ஒண்டும் இல்ல வெறும் ஆயிரம் எடுக்கிறவன் எண்டாலும் ஒண்டுமில்ல.

நாட்டில இருந்து ஒருத்தர் காசு கேக்கார் எண்டா அவருக்கு எண்ணம் நாம மட்டுந் தான் கேக்கம் எண்டு. ஆனா உண்மை அதில்ல. நம்மளப் பொறுத்த வரைக்கும் தேவை இருக்கிற ஆக்கள்ள அவரும் ஒருத்தர். ஆனா நமக்கிட்ட ஒருத்தர் மட்டும் கேக்க மாட்டாங்க. அது பல பேரா இருக்கலாம்.

முதல் காசு கேட்டவருக்கு அடுத்த சம்பளத் தில கொடுக்க பஜ்ஜட் பண்ணி வெச்சிருந்தா. அதுக்கு பொறகு வேறொருத்தரும் கேட்டா நமக்கு இப்போ காசு இல்ல எண்டு செல்ற சங்கடமான நிலை வரும்.

ஆனாஎல்லாரும்புரிஞ்சிக்கணும்.நாட்டில இருந்து பாக்கிற கோணம் வேற. இங்க ஒவ்வொருத்தனும் வாழ்ற கோணம் வேற.

பெரும்பாலும் இங்க இருக்கிறவங்க சம்பளத்த எடுத்த உடனே அவங்கட சாப் பாட்டு செலவுக்குக்கும், றூம் வாடகைக்கும் காச எடுத்திட்டு மிச்சத்த நாட்டுக்கு அனுப்பிருவாங்க. அதுதான் உண்மை.

பணக்கஷ்டத்த அனுபவிச்சவன் இன்னொருத்தன் கஷ்டப்படும்போது குடுத்து உதவணும் எண்டுதான் நெனப்பான். ஒரு சிலருக்கு அது சாத்தியப்படும். சிலருக்கு சந்தர்ப்ப சூழ்நிலை தடுத்திரும்.

ஆனா வெளியால இருந்து பாக்கிறவங் களுக்கு அது புரியாது இங்க இருக்கிறவங்க ஓரளவுக்கு புரிஞ்சி கொண்டாலும் இந்த நிலமய நாட்டில இருக்கிறவங்க புரிஞ்சிக்கிறது கடும் கஷ்டம். இன்னைக்கு வரைக்கும் எத்தினபேர் அவங்கட வெளிநாட்டுல இருக்கிற நண்பர்கள்,சொந்தங்கள தப்பா புரிஞ்சிட்டு இருக்காங்க.

நான் சொன்னது எல்லாம் வாசிக்கிற வங்களுக்கு ஒரு கதையா மட்டும் இருக்கும். ஆனா இங்க வெளிநாட்டில இருக்கிறவங் களுக்கு கட்டாயம்

அவங்கட உணர்வாக இருக்கும். ●



# கூட்டமைப்பின் பிடி நழுவுகிறதா?

நம்மாழ்வார்

யாழ்ப்பாணத்தில் பொலிசாரால் மாணவர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டதன் பின்னர் பரவிய கொந்தளிப்பு வடக்கில் பேரலையை தோற்றுவித்துள்ளது. கொந்தளிப்பு எதிர்ப்பு நடவடிக்கையாக ஓரளவு எழுச்சியடைந்த போதும், அது ஆபத்தான கட்டத்தை எட்டவில்லை. வித்தியா கொலையை தொடர்ந்த வன்முறையை போலசெயல்பூர்வமாக அல்லா விட்டாலும் உணர்வுபூர்வமாக மக்கள் எதிர்ப்புணர்வை கணிசமாக தேக்கிவைத்துள்ளனர். கடந்த ஓராண்டில் மக்கள் தேக்கிவைக்கும் எதிர்ப்புணர்வின்கொள்ளவு அதிகரித்து சென்றுகொண்டிருக்கிறது. இது நல்லிணக்க செயற்பாடுகளிற்கு உவப்பானதல்ல.

வித்தியா கொலையில் தொடங்கி இப்போது மாணவர் படுகொலை வரையான சம்பவங்களிற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் நடந்துவிட்டன. இவற்றில் அரசியல் செல்வாக்கிருக்கவில்லை. அண்மைக்கால தமிழர் வரலாற்றில் இது புதிய அனுபவம்.

வித்தியா கொலையில் வடக்கே பற்றியெரிந்தது. அந்த தீயை மூட்டவோ, அணைக்கவோ எந்த தமிழ்கட்சியாலும் முடியவில்லை.

அதன்பின்னர் எழுக தமிழ் நடந்தது. அதிலும் கணிசமான மக்கள் திரண்டனர். வடக்கில் அண்மைக்காலத்தில் நடந்த பிரமாண்டமான எழுச்சிபேரணி. பத்தாயிரம் வரையானவர்கள் கலந்து கொண்டிருந்தனர். அதுவும் முற்றிலும் சிவில் சமூக ஒழுங்கமைப்பு. அதில் அரசியல்கட்சிகளும் கலந்து கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த எழுச்சியில் தமிழ்தேசியகூட்டமைப்பு என்ற அடையாளம் இருக்கவில்லை. கூட்டமைப்பின் பங்காளியான இரண்டு கட்சியும், தமிழ்தேசிய மக்கள் முன்னணி போன்றவை இணைந்திருந்தன.

இப்பொழுது மாணவர் கொலையை கண்டித்து நடந்த போராட்டங்களிலும் அரசியல்கட்சிகளின் சொல்வாக்கில்லை.

**விடுதலைப்புலிகள் அரங்கிலிருந்து அகற்றப்பட்ட பின்னர் தலைமைப்பாத்திரம் ஏற்ற தமிழ்தேசிய கூட்டமைப்பு எல்லாதரப்பையும் வென்றெடுக்கும் பேராளுமை மிக்க சக்தியாக தன்னை வெளிப்படுத்தியிருக்கவில்லை. தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு வெளியில் இருப்பவர்களையும் தலைமைதாங்குவதே பேராளுமை என்று பேசிக்கொண்டிருக்க, கூட்டமைப்பிற்குள் இருக்கும் கட்சிகளே இப்போது திசைக் கொன்றாக இருக்கிறார்கள்**

இதன்படி பார்த்தால் வடக்கில் இறுதியாக நடந்த மூன்று பெரும் எழுச்சிகளிலும் அரசியல்கட்சிகளில் செல்வாக்கில்லை. அவர்கள் அந்த எழுச்சியை ஏற்படுத்தவில்லை. எழுச்சியுடன் சேர்ந்து பயணித்த சில அரசியல்தரப்புக்கள் உள்ளனதான். ஆனால், அவர்களால் இந்த எழுச்சி ஏற்படுத்தப்பட்டதல்ல.

கொல்லப்பட்ட மாணவர்களின் மரணச் சடங்குகளில் உரையாற்ற முனைந்த அரசியல் தலைவர்களை மாணவர்கள் அனுமதிக்கவில்லை. கல்யாண வீடானால் மணமகனாகவும், மரணவீடெனில் பிணமாகவும் இருந்து பழக்கப்பட்ட பல மக்கள் பிரதிநிதிகளிற்கு இது அங்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியிருந்தன.

மாணவர் கொலையை கண்டித்து நடந்த ஹர்த்தாலிற்கு தமிழ்தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகள், சமூகநீதிக்கான ஜனநாயக கட்சி (முன்னைய ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா அணி) என்பன இணைந்திருந்தன. இந்த இடத்தில் சுட்டிக்காட்டத்தக்க ஒரு விடயம் இது. இந்த ஹர்த்தாலிற்கான அழைப்பிற்கு முன்னர் ரெலோ எல்லா கட்சிகளையும் ஆலோசனை கூட்டத்திற்கு அழைத்திருந்தது. தமிழரசுக்கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், தமிழ்தேசிய மக்கள் முன்னணி, சமூக நீதிக்கான ஜனநாயக கட்சி என்பவற்றிற்கு அழைப்பு விடுத்திருந்தது. சமூகநீதிக்கான ஜனநாயக கட்சி முன்னைய ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் ஒரு அங்கம். தமிழ்தேசிய கூட்டமைப்பு மற்ற கட்சிகளையும் இணைத்து செல்லும் ஒரு அரசியல் பாரம்பரியத்தை உருவாக்கியிருக்கவில்லை. சுதந்திரத்தின் பின் தமிழ்தேசிய அரசியல்கூட்டமைத்ததியாகி.துரோகி அரசியலைத்தான் முன்னெடுத்தது. எனினும், ரெலோ என்ற தனிக்கட்சி ஆலோசனைக் கூட்டத்தை கூட்டியதால் தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு வெளியில் உள்ள கட்சிகளையும் அழைத்தார்கள். ஆனால் இந்த ஆலோசனைக்கூட்டத்திற்கு கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லை. அந்த கட்சியின் முதிர்ச்சியின்மையை இப்படியான புறக்கணிப்புக்கள் வெளிப்படுத்துகின்றன.

ஆலோசனை கூட்டத்தின் பின்னர் அவர்கள் ஹர்த்தாலை அறிவித்தார்கள். உண்மையை சொன்னால், இந்த சமயத்தில் கட்சிகள் செயற்பட்டது கொந்தளிப்பின் அலையில் நீந்திச்சென்றதே. இந்த கட்சிகள் அறிவிக்காமல் இருந்திருந்தால் மாணவர்களோ, சிவில் அமைப்புக்களோ ஹர்த்தாலிற்கு அழைப்பு விட்டிருப்பார்கள்.

இந்த நிகழ்வுகளின் மூலம் தெளிவாவது, வடக்கின் இறுதியான மூன்று பேரெழுச்சியும் பெரிதும் மக்கள் மயப்பட்டது. அரசியல்கட்சிகள் அதில் பார்வையாளர்கள். 1980களின் பின்னரான தமிழர் அரசியலில் நடந்த எல்லா பெரிய எழுச்சிகளும் ஹர்த்தாலும் அந்த சமயத்தில் கோலோச்சிய அரசியல் சக்திகள் அல்லது தலைமைகளின் பின்னணியில்தான் நடந்தன. ஆயுத இயக்கங்கள் கூட்டாகவும், பின்னர் புலிகள் தனியாகவும் இவற்றை தலைமை தாங்கினார்கள். பின்னாளில் தமிழ்தேசிய கூட்டமைப்பும் ஓரிரண்டு எழுச்சிகளை தலைமை தாங்கியது.

புலிகளின் காலத்தில் பொங்குதமிழ் நிகழ்வொன்றுதான் மாணவர்களால் நிகழ்த்தப்பட்ட பேரெழுச்சி. புலிகளின் அரசியல் அதில் செல்வாக்கு செலுத்தினாலும், உருவாக்கத்தில் புலிகள் தலையிடவில்லை.

ஆனால் இப்பொழுது நிலைமை மாறியுள்ளது. தொடராக மூன்று நிகழ்வுகள் சமகால தமிழ்தேசிய அரசியல் தலைமைக்கு அப்பால் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. வித்தியா விவகாரத்தை விட்டு விடலாம். மற்றைய இரண்டும் தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைமையுடன் தொடர்புடையவை.

விடுதலைப்புலிகள் அரங்கிலிருந்து அகற்றப்பட்ட பின்னர் தலைமைப்பாத்திரம் ஏற்ற தமிழ்தேசிய கூட்டமைப்பு எல்லா தரப்பையும் வென்றெடுக்கும் பேராளுமை மிக்க சக்தியாக தன்னை வெளிப்படுத்தியிருக்கவில்லை. தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு வெளியில் இருப்பவர்களையும் தலைமைதாங்குவதே பேராளுமை என்று பேசிக்கொண்டிருக்க, கூட்டமைப்பிற்குள் இருக்கும் கட்சிகளே இப்போது திசைக்கொன்றாக இருக்கிறார்கள் என்பதே நிலவரம்.

தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைமைத்துவமில்லாமலே பேரெழுச்சிகள் நடக்கின்றன. கூட்டமைப்பின் பங்காளிகள் சிதறிச்செல்கிறார்கள் என்பவையெல்லாம் ஒன்றுடன் ஒன்று நெருக்கமானவை.

அரசுடன் விட்டுக்கொடுப்புடன் நடந்து, நல்லிணக்க செயற்பாட்டை முன்னகர்த்தும் போது இப்படியான எதிர்ப்பும், அதிருப்தியும் எழும்தான். அதற்கு காரணமும் உள்ளது.

யுத்தம் முடிந்ததன் பின்னர் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டிய நல்லிணக்க செயற்பாடுகள் ஆறு வருடங்கள் கழித்துதான் ஆரம்பிக்கப்பட்டன. இடைப்பட்ட காலத்தில் யுத்தம் இருக்கவில்லையே தவிர, இனங்களிற்கிடையிலான கசப்புணர்வு அதிகரிக்கப்பட்டுக் கொண்டே சென்றது. மகிந்த ராஜபக்சவின் சர்வாதிகார ஆட்சிக் கொப்பான ஆட்சி இராணுவபலத்தின் மூலம் இலங்கையை ஒன்றுபடுத்தலாமென நினைத்தது. ஆனால், மகிந்தவின் ஆட்சி நீடித்த ஒவ்வொரு நாளும் இலங்கை அதிகமதிகம் பிளவுபட்டுக்கொண்டே சென்றது. "தமிழ் அடையாளம்" என்ற கருத்துருவாக்கம் யுத்தத்தின் முன்னர் இருந்ததை விட, யுத்தத்தின் பின்னரே அதிகம் உணர்வுபூர்வமாகியது. காரணம், தோற்றுப்போன இனத்திற்கு அடையாளம் அழிக்கப்படுகிறதென்ற பதற்றம் அதிகரிப்பது இயல்பு.

அடையாளம் அழிக்கப்படுவதாக உணரும் சிறுபான்மையின இனத்தின் பிரதிநிதிகள் பெரும்பான்மையினத்துடன் நல்லிணக்கம், அரசியல்தீர்வு முயற்சிகளை மேற்கொள்ளும் போது அதீத உணர்ச்சி பெருக்குடன் நடந்து கொள்ள முடியாது. ஆனால் சனத்திரள் என்பது உணர்ச்சிகளின் குவியல். இதில் பயணிப்பது கயிற்றில் நடக்கும் வித்தை.

அரசுடன் நெருங்கிச் செல்வதை போல மக்கள் உணர்ந்தாலும் சரி, விட்டுக்கொடாமல் நடக்கிறார்கள் என அரசு உணர்ந்தாலும் சரி நல்லிணக்க செயற்பாடு வெற்றியடையாது. அண்மைய நிலவரங்களை நோக்கும்போது முதலாவது நிகழ்வு நடப்பதை போல தெரிகிறது.

அண்மைய வடக்கு சம்பவங்கள் தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு விடுக்கப்படும் எச்சரிக்கை மணி. மேலெழுந்துவரும் எதிர்ப்புணர்வு தொடர்பாக ஆராய்ந்து, எல்லா தரப்பையும்வெற்றிகொள்ள வேண்டும். அதற்கு தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு அவசியமாக தனது பாதை தொடர்பான சுயவிமர்சனம் செய்து கொள்ள வேண்டும். ஏனெனில், மக்கள் கூட்டத்திடம் அதிருப்தி எழுந்தால் தெற்குடன் ஏற்படுத்தப்படும் நல்லிணக்கம் வெற்றியடையாது.

# சிங்கள பல்லைகழகமாகும் கிழக்கு!

திலக்ஸ் ரெட்ணம்

கிழக்கு மாகாணத்தின் தமிழ் மாணவர்களிற்கு ஒரு உயர்கல்வி பீடம் அவசியம் என்பது சுதந்திரத்திற்கு பின்னான காலப் பகுதியில் பலராலும், நீண்டகாலமாக முன் வைக்கப்பட்டு வந்த கோரிக்கை. யாழ்ப்பாண பல்கலைகழகம் உருவானதன் பின்னர் இந்த கோரிக்கை வலுவடைந்து 1986இல் கிழக்கு பல்கலைகழகம் உருவானது. இந்த உருவாக்கத்தில் முன்னாள அமைச்சர் தெய்வநாயகத்தின் பங்கு பெரியது.

1981 இல் வந்தாறுமூலையில் மட்டக்களப்பு பல்கலைகழக கல்லூரியா ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் பல்கலைகழகமாக உருவெடுத்தது.

கிழக்கிற்கான உயர்கல்விப்பீடமொன்று அவசியம் என்ற தேவை எழுந்தபோது வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயமே பல்கலைகழகமாக்கப்பட்டது. வந்தாறுமூலை மற்றும் சுற்றியுள்ள பிரதேசங்களின் மாணவர்களின் பிரதான கல்விச்சாலையான வந்தாறுமூலை மத்தியமகா வித்தியாலயம் பல்கலைகழகத்திற்காக கையளிக்கப் பட்டது.

மொத்தத்தில் கிழக்கு தமிழ்மக்களின் உயர் கல்விக்கான அவசியம் உணரப்பட்டதாலும், சிறீமா அரசின் கல்விக் கொள்கைகளால் சினம்கொண்ட தமிழ் இளைஞர்கள் மத்தியில் உருவாகியிருந்த தமிழ் மாணவர் பேரவை போன்ற அமைப்புக்களின் போராட்டங்களி னாலும் தமிழர்கள் மத்தியில் உருவாகியிருந்த விழிப்புணர்வே பாடசாலையொன்றை பல்கலைகழகத்திற்காக தாரைவார்க்க காரணமாக அமைந்தது.

கிழக்கு பல்கலைகழகத்தின் உருவாக்கம், கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களிற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

ஆனால் இன்று நிலைமை தலைகீழாகி விட்டது. 2009இல் யுத்தம் முடிந்த பின்னர் பல்கலைகழகம் தமிழர்களின் கையைவிட்டு செல்கிறதோ என்றபதைபதைப்பை ஒவ்வொரு தமிழனின் மனதிலும் ஏற்படுத்தியுள்ளது. காரணம், அது முற்றுமுழுதாக சிங்கள பல்கலைகழகமாகவே மாறிவருகிறது.

யுத்த சமயத்தில் வடக்கு கிழக்கு பல்கலைகழகங்களிற்கு சிங்கள மாணவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் 2009 இன் பின்னர் சிங்கள மாணவர்கள் அனுமதிக்கப்படும் வீதம் மெல்லமெல்ல அதிகரித்து இன்று சிங்கள பகுதியிலுள்ள பல்கலைகழகம் ஒன்றைப் போலவே மாறிவிட்டது.

சிங்கள பிரதேசம் ஒன்றிலுள்ள பல்கலை கழகத்தில் தமிழ் மாணவர்கள் என்ன விகிதா சாரத்தில் உள்ளீர்க்கப்படுகிறார்களோ, அதே விகிதத்தில்தான் மட்டக்களப்பு பல்கலை கழகத்திற்குள் உள்வாங்கப்படுகிறார்கள் என்பதே தற்போதைய நிலைமை.

கிழக்கு பல்கலை கழகத்திலுள்ள அனைத்து பீடங்களிலும் 70 வீதத்திற்கும் அதிகமான சிங்கள மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள் ளனர். கலைப்பீடத்தில் அனுமதிக்கப்பட்டுள் ளவர்கள் எண்ணிக்கை இதைவிட அதிகம். தற்போது கிழக்கு பல்கலைகழகத்தில் சிங்கள மாணவர்களே மிகப்பெரும்பான்மையினராக உள்ளனர். கிழக்கு பல்கலைகத்தை தீர்மானிக் கும் சக்தியாகவும் அவர்கள் உருவெடுத்து விட்டனர்.

கிழக்கு பல்கலைகழக கலைப்பீட கற்கைநெறிகள் தற்போது தமிழ் மொழி யிலேயே நடக்கின்றன. சிறிதுகாலத்தில் அது ஆங்கில மொழிக்கு மாற்றப்படவுள்ளது. கிழக்கு பல்கலைகழகத்தை தமிழர்களிட மிருந்து கைப்பற்றுவதற்கான முயற்சியாகவே அதனை பார்க்கலாம். ஆங்கில மொழிமூல கற்கை நடைமுறைக்கு வந்ததன் பின்னர் கலைப்பீடமும் சிங்கள மயமாகிவிடும் என்பது நிச்சயம்.

கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பு கிழக்கு பல்கலைகழகம். ஆனால் அது இப்பொழுது படிப்படியாக கைதவறிச் சென்று கொண்டிருக்கிறது. பல்கலைகழகத்தில் சிங்கள அடையாளத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகள் கனகச்சிதமாக நடந்து கொண்டிருக்கிறது. அண்மையில் பலத்த பாதுகாப்புடன் மதவழிபாடுகள் நடத்தப்பட்டு வெள்ளரசு மரக்கன்றொன்று பல்கலைகழக வளாகத்திற்குள் நடப் பட்டுள்ளது.


2001 இல் கிழக்கு பல்கலைகழகத்தில் பேரெழுச்சியுடன் நடத்தப்பட்ட பொங்கு தமிழ் நினைவை நினைவாக அமைக்கப்பட்ட நடுகல் படிப்படியாக அழிக்கப்பட்டு அந்த இடத்தில் புத்தர்சிலை அமைக்கும் பணிகள் நடக்கிறது.


இதனைவிட பேராபத்தாக உருவெடுத்துள் ளது பகிடிவதை. பொதுவாக தமிழ் பிரதேச பல்கலைகழகங்களில் நடக்கும் பகிடி வதைக்கு ஒரு எல்லையுண்டு. பகிடிவதை வக்கிரவதையாக உருமாறுவதில்லை. சில விதிவிலக்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுவ துண்டுதான். ஆனால் அது வழக்கமில்லை. ஆனால் சிங்கள மாணவர்களின் பகிடிவதை எல்லைமீறி செல்வதுண்டு. கட்டுப்பாடற்ற பகிடிவதை தமிழ் மாணவர்கள் மத்தியில் அண்மைக்காலமாக வலுக்கட்டாயமாக புகுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. கிழக்கு பல்கலைகழக பகிடிவதை அண்மைய சில வருடங்களில் பயமுறுத்துமளவில் அதிகரித்துள்ளது.

அண்மையில் தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களால் தாக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. இதில் குற்றவாளிகள் யாரும் தண்டிக் கப்படவில்லை. சிங்கள மாணவர்கள் பெரும் பான்மையாகி, சிங்கள பல்கலைகழகமாகி யதன் விளைவிது.

தமிழ் பல்கலைகத்தின் அடையாளம் மாறிச் செல்வதை பல்கலைகழக நிர்வாகத்தி லுள்ளவர்கள் கண்டும்காணாமலுமுள்ளனரா அல்லது கையறு நிலையில் உள்ளனரா என்பதுதான் தெரியவில்லை.

தமிழர்களின் கல்விச்சாலையை பாது காப்பது ஒவ்வொருவரின் கடமை. கல்வியை அழிப்பது இனத்தின் அடையாளத்தை அழிப்பதாகிவிடும்.





ஐம்பது வருடங்களிற்கு ஒருமுறை மலரும் திரிசங்கு மலர் இந்தியாவில் இந்த அரிய புகைப்படத்தை எடுத்து ஒருவர் பதிவிட்டுள்ளார்.




யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உயிரிழப்பு சம்பவத்திற்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும், சம்பவத்தை கண்டித்தும் மலையகத்தில் லிந்துலை ஹென்போல்ட் தோட்டத்தில் பொதுமக்களும், சிவில் அமைப்பினரும் கவனயீர்ப்பு போராட்டத்தில் 27.10.2016 அன்று குறித்த தோட்டத்தின் ஆலயத்திற்கு அண்மித்த பகுதியில் ஈடுபட்டனர்.

# ஒரு இலக்கியக்காரனின் வாழ்பனுபவங்கள் 8

– குப்பிழான் ஐ.சண்முகன்





**1968** செப்டெம்பரில் எனக்கு எழுதுவினைஞர் நியமனம் கிடைத்த போது இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பேராதனை வளாகத்தில் இரண்டாம் வருட கலைமாணி மாணவனாக இருந்தேன். நான் பொதுக் கலைமாணிப் பரீட்சை எழுதுவதற்கு இன்னும் ஒரு வருடம் பேராதனை வளாகத்தில் படிக்க வேண்டும். ஆனால் அதற்கிடையில் இந் நியமனம் கிடைத்தது. எனக்கு மனக் கிலேசத்தைத் தந்தது. படிப்பைத் தொடர்வதா?, நியமனத்தை ஏற்பதா? என்று தத்தளித்தேன். இரண்டொரு நண்பர்களைத் தவிர மற்ற நண்பர்களும் உறவினர்களும் , நியமனத்தை ஏற்குமாறு வலியுறுத்தினார்கள். படிப்பதற்கான இந்த வாய்ப்பை இழக்கக் கூடாது. தொடர்ந்து படி என்று ஆலோசனை கூறியவர்களுள் எனது நண்பரான பிற்காலத்தில் புகழ் பெற்ற இரசாயனவியல் ஆசிரியராக இருந்த ஆ.மகாதேவன் முக்கியமானவர்.

எனது வீட்டின் பொருளாதார நிலைமையும் மிக மோசமாக இருந்தது. எனக்கும் தொடர்ந்து படிக்க வேண்டுமென்ற ஆசை இருந்தபோதும் எல்லா நிலைமைகளையும் யோசித்து நியமனத்தை ஏற்பதாகவே முடிவு செய்தேன். என்றாலும் பல்கலைக்கழகத்தில் படித்த இரண்டு வருடங்களிலும் எனது பாடங்களான தமிழ், பொருளியல், ஐரோப்பிய • வரலாறு சார்ந்து பல அறிஞர்களிடமும் படித்தேன் என்பதில் ஒரு திருப்தி இருந்தது. மூன்றாம் வருடத்தில் பேராசிரியர் வி.செல்வநாயகத்தின் இலக்கிய விமர்சன வகுப்புகளிலும் பேராசிரியர் சி.தில்லைநாதனின் வகுப்புகளிலும் கலாநிதி இந்திரபாலாவின் இலங்கை வரலாற்று வகுப்புகளிலும் படிக்க வேண்டுமென ஆவலோடு எதிர்பார்த்திருந்தேன். அவற்றை இழக்கின்றோம் என்பது மிகுந்த மனவருத்தத்தைத் தந்தது.

இந்நிலையில் சில நெருங்கிய நண்பர்களும் சில உறவினர்களும் சிறிது நம்பிக்கையைத் தந்தார்கள். "உனது வேலைத்தளம் கண்டி அல்லது பேராதனையாக இருக்குமானால் ஏதோவொரு வகையில் கல்வியைத் தொடரக் கூடியதாக இருக்கும். எனவே அதற்கான வழிவகைகளைத் தேடு" என அறிவுறுத்தினார்கள்.

எங்கள் ஊரைச் சேர்ந்தஒருவர் கொழும்பில் ஒரு பெரிய பதவியிலிருக்கின்றார் என்றும், அவர் மிகுந்த ஊர் அபிமானம் கொண்டவர் என்றும், இப்படியான பிரச்சனைகளில் உதவக் கூடியவர் என்றும் சொன்னார்கள். அவரைப் பற்றி விசாரித்ததில் எனது உறவினரான திரு. சிவசுப்பிரமணியம் (கிளாக்கர்) "அவர் தனக்குப் பரிட்சயமானவர் என்றும், அவருடன் கதைத்து உதவி பெறுவோம்" என்றும் கூறினார்.

குறிப்பிட்ட நாளில் உறவினரும் நானுமாக கொழும்பு புறப்பட்டோம். கொழும்பில் இலங்கை மின்சாரசபையின் பிரதம கணக்காளராக பதவியிலிருந்தஎங்கள் ஊரைச் சேர்ந்த திரு. விஸ்லிங்கம் அவர்களைச் சந்தித்தோம். நீண்டகாலமாக ஊரைவிட்டு தொலைவில் உத்தியோகம் பார்த்தாலும், திருமணபந்தத்தாலும் அவர் ஊருடனான தொடர்புகள் அற்ற நிலையிலிருந்தார். ஊரவரான எங்களைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். தனது பழைய நினைவுகளை அசைபோட்டு எங்களுக்கும் சொன்னார். அந்தக் காலத்தில் ஊரில் தோட்டம் இறைப்பதற்காக காலையில் துலா மிதித்து இறைத்து விட்டு அந்தரம் அந்தரமாக பாடசாலைக்குப் போன கதைகளையும் சொன்னார்.

நாங்கள் அவரைச் சந்திக்க வந்த விடயத்தைச் சொன்னோம். எனக்குக் கிடைத்த நியமனக் கடிதத்தை வாங்கிப் பார்த்தார். நீர் பாதுகாப்பு அமைச்சில் ஒரு எழுதுவினைஞனாக நியமனம் பெறுகின்றீர் என்ற குறிப்பைப் பார்த்து, உமக்குக் கண்டிப் பொலிஸ் நிலையத்தில் நியமனம் கிடைக்க ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னார். அங்கு ஆங்கிலத்தில் வேலை செய்ய வேண்டிவரும் சமாளிப்பீரா என்று கேட்டார். ஆங்கிலத்தில் சொல்வது எழுதுதல் மாதிரி ஒரு பரீட்சையும் எனக்கு வைத்துப் பார்த்தார். அதில் திருப்தி அடைந்த அவர், தொலைபேசியில் பாதுகாப்பு அமைச்சில் யாருடனோ தொடர்பு கொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். "சரி உனக்கு கண்டி பொலிஸ் நிலையத்தில் நியமனம் கிடைக்கும்" என்றும் சொன்னார்.

குறிப்பிட்ட தினத்தில் எங்களை பாதுகாப்பு அமைச்சுக்கு அழைத்துச் செல்வதற்காக தனது பகுதியில் எழுது வினைஞனாக தொழில் புரிந்த ஒரு சிங்கள உத்தியோகத்தரையும் ஏற்பாடு செய்தார். எனது நியமனக் கடிதத்தை வாங்கிப் பார்த்த உத்தியோகத்தர் எங்களுக்கு ஓர் பேரதிர்ச்சியைத் தந்தார். கல்வி அமைச்சில் அல்லவா உமக்கு நியமனம் கிடைத்திருக்கிறது என்று சொன்னார்.

நாங்கள் எல்லோரும் குழம்பிப் போனோம். நியமனக் கடிதத்தை திரும்பவும் வாசித்துப் பார்த்ததில் சிங்கள மொழியில் கல்வி அமைச்சு என்றும், தமிழ் மொழி பெயர்ப்பில் பாதுகாப்பு அமைச்சு என்றும், இருந்தது. சிங்கள மொழியில் எழுதப்பட்டதே ஏற்றுக் கொள்ளப்படும் என்பதால் கல்வி அமைச்சிற்கே நான் செல்லவேண்டியதாயிற்று.

துரதிஷ்டவசமாக கல்வி அமைச்சில் திரு விஸ்வலிங்கத்திற்கு எவரையுமே தெரிந்திருக்கவில்லை. எனவே அவரால் எனக்காக எதுவும் செய்யமுடியாதிருந்தது. என்றாலும் அந்த சிங்கள உத்தியோகத்தரால் ஏதாவது செய்ய முடியுமா பாரென்று எங்களுடன் அனுப்பி வைத்தார். அவராலும் எதுவும் செய்ய முடியவில்லை.

கல்வி அமைச்சில் இரண்டு மூன்று தமிழ் இளைஞர்களும் எட்டுப் பத்து சிங்கள இளைஞர்களும் முதல் நியமனத்திற்காகக் காத்திருந்தோம். உரிய அதிகாரிகள் வந்து எங்கள் எல்லோருக்குமாக லொத்தர் குலுக்கிப் போட்டார்கள். எனக்கு இன்னும் இரண்டு மூன்று பேருக்கும் கொழும்பு எனக்கிடைத்தது. மூன்று நான்கு சிங்கள இளைஞர்களுக்கு கண்டி எனவும் கிடைத்தது. வேறு சிலருக்கு வெவ்வேறு இடங்கள் கிடைத்தன. அந்த நிலையில் கூட கண்டி எனக் கிடைத்த ஒரு சிங்கள் இளைஞனுடன் நான் ஒத்துமாறியிருக்கலாம். அவர்களும் கொழும்பில் நியமனம் பெற விரும்பியிருக்கலாம். அவர்களும் கொழும்பில் நியமனம் பெற விரும்பியிருக்கலாம். ஆனால் சரியாக வழிகாட்டுவோரின்மையாலும், மொழிப் பிரச்சனை காரணமாகவும் என்னால் அவ்வாறு செய்ய இயலவில்லை.

இப்படியாக கொழும்புப் பரீட்சைத் திணைக்களத்தில் நான் எழுது வினைஞனாக நியமனம் பெற்றேன். 1976 ஜனவரியில் நான் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெறும் மட்டும் ஆறு வருடங்களுக்கு மேற்பட்ட காலங்கள் அங்கேயே பணிபுரிந்தேன். அப்போதும் கூட ஒரு நண்பருடன் பேராதனைக்கு ஒத்து மாறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தேன். எல்லாம் சரிவரும் தறுவாயில் வெண்ணெய் திரண்டு வர தாழி உடைந்த கதை போல நண்பர் காலை வாரி விட்டுவிட்டார். என்றாலும் என்னுடன் பேராதனையில் உடன் படித்துக் கொண்டிருந்த நண்பர்களின் உதவியால் குறிப்பாக முல்லைத்தீவைச் சேர்ந்த கந்தசாமி என்ற நண்பரின் உதவியால் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை பேராதனைக்குச் சென்று கட்டுரை வகுப்புக்களில் கலந்து கொண்டேன். அதனால் 1969 இல் இறுதிப் பரீட்சைக்குத் தோன்ற முடிந்தாலும் அதில் தோல்வி அடைந்து 1970 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோன்றி பட்டதாரியானேன்.

எனக்காக கண்டி பொலிஸ் நிலைத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட நியமனத்தை வேறோர் சண்முகலிங்கம் பெற்றார் என்பதும், அவரும் பல்கலைக்கழக மாணவரென்பதும் வேறு கதை.

தொடரும்...



# அந்தநாள் நினைவு

ஒரே படத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட நடிகைகள் நடிக்கும்போது அவர்களுக்குள் ஈகோ வருவது, இன்று, நேற்றல்ல முன்பிருந்தே இருந்துவந்திருக்கிறது. 1962ம் வருடம் வெளிவந்த படம் பார்த்தால் புரியும். இதில் சிவாஜி, ஜெமினி, சாவித்ரி, சரோஜாதேவி, சவுகார் ஜானகி, கே.ஏ.தங்கவேலு, கமலஹாசன் (குழந்தை நட்சத்திரம்) உள்ளிட்ட ஏராளமானோர் நடித்திருந்தார்கள். விஸ்வநாதன் ராமமூர்த்தி இசை அமைத்திருந்தனர். ஏவிஎம் நிறுவனம் தயாரித்திருந்தது.

இந்தப் படம் முடிந்ததும் சாவித்ரி, சரோஜாதேவி, சவுகார் ஜானகி இவர்களில் யார் பெயரை டைட்டில் கார்டில் முதலில் போடுவது என்ற பிரச்சினை வந்தது. "நான்தான் இப்போது மார்க்கெட்டில் நம்பர் ஒன் இடத்தில் இருக்கிறேன் என் பெயர்தான் முதலில் வரவேண்டும்" என்றார் சரோஜாதேவி. "நான்தான் சீனியர் என்பெயர்தான் முதலில் வரவேண்டும்" என்றார் சாவித்ரி. "எல்லோருக்கும் சீனியர் நான். வயதிலும், அனுபவத்திலும் மூத்தவள் என் பெயர்தான் முதலில் வரவேண்டும்" என்று பிடிவாதம் பிடித்தார் சவுகார் ஜானகி. எல்லோரிடமும் சரி சரி என்று தலையாட்டிவிட்டார் பீம்சிங்.

"ஹீரோயின் பிரச்சினையை எப்படி சமாளிக்க போறீங்க?" என்றார் சிவாஜி. படத்துல பாருங்க தெரியும்என்று கூறிவிட்டார். படம்வெளிவந்தபிறகு பார்த்தால் எல்லோருக்கும் அதிர்ச்சி ஆச்சர்யம். உங்கள் அபிமான நட்சத்திரங்கள் நடிக்கும் என்ற கார்டு போட்டு அதை சுற்றி அனைவரின் படத்தையும் வைத்துவிட்டார். அதில் கமலஹாசன் படமும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. பீம்சிங் தொடங்கி வைத்த இந்த டைட்டில் யுக்திதான் இதுபோன்ற ஈகோ பிரச்சினை எழும் படங்களில் இன்று வரை பயன்படுத்தப்பட்டு வருகிறது.



சுய நிதி முகாமைத்துவம்–2

# கடன் என்னும் மாயவலை!

பணமில்லாதவைரைப் பிணமும் மதியாது என்பார்கள். இந்தப்பணத்தின் வரலாறு என்ன என்று சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? மனிதர்களின் கொடுக்கல் வாங்கல்கள் வளர வளர பண்டமாற்றில் உள்ள சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக பரிமாற்று ஊடகமாக பணம் கண்டுபிடிக்கப்பட்டது. பரிமாறலில் உள்ள சிக்கலைபணத்தின் வளர்ச்சிதீர்த்தது. ஆனால் இப்போது பணம் என்பது ஒரு சிக்கல் நிறைந்த பரிமாறலிற்கு வித்திட்டு இருக்கிறது. பணம், பங்குச்சந்தை, வங்கிகள் என இன்றைய நிதி உலகு வளர்ந்திருக்கும் இந்நிலையில் நாம் எல்லோருமே ஒருதடவை நினைத்துப்பார்க்க வேண்டிய விடயம் என்னவென்றால் பணம் என்பதற்கு உள்ளார்ந்த பெறுமதி என்கிற ஒன்று இல்லை. பணம் என்பது பரிமாற்று ஊடகமாக மட்டுமே பயனடைகிறது. ஒரு தேசத்தின் உண்மை உற்பத்திகள் வளராமல் பண ரீதியாக வரும் வளர்ச்சியெல்லாம் வெறும் வீக்கம் தான். எப்படியும் ஒரு முறை அந்த நிதிச் சந்தை உண்மை உற்பத்தியின் இடத்துக்கு விழுந்தே ஆகும்.

அதனால் தான் தவறாமல் கொஞ்ச காலத்துக்கொருமுறை நாம் பொருளாதார வீழ்ச்சிகளை சந்தித்து வருகிறோம். வட அமெரிக்கா போன்ற மிகச்சிக்கலான நிதிச் சந்தைகளின் மிகப்பெரும் சாபம் என்ன வென்றால் இந்த பணம் என்னும் மாயவலை தான். இதை இயக்கும் கைகள் தனிமனிதருடையவை அல்ல. கூட்டு எதிர்பார்ப்புக்கள் மற்றும் பேராசைகளின் வடிவம் என்றே சொல்லலாம்.

நிதிச்சந்தையின் சிக்கலைப் பார்த்து பயந்து ஒதுங்கியிருப்பவர்கள் நம்மில் பலர் இருக்கிறார்கள். அதனைக் கையாளத் தெரிந்தவர்கள் நிறைய பயனடைந்தும் இருக்கிறார்கள். எது எப்படியோ நமது நிதி முகாமைத்துவ திறமையை நாம் ஒவ்வொருவரும் வளர்த்துக்கொள்ளல் இந்த சிக்கலான உலகில் மிகுந்த பயனைத் தரும். எல்லாவற்றுக்கும் முதல்படி நமது கடன் அட்டைகளை நாம் சரிவர முகாமைத்துவம் செய்யப் பழகிக் கொள்வது தான். சென்ற வாரம் கடன் அட்டைகளைப்பற்றி ஒரு அறிமுகம் பார்த்தோம். கடன் அட்டை என்றாலே ஆபத்து என்றும் அது ஒரு தவிர்க்க முடியாத தலைவலி என்றும் நம்மில் பலர் கருதுவதுண்டு. ஆனால் கடன் அட்டையில் பல நன்மைகளும் கவனமாகவும் புத்திசாலித் தனமாகவும் பாவிப்பவர்களுக்கான பயன்களும் இருக்கின்றன.

கடன் அட்டைகளின் பயன்பாடுகளை பொதுவில் மூன்று வகைப்படுத்தலாம். முதலாவது எமது வருமானத்துக்கும் செலவுக்கும் இடையில் ஏதாவது கால வித்தியாசமிருப்பின் அதனை இவ்வட்டைகளைக் கொண்டு நிவர்த்தி செய்ய முடியும். அதாவது நாளை சம்பளம் வரும் ஆனால் இன்று ஒரு செலவை மேற்கொள்ள வேண்டும் என்றால் அதற்கு இவ்வட்டைகளை உபயோகப்படுத்தலாம். ஆனால் வருமானம் வரும் நேரமும் தொகையும் சரியாகத் தெரிந்து திட்டமிட்டு பயன்படுத்தினால் மட்டுமே அதனால் நன்மை ஏற்படும். இல்லாவிட்டால் வருமானத்துக்கு மீறிய செலவு ஏற்பட்டு வட்டிச்செலவு கையை மீறிவிடும்.

இரண்டாவது பயன் நமது கடன் புள்ளியினை (Credit Score) கட்டியெழுப்புவது. நாம் ஒருபோதுமே கடன் வாங்காதவர்கள் என்று பெருமையாகச் சொல்லி கொள்ளும் காலம் போய் விட்டது. கடன் வாங்கி, அதை மீளக்கட்டிய வரலாறு என்பது வட அமெரிக்காவின் கடன் முறைமையில் நம் ஒவ்வொருவருக்கும் அவசியமாகிறது. அதை ஆரம்பிப்பதற்கும் மிக எளிதாகக் கட்டியெழுப்புவதற்கும் கடன் அட்டைகள் உதவுகின்றன. எதிர்காலத்தில் குறைந்த வட்டியில் நீண்ட கால தேவைகளுக்கான வீட்டுக்கடன் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு இது அவசியமாகிறது. கடன் அட்டையினை சரியான முறையில் பாவித்து மாதாந்தம் முழுமையாக மீதிகளைக் கட்டி வரும் போது மட்டுமே நமது கடன் புள்ளியை அதிகரிப்பது சாத்தியமாகிறது.

மூன்றாவது பயன் ஒவ்வொரு கடன் அட்டைகளையும் பொறுத்து வேறுபடும் சலுகைகள், விலைக்குறைப்புக்கள், பரிசுகள் என்பவை சார்ந்தது. உதாரணமாக சினிப்ளெக்ஸ் இல் இலவச படம் பார்ப்பதற்கான புள்ளிகளை வழங்கும் கடன் அட்டை ஸ்கோஷியா வங்கியில் வழங்கப்படுகிறது.

அதிகம் நீங்கள் பயணம் செய்பவர் என்றால் வான் மைல்களை வழங்கும் அட்டை ஒன்று உங்களுக்கு பயனளிக்கக்கூடும். அது போலவே பல வங்கிக் கடன் அட்டைகள் நாம் செலவிடும் பணத்தின் சிறிய வீதத்தை (1 அல்லது 2 வீதம்) மீள வருட முடிவில் எமக்கு வழங்குகிறது. வியாபார நிறுவனக்களின் அட்டைகள் பொருள் விலைகளில் கழிவினை பலவேளைகளில் வழங்குகின்றன. இவை எல்லாவற்றையும் சரியாக பயன்படுத்தி இலாபமீட்டுவதென்றால் அதற்கு நாம் கடன் அட்டைகளைப் பெறும்போது அது பற்றி முழுமையாக அறிந்து கொண்டு அதற்கேற்ப தொடர்ந்து அவற்றைப் பயன்படுத்தி வந்தால் மட்டுமே முடியும்.

கடன் அட்டைகள் வழங்கும் இந்தப் பயன்பாடுகளை நமக்கு இலாபம் தரும் வகையில் பயன்படுத்துவதற்கான அடிப்படை தூர நோக்குடனான திட்டமிடல் தான். இதுபற்றி மேலும் விரிவாக அடுத்தவாரம் பார்க்கலாம்.



▶ Pearson (Edexel UK) நிறுவனத்தின் அதியுயர் விருதான 'பிளற்றினம்' விருது BCAS CAMPUS நிறுவனத்திற்கு வழங்கபட்டுள்ளது. இலங்கையில் BTEC HND பாடநெறிகளை வழங்கிவரும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு மத்தியில் முதல்தர நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டதன் காரணமாகவே இந்த அதியுயர் விருதானது, BCAS CAMPUS க்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 25.10.2016 அன்று கொழும்பு 'கோல் பேஷ்' ஹோட்டலில் இடம்பெற்ற Pearson UK நிறுவனத்தின் உயர்கல்வி நிறுவனங்களுக்கான நிகழ்வின் (Higher Education Forum) போதே இந்த முதல் தர சிறப்பு விருது BCAS CAMPUSற்கு வழங்கப்பட்டுள்ளது.



## சமந்தாவை கவிழ்க்கும் நயன்!

நீண்டகாலமாக நம்பர் வன் அந்தஸ்தில் நயன்தாரா இருக்கிறார். வயதும் ஏறிக்கொண்டு போகிறது, இளம் நாயகிகளின் படையெடுப்பு அதிகரித்து விட்டது. போட்டி கடுமையாகியுள்ளது. படங்களை குறைத்து தமிழில் மட்டும் கவனம் செலுத்தி வந்த நயன்தாரா தெலுங்குப்பக்கம் கவத்தை செலுத்த ஆரம்பித்துள்ளார். அஜித்தின் வேதாளம் தெலுங்கில் பவன் கல்யாண் நடிப்பில் உருவாகிறது. இதில் சமந்தாவை நாயகியாக்க முயன்றுள்ளனர். சமந்தா இரண்டு கோடியை விட ஒரு சதம் குறைக்க மறுத்துவிட்டார். பின்னர் நயனிடம் வந்துள்ளனர். அவரும் இரண்டு கோடி சொல்லியுள்ளார். பின்னர் சமந்தாவை ஓரங்கட்டுவதற்காக ஒன்றரை கோடிக்கும் குறைவாக குறைத்துள்ளார்.

## சாதனைப் படம்!

அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய் என்ற படத்தை வெறும் பத்து மணித்தியாலத்தில் எடுத்து சாதனை செய்திருக்கிறார்கள். ஆறு கமரா வைத்து, ஒரு காட்சி முடிந்ததும் மற்றைய படப்பிடிப்பு ஆரம்பிக்கும் விதமாக திட்டமிட்டு படத்தை முடித்துள்ளனர். புதிதாக திருமணமான கணவன் மனைவி. மனைவியை பிடிக்காத கணவன் அவளை வீட்டை விட்டு விரட்ட பேய் நாடகம் ஆடுமாறு நண்பர்களிடம் கேட்கிறான். இதற்குள் மாடியில் புதிய ஜோடி குடிவருகிறது. பேயும் புகுந்து விடுகிறது. இறுதியில் என்ன நடந்ததென்பதே கதை. குறைந்த நேரத்தில் படத்தை முடித்து கின்னஸ் சாதனை அனுப்பியுள்ளனர்.

## அஜித்தை உதறிய சிம்பு!

அஜித்திற்கு எவ்வளவு வெறித்தனமான ரசிகராக சிம்பு இருக்கிறார் என்பது ஊரறிந்த செய்தி. அஜித் படம் வெளியானால் முதல் ஆளாக சிம்பு பார்த்துவிடுவார். தனது படங்களில் ஒரு காட்சியிலாவது அஜித் ரசிகன் என்பதை வெளிப்படுத்தி விடுவார். இந்த நிலையில் அண்மையில் சமூக வலைத்தளத்தில் ரசிகர்களுடன் உரையாடிய சிம்பு, இனி படங்களில் அஜித் பெயரை பாவிக்கப் போவதில்லை என கூறியுள்ளார். தற்போது சிம்பு நடிக்கும் அன்பானவன் அசராதவன் அடங்காதவன் படத்தில் அஜித் பற்றிய எந்த பேச்சும் இல்லையாம். மாறாக, இன்னொரு நடிகரின் ரசிகராக நடிக்கிறாராம்.

அது. தந்தை டி.ஆர்.ராஜேந்தர்!

## விஜயை தாக்கிய அமலாபால்!

இயக்குனர் விஜய் அமலாபால் ஜோடி மனமொத்து பிரிவதாக முடிவு செய்து குடும்பநல நீதிமன்றத்தில் மனு செய்துள்ளனர். விவாகரத்து இருவரது வாழ்க்கையையும் பாதிக்காத விதத்தில் தத்தமது வேலைகளில் ஈடுபாடு காட்ட தொடங்கிவிட்டனர். விஜய் இயக்கிய தேவி அண்மையில் வெளியானது. ஜெயம் ரவி படமொன்று விரைவில் ஆரம்பிக்கிறது. அமலாபாலும் படங்களில் ஒப்பந்தமாகிறார். தனுஷின் வடசென்னையில் நாயகியாகியுள்ளார். அண்மையில் நண்பிகளுடன் காஷ்மீருக்கு சுற்றுலா சென்றுள்ளார். அங்கு எடுத்து புகைப்படங்களை வெளியிட்டு குறிப்புக்களும் எழுதியுள்ளார். நோ லுங்கிக் வக் (திரும்பிப்பார்க்க மாட்டேன்), உன் இதயத்தை தன் நெஞ் சில் தாங்கி இருக்கும் ஒருவரை தவிர வேறு ஒருவரையும் உன்னைப்பற்றிய முடிவுகள் எடுக்க அனுமதிக்காதே போன்றவை சில. இவை முன்னாள் கணவன் விஜயை தாக்குவதற்காக எழுதப்பட்டதாக ருவிற்றரில் சர்ச்சை தோன்றியுள்ளது.




## ரெஜினாவிற்கு ரெஜிஸ்ரேசனா?

கேடி பில்லா கில்லாடி ரங்கா பட நாயகி ரெஜினா ஆரம்பத்தில் இழுத்து போர்த்திக் கொண்டு நடித்தார். யாரும் திரும்பிப்பார்க்கவில்லை. இப்பொழுது இரண்டாவது இன்னிங்சை கவர்ச்சி இன்னிங்சாக ஆரம்பிக்க முயல்கிறார். பார்க்கும் கண்ணே பொசுங்கும் விதமான படங்கள் எடுத்து இயக்குனர்களிற்கு அனுப்புவதுடன், பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது இயன்றவரை ஆடைகுறைப்பும் செய்து கொள்கிறார். இந்த நிலையில் சமீபத்தில் ருவிற்றரில் ஒரு படம் பதிவேற்றினார். நிச்சயதார்த்த தினத்தில் மோதிரம் மாற்றிக் கொள்வதை போன்ற படம். "இந்த நன்நாளில் உங்கள் ஆசீர்வாதங்களை எதிர்பார்க்கிறேன். எனக்கு மோதிரம் அணிவிப்பது யாரென்பது விரைவில் தெரியவரும். அதற்காக உங்களை காக்க வைக்க மாட்டேன்" என பதிவிட்டுள்ளார். இது படஉலகில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே தெலுங்கு நடிகர் சாய் தரம் என்பவருடன் ரெஜினா காதலாகி அது ஊற்றிக் கொண்டது. அந்த காதல் மலர்ந்து நிச்சயதார்த்தமானதா அல்லது ரெஜினா நடிக்கும் படகாட்சியை சுவாரஸ்யத்திற்காக பதிவிட்டாரா என்பது விரைவில் தெரியவரும்.

## திரும்பி வந்த சமந்தா!

சமந்தா நாகரசதன்யா காதல் விரைவில் திருமணத்தில் முடியப்போவதாக செய்திகள் வந்த நிலையில் அடுத்த வருடத்திங்கு திருமணத்தை தள்ளிவைத்தனர். திருமணத்திங்காக புதிய படங்களை தவிர்த்து வந்த சமந்தா மீண்டும் நடிக்க வந்துள்ளார். இதையடுத்து சிவகார்த்திகேயன், விசால் படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார். குறைந்தது இன்னும் எட்டு மாதங்களாவது சமந்தா நடிப்பார் என்ற தகவல் வெளியானதையடுத்து அவரை ஒப்பந்தம் செய்ய பலரும் போட்டி போடுகிறார்களாம்.

## அஜித் வில்லனாகும் ஒபராய்!

அஜித்தின் புதிய பட சூட்டிங் ஒஸ்திரியாவில் நடந்து வருகிறது. இன்டர்போல் அதிகாரியாக நடிக்கும் அஜித்திற்கு காஜல் ஜோடி. அடுத்ததாக இந்தியாவில் படப்பிடிப்புக்கள் ஆரம்பிக்கவுள்ளன. இங்குதான் வில்லனின் போர்சன் ஆரம்பிக்கிறது. நான் ஈ சுதீப்பை வில்லனாக நடிக்க வைக்க முயன்றார்கள். அவர் மறுத்துவிட்டார். இந்தியிலிருந்து யாரையாவது நடிக்க வைக்கலாமென்று படக்குழு விரும்புகிறது. படவாய்ப்பில்லாமல் இருக்கும் ஐஸ்வர்யா ராய் கணவன் அபிசேக் பச்சன் மற்றும் விவேக் ஒபராயுடன் பேச்சு நடக்கிறது. இதில் ஒபராய் ஒத்துக்கொண்டுள்ளதாக தெரிகிறது. இதுகுறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும்.

## வடிவேலுவின் புதிய கூட்டணி!

வடிவேலு சினிமாவில் கதாநாயகனாக நடித்து தற்போது மீண்டும் நகைச்சுவை வேடத்திற்கு திரும்பியிருக்கிறார். இது சினிமா தயாரிப்பாளர்களை உற்சாகப்படுத்தியுள்ளது. அவரை ஒப்பந்தம் செய்ய பலரும் போட்டிபோடுகிறார்கள். யாரும் எதிர்பாராத விதமாக ஜி.வி.பிரகாஷின் படத்தில் நடிக்க ஒத்துக் கொண்டுள்ளார். இதனை ஜி.வியும் உறுதிசெய்துள்ளார்.

சிவன் கோயிலில் நுழைந்தவுடன் நமது கண்களில் பிரமாண்டமாக தெரியும் கோபுரம் ராஜகோபுரம் எனப்படும். அதனைத் தெய்வ வடிவமாக எண்ணி வணங்கி விட்டுத்தான் கோயிலுள் நுழைய வேண்டும்.

கோயிலுக்கு வரமுடியாதவர்கள் கூட தூரத்தில் இருந்தபடியே கோபுர தரிசனம் செய்வது இறைவனை வணங்குவதற்கு சமமாகும். எனவே தான் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்கிறார்கள்.

கோயிலின் உள்ளே நுழைந்தவுடன் தெரிவது பலிபீடம் ஆகும். அதனருகில் சென்று கீழே விழுந்து நமது உடலில் உள்ள காமம், கோபம், பேராசை, பற்று, அகங்காரம் ஆகியவற்றை அந்த இடத்தில் பலி கொடுத்து விட்டு இறைவனை வணங்க செல்ல வேண்டும் என்பதற்காகவே இந்த பலிபீடம் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு அடுத்து இருப்பது துவஜஸ்தம்பம் அல்லது கொடிக்கம்பமாகும். இந்த கொடிக்கம்பத்தில் தான் கோவிலின் திருவிழாக்காலங்களில் கொடியேற்றி அதை ஊர் முழுவதும் தெரிவிப்பார்கள். அதற்கு அடுத்து சிவனின் வாகனமான நந்தியின் மண்டபம் அமைந்துள்ளது. இவரை வணங்கி அனுமதி பெற்ற பின்பே சிவனை வணங்க செல்ல வேண்டும்.

சன்னதியில் முதலில் அருள்பாலிக்கும் முழு முதற்கடவுளான விநாயகரை வணங்கி, அவருக்கு முன் தோப்புக்கரணம் போட வேண்டும். அடுத்து மூலஸ்தானத்தில் உள்ள சிவபெருமானை ஒரே சிந்தனையுடன் வணங்க வேண்டும். பின் பிரகாரத்தில் உள்ள சுப்ரமண்யர், அம்பிகை, துர்க்கை, தட்சிணாமூர்த்தி, பைரவர் ஆகியோரை வழிபட வேண்டும்.

கடைசியாக இறைவனை தரிசிக்க வரும் பக்தர்களின் கோரிக்கையை கணக்கெடுக்கும் சண்டிகேசுவரருக்கு முன் நின்று "வந்தேன் வந்தேன் வந்தேன், இறைவனின் தரிசனம் கண்டேன், கண்டேன், கண்டேன் என மெதுவாக கூறி, இரு கைகளையும் மெதுவாக தட்டி, நன்றி சொல்லி வெளியே வர வேண்டும்.

கோயிலை விட்டு வெளியே வரும் போது சிறிது நேரம் உட்கார்ந்து, இறைவா! நான் எனது பிரார்த்தனையை உன்னிடம் கூறிவிட்டேன், இதில் எனக்கு எது தேவை, எது தேவையில்லை என்பது உனக்கு தெரியும். அதன்படி வரம் கொடு என பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும்.



# சிவன் கோயில்களில் எவ்வாறு வழிபட வேண்டும்?


பின் மறுபடியும் கொடிக்கம்பத்திற்கு அருகில் சென்று வடக்கு நோக்கி தலை வைத்து, பெண்களாக இருந்தால் இரண்டு கை, இரண்டு கால், தலை ஆகிய ஐந்து உறுப்புகள் தரையில் படும்படியான பஞ்சாங்க நமஸ்காரமும், ஆண்களாக இருந்தால் உடல் முழுவதும் தரையில் படும் படியான சாஷ்டாங்க நமஸ்காரமும் செய்துவிட்டு வெளியில் வரவேண்டும்.

கோயிலுக்கு செல்லும் பக்தர்கள் இறைவனை வழிபட்டால் மட்டும் போதாது. அவனுக்கு பிடித்த மாதிரியும் நடந்து கொள்ள வேண்டும். கோயிலில் உள்ள தெய்வங்கள் அனைத்தும் எப்போதும் தியானத்தில் இருப்பதால் தொட்டு வணங்குதல் கூடாது.

கோயிலில் இறை சம்பந்தப்பட்ட விஷயங்களை தவிர வேறெதும் பேசுதல் கூடாது. இறைவன் எளிமையையே விரும்புவான். அவனை தரிசிக்க செல்லும் போது ஆடம்பரமான உடைகள், நகைகள், மொபைல் உபயோகிப்பது ஆகியவற்றை தவிர்ப்பது நல்லது.

# தமிழ் எண் கணித பலன்கள்

## எண் இரண்டு



2, 11, 20, 29 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களும் பெயர் கூட்டெண் இரண்டாக உள்ளவர்களும் இந்த எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளவர்கள் ஆவர்.

எண் இரண்டுக்குரிய கோள் சந்திரன் ஆகும். இது உண்மையில் ஒருதுணைக்கோள் ஆகும். பூமிக்கு மட்டுமின்றி வேறு சில கோள்களுக்கும் இதுபோல சந்திரன்கள் உண்டு. பூமிக்கு ஒரே ஒரு சந்திரன் இருப்பதாக இதுவரை அறியப்பட்டுள்ளது. கோள்கள் யாவும் சூரியனைச் சுற்றி வரும்போது, இந்தத் துணைக்கோள்கள் எல்லாம் கோள்களைச் சுற்றி வரும்.

சந்திரன் ஒரு துணைக்கோள் என்பதால், இக்கோளின் தாக்கம் உடையவர்கள் மற்றவருக்கு உதவியாளர்களாக இருப்பார்கள். தங்களது தேவைகளுக்குப் பிறரைச் சார்ந்தே இருப்பார்கள். உதவியாளர் என்பதால், உதவியாளருக்குத் தேவையான பண்புகளான பொறுமை, பணிவு, அன்பு ஆகிய குணங்கள் இவர்களிடத்தே காணப்படும். கோள்களிலேயே சந்திரனுக்கு மட்டும்தான் நாளும் ஆண்டும் ஒரே எண்ணிக்கையால் ஆனவை. அதாவது சந்திரன் ஒருமுறை தன்னைத்தானே சுற்றி முடிக்கும்போது பூமியையும் ஒருமுறை சுற்றி முடிக்கிறது. இதனால் இந்த எண்ணின் தாக்கத்திற்கு உட்பட்டவர்களுடைய அக இயக்கமும் புற இயக்கமும் ஒரே வேகத்தில் இருக்கும். இதன் விளைவாக இவர்களுடைய செயல்கள் யாவும் அவசரகதியிலேயே இருக்கும். அத்துடன் இவர்கள் மனதில் பட்டதை அப்படியே பட்டென்று சொல்லி விடுவார்கள். ஒளித்து வைக்கத் தெரியாது. தாங்கள் அறிந்த ரகசியத்தை மறைத்து வைத்திருப்பது என்பது இவர்களால் இயலாதஒன்றாகும். தொலைதூரப் பயணம், வெளிநாட்டுப் பயணம் ஆகியவற்றை அடிக்கடி மேற்கொள்வர்.

எண் இரண்டுக்குரிய எழுத்துக்கள் ல்,ன்,ற் ஆகியன. இவ்வெழுத்துக்களின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமையும் வினை "சூழிதல்" ஆகும். இவ்வினையை விரித்தால், குறைதல், குறைத்தல், பிரிதல், பிளத்தல், பகுத்தல் முதலான பல வினைகள் தோன்றும். இவ்வெண்ணுக்கு உரியவர்கள் பகுத்தறிவு மிக்கவர்களாய்,



எந்த ஒரு விசயத்தையும் ஆய்வுசெய்யும் பண்பு உடையவர்களாய் இருப்பதைக் காணலாம். தலைசிறந்த ஆய்வாளர்கள் யாவரும் இவ்வெண்ணின் தாக்கம் பெற்றவர்கள் என்று கூறலாம். சந்தேகம், ஆய்வு, நம்பாமை ஆகியவை இவர்களது பிறப்புக் குணங்கள். சந்திரன் ஒரு பெண் கோள் என்பதால், பெண்களுக்கே உரிய சந்தேகக்குணம் இக்கோளுக்கும் இருக்கிறது. இம்மக்களில் பலர் நல்ல கல்வியாளர்களாகவும் இசைத்துறையில் நல்ல ஈடுபாடு கொண்டவர்களாகவும் புகழ் தரும் செயல்களையே செய்ய விழைபவர்களாகவும் இருப்பர். இக்கோளின் தாக்கம் பெற்றவர்கள், காவல்துறை, ஆய்வுத்துறை, இசைத்துறை போன்ற துறைகளில் பணி செய்யலாம். இத்துறைகளில் பணி செய்தால் இவர்கள் நல்ல நிலையை அடையலாம். சிலருக்கு கண்கள் சிறியதாய் இடுங்கியதைப் போல இருக்கும். பணம் செலவு செய்வதில் மிகக் கஞ்சத்தனமாக இருப்பார்கள். ஆறு நிறைய வெள்ளம் போனாலும் நாய் நக்கித்தான் குடிக்கும் என்னும் பழமொழி இவர்களுக்குப் பொருந்தும்.

சந்திரனின் நிலை கெட்டிருந்தால், இவர்களுக்கு தீமைகள் ஏற்படும். தமக்குத் துணையாக இருப்பவரின் மேல் சந்தேகம் கொள்வதால் அவர்களுக்குள் பிரிவுஏற்படும். பொருளையும் இழந்து பாசத்திற்காக ஏங்கித் தவிக்க நேரிடும். கணவன் மனைவியிடையே மனமுறிவு ஏற்பட்டு நிரந்தர பிரிவு அதாவது மணமுறிவுக்கும் வழிவகுத்து விடலாம் என்பதால் இக்காலத்தே இவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். முடிவெடுக்க முடியாமல் தவித்தல், அடிக்கடி முடிவை மாற்றிக் கொள்ளுதல், முன்னுக்குப்பின் முரணாக நடந்து கொள்ளுதல் போன்ற விளைவுகள் உண்டாகும். மனதில் பட்டதை அப்படியே சொல்லி விடுவதால் சில நேரம் சிக்கலில் மாட்டிக் கொள்வார்கள். (தொடரும்)



சென்னையில் நடந்த 'நாடோடி மன்னன்' வெற்றி விழாவில் எம்.ஜி.ஆருக்கு வாள் பரிசளிக்கிறார் அண்ணா. அருகே என்.வி. நடராஜன் (இடமிருந்து 2வது) கருணாநிதி, முரசொலி மாறன் (எம்.ஜி.ஆருக்கு பின்னே), நடிகர் திருப்பதிசாமி, அன்பழகன் உள்ளனர்.



எம்.ஜி.ஆர் 100 நெடுந்தொடர் 26

ஸ்ரீதர் சுவாமிநாதன்

# படம் ஓடினால் மன்னன்; ஓடாவிட்டால் நாடோடி!

**எம்.ஜி.ஆர்.** ஒரு காரியத்தில் இறங்கினார் என்றால் என்ன இடையூறு வந்தாலும் அதை முடிக்காமல் விடமாட்டார். அதற்கு மிகப் பெரிய உதாரணம் அவர் முதன் முதலில் தயாரித்து, இயக்கி, நடித்து பிரம்மாண்டமான வெற்றி பெற்ற படமான 'நாடோடி மன்னன்'.

'மலைக்கள்ளன்', 'அலிபாபாவும் 40 திருடர்களும்', 'மதுரை வீரன்', 'தாய்க்குப் பின் தாரம்' என்று வெற்றிப்படிகளில் ஏறி புகழின் உச்சியில் இருந்த எம்.ஜி.ஆர் நடிப்பதற்காக பல்வேறு படவாய்ப்புக்கள் காத்திருந்தன. ஆனால், அதையெல்லாம் ஒதுக்கிவிட்டு தனது முழு கவனத்தையும் 'நாடோடி மன்னன்' படம் எடுப்பதில் திருப்பினார் எம்.ஜி.ஆர்! அது ஏன் என்பதற்கான விளக்கமும் கொடுத்தார்.

"நான் சொந்தத்தில் 'நாடோடி மன்னன்' படத்தை ஏன் ஆரம்பித்தேன்? எனக்காக எத்தனையோ படங்கள் காத்திருக்கும் நேரத்தில் அதில் நடித்து முடித் தாலே வாழ்க்கைக்கு தேவையான பணம் சம்பாதித்து நிம்மதியாக இருக்கலாம். ஆனால் 'நாடோடி மன்னன்' ஒரு பரிசோதனை முயற்சி. என் விருப்பப்படி செய்து அதற்கு மக்களின் பதில் என்ன? என்று எதிர்பார்க்கிறேன்" என்றார் எம்.ஜி.ஆர்.

'நாடோடி மன்னன்' படத்துக்கான கனவு 20 வயதிலேயே எம்.ஜி.ஆரின் மனதில் கருக்கொண்டது. படப்பிடிப்பு ஒன்றில் கலந்து கொள்வதற்காக கொல்கத்தா சென்ற எம்.ஜி.ஆர், அங்கு 'இஃப் ஐ வேர் கிங்' என்ற படத்தைப் பார்த்தார். இந்தப் படமே எம்.ஜி.ஆர் மனதில் விதை யாய் விழுந்து விருட்சமாக வளர்ந்தது. அதன் விளைவுதான் 'நாடோடி மன்னன்.'

படத்துக்காக பணத்தை பணம் என்று பார்க்காமல் எம்.ஜி.ஆர் செலவழித்தார். சில நேரங்களில் அவரது அண்ணன் சக்ரபாணியே கவலைப்படும் அளவுக்கு கடன் வாங்கி செலவு செய்தார். காட்சிகளின் பிரம்மாண்டத்துக்கு மட்டுமல்ல; படத்தில் பணியாற்றும் நடிகர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் தாராளமான சம்பளமும் வழங்கப்பட்டது.

படப்பிடிப்பு குழுவினர் விரும்புவதை சாப்பிடுவதற்காக படப்பிடிப்பின்போது மினி ஓட்டலையே எம்.ஜி.ஆர் ஏற்பாடு செய்து விட்டார். அந்தக் காலத்தில் பணக்காரர்கள் மட்டுமே குடிக்கும் 'ஓவல்டின்' என்ற பானம் பெரிய அண்டாக்களில் வைக்கப் பட்டது. முதன்முதலாக பல தொழிலாளர்கள் 'ஓவல்டின்' குடித்ததே அப்போதுதான்.

படம் முடிந்த பிறகு "வெற்றியோ, தோல்வியோ அது மக்கள் தீர்ப்பைப் பொறுத்தது. படம் ஓடினால் நான் மன்னன், ஓடாவிட்டால் நாடோடி" என்று சர்வசாதாரணமாக சொன்னார் எம்.ஜி.ஆர்.

மக்கள் எம்.ஜி.ஆரை மன்னனாக்கினர். அதுவரை வெளியான படங்களை வசூலில் புரட்டிப்போட்டு அமோக வெற்றி பெற்றது 'நாடோடி மன்னன்'. 19 ஆண்டுகள் கழித்து தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்து எம்.ஜி.ஆர் நிஜமாகவே முடிசூடியதற்கு கால்கோள் நடத்தியது 'நாடோடி மன்னன்'.

மதுரையில் பல லட்சம் மக்கள் முன்னிலையில் நடந்த வெற்றி விழாவைத் தொடர்ந்து சென்னையிலும் 30.11.1958ல் எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் பேரறிஞர் அண்ணா தலைமையில் வெற்றி விழா கொண்டாட்டம் நடந்தது. விழாவில் எம்.ஜி.ஆருக்கு வீரவாளை அண்ணா பரிசளித்தார்.

இந்தக் கூட்டத்தில்தான், "மரத்தில் பழுத்த கனி தங்கள் மடியில் விழாதா என்று பலரும் எதிர்பார்த்திருக்க, நல்லவேளையாக அந்தக் கனி என் மடியில் விழுந்தது. அதை எடுத்து என் இதயத்தில் வைத்துக் கொண்டேன். எம்.ஜி.ஆரை பாராட்டுவது என்னை நானே பாராட்டிக் கொள்வது போலாகும்" என்று அண்ணா பேசினார்.

'நாடோடி மன்னன்' பற்றி குறிப்பிடும் போது நடிகை பானுமதி பற்றி சொல்லியாக வேண்டும். நடிப்பு, தயாரிப்பு, இசை, இயக்கம் என்ற பன்முகத்திறமை கொண்டவர் பானுமதி. 'மலைக்கள்ளன்', 'மதுரை வீரன்' என்று ஏற்கெனவே வெற்றி பெற்ற படங்களில் எம்.ஜி.ஆருக்கு பானுமதியே ஜோடி. 'நாடோடி மன்னன்' படத்திலும் அவரையே நாயகியாக நடிக்க எம்.ஜி.ஆர். ஒப்பந்தம் செய்தார்.

பானுமதி அந்தக் காலத்திலேயே சுதந்திரமாக செயல்படும் நடிகை. எம்.ஜி.ஆரும் அப்படியே. தான் விரும்புகிறபடி காட்சிகள் வரும்வரை எம்.ஜி.ஆர் விடமாட்டார். அதனால்தான் இன்றும் அவர் படங்களை ரசிக்க முடிகிறது. எம்.ஜி.ஆர் மீண்டும் மீண்டும் காட்சிகளை எடுப்பது பானுமதிக்கு பிடிக்கவில்லை. "எடுத்த காட்சிகளையே எத்தனை முறை எடுப்பீங்க?" என்று எம்.ஜி.ஆரைப் பார்த்து கேட்டார்.

சக நடிகையின் ஒத்துழைப்பு இப்படி இருக்கும்போது கோபம் வந்தாலும், எம்.ஜி.ஆர் அமைதியாகவே பதில் சொன்னார், "படத்தின் தயாரிப்பாளர் மட்டுமின்றி, இயக்குநரும் நான்தான். என் இயக்கத்தில் நடிக்க விருப்பம் இருந்தால் நடிங்க. இல்லைன்னா விட்டுடுங்க." இதைத் தொடர்ந்து, படத்தில் இருந்து விலகிக் கொண்டார் பானுமதி. பிறகு, அவர் இறப்பது போல காட்சிகள் மாற்றப்பட்டு நடிகை சரோஜா தேவியை கதாநாயகியாக அறிமுகப்படுத்தினார் எம்.ஜி.ஆர்.

> எம்.ஜி.ஆர் நடித்த 'மதுரை வீரன்' திரைப்படம் தமிழகத்தில் திரையிடப்பட்ட 33 திரையரங்குகளிலும் 100 நாட்கள் ஓடி சரித்திரம் படைத்தது. எந்த கருப்பு வெள்ளை படமும் இந்த சாதனையை முறியடிக்கவில்லை. பெங்களூரிலும், இலங்கையிலும் தலா ஒரு திரையரங்கில் 100 நாட்கள் ஓடியது. எம்.ஜி.ஆர் கதாநாயகனாக நடித்த முதல் வெள்ளி விழா படம் என்பதோடு, ரூ.1 கோடி வசூல் செய்த முதல் தமிழ்படம் என்ற பெருமை பெற்றது 'மதுரை வீரன்.'

கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஒருவரின் திறமையை எம்.ஜி.ஆர் மதிப்பார். படத்தில் இருந்து பாதியில் விலகினாலும் சென்னையில் நடந்த வெற்றி விழாவுக்கு பானுமதியையும் பெருந்தன்மையுடன் அழைத்து, அவருக்கும் விருது வழங்கினார் எம்.ஜி.ஆர்.

அதன் பின்னரும், எம்.ஜி.ஆர் பானுமதி நடிப்பில் 'ராஜா தேசிங்கு', 'கலை அரசி', 'காஞ்சித்தலைவன்' ஆகிய படங்கள் வெளியாயின. பன்முகத் திறமை மிக்க பானுமதிக்கு தமிழக அரசின் சார்பில் அதுவரை 'கலைமாமணி' பட்டம் வழங்கப்படாததை அறிந்த எம்.ஜி.ஆர், தான் முதல்வராக இருந்தபோது 'கலைமாமணி' விருதை பானுமதிக்கு வழங்கி கவுரவித்தார்.

எம்.ஜி.ஆர் நல்ல இசை ஞானம் உடையவர். 'நாடோடி மன்னன்' படப்பிடிப்பின் போது ஒருநாள், இசையமைப்பாளர் எஸ்.எம். சுப்பையா நாயுடுவுடன் பாடல்களுக்கான இசையமைப்பு பற்றி எம்.ஜி.ஆர் ஆலோசித்துக் கொண்டிருந்தார். அப்போது, "நீங்கள் இசையமைப்பில் எல்லாம் தலையிட வேண்டுமா?" என்று எம்.ஜி.ஆரிடம் கேட்டார் பானுமதி. இசை பற்றி எம்.ஜி.ஆருக்கு பெரிதாக ஒன்றும் தெரிந்திருக்காது என்ற எண்ணம் பானுமதிக்கு.

எம்.ஜி.ஆருக்கு நினைவாற்றல் அபாரம். எத்தனை ஆண்டுகள் ஆனாலும் எதையும் மறக்க மாட்டார். பானுமதி கேட்ட கேள்விக்கு, 27 ஆண்டுகளுக்குப் பின் முதல்வராக இருந்தபோது செயல்வடிவில் அவருக்கு பதிலளித்தார் எம்.ஜி.ஆர்.

தமிழக அரசு இசைக் கல்லூரியின் முதல்வராக பானுமதியை எம்.ஜி.ஆர். நியமித்தார். பின்னர், அந்த பதவியின் அந்தஸ்து மேம்படுத்தப்பட்டு இயக்குநர் மற்றும் முதல்வராக பானுமதி பதவி வகித்தார். 2005ம் ஆண்டு பானுமதி மறைந்த தினம், எம்.ஜி.ஆர். நினைவு நாளான டிசம்பர் 24ம் தேதி.



'மலைக்கள்ளன்' படத்தில் எம்.ஜி.ஆருடன், பானுமதி.



'நாடோடி மன்னன்' படத்தில் எம்.ஜி.ஆரின் கம்பீரம்.

தொடரும்...

# ஆயிரம் சூரியன் ஆயிரம் சந்திரன் ஒரே ஒரு பூமி

ம.செந்தமிழன்.

'ஏன்?' எனக் கேட்பது உயிரின் இயல்பு. ஒவ்வொரு செயலைச் செய்யும் முன்னரும்,'இதைஏன்செய்யவேண்டும்?'எனக் கேட்பவர்கள் அந்தச் செயலைப் புரிந்து கொள்கிறார்கள். அதன் பின்னர், அந்தச் செயலை அவர் சிறப்பாகச் செய்கின்றார் அல்லது முற்றிலும் அதை நிராகரிக்கின்றார். ஆனால், ஏன் செய்கின்றோம் எனத் தெரியாமல் செய்யப்படும் எல்லா செயல்களும் பாவங்களின் குவியல் தான்!

காடுகளில் மேயும் மாடுகளைப் பாருங்கள். பலவகையான புற்கள், செடிகள், கொடிகள், புதர்ச்செடிகள் இருக்கும் காட்டில், அவை எல்லாவற்றையும் மேய்கின்றன. வயிறு நிரம்பினால் போதும் என்ற சிந்தனையில், ஒரே இடத்தில் இருக்கும் ஒரே வகையான தாவரத்தை அவை மேய்வதே இல்லை. ஏனெனில், அந்தக் காட்டில் முளைத்துள்ள பலவகையான செடிகளும், கொடிகளும் தமக்கான சரிவிகிதமான உணவுகள் மற்றும் மருந்துகள் என்ற புரிதல் அவற்றுக்கு உண்டு. எல்லாக் கால்நடைகளும் இவ்வாறு தான் நடந்து கொள்கின்றன. எளிதில் கிடைக்கின்றனவே என்பதற்காக ஒரே வகையான தீவனத்தை அவை உட்கொள்வதே இல்லை. அலைந்து திரிந்து விதவிதமான தாவரங்களை உட்கொள்வது தான் தாவர உண்ணிகளின் குணம். அதனால் தான் காட்டில் மேயும் கால்நடைகளுக்கும், விலங்குகளுக்கும் கால்நடை மருத்துவர்கள் தேவைப்படுவதேயில்லை. இந்த காரணத்தினால்தான் காட்டில் திரியும் கால்நடைகள், பண்ணைகளில் வளர்க்கப்படும் கால்நடைகளைக் காட்டிலும் பலமடங்கு வலுவாக உள்ளன.

காட்டில் மேயும்மாடுகளைக் கட்டிவைத்து தீவனம் மட்டும் போட்டால், அந்தத் தீவனத்தை அவை மிகக் குறைவாக உண்கின்றன. வேறு வழியே இல்லை இந்தத் தீவனத்தைத் தான் உண்ண வேண்டும் என்ற நிலையை உருவாக்கினால், சற்று கூடுதலாக உட்கொள்கின்றன. புத்தம் புதிதாக ஒரு உணவுப்பழக்கம் அறிமுகமாகினால்,மற்ற உயிரினங்கள் உடனடியாக ஏற்பது இல்லை. இயன்றவரை அந்த உணவுகளை நிராகரிக்கின்றன. காரணம், 'இதை ஏன் நான் உண்ண வேண்டும்?'என்ற கேள்வி அவற்றின் உணர்வில் பொதிந்துள்ளது.

'மனிதர்கள் மட்டும் தான் 'ஏன்?' எனக் கேட்பார்கள். மனிதர்களுக்கு மட்டும்தான் பகுத்தறிவு உள்ளது. என்பது போன்ற கதைகள் கடந்த நூற்றாண்டில் எழுதப்பட்டது. எல்லா உயிரினங்களுக்கும் பகுத்தறிவு உண்டு. மான்கள் மலம் தின்பது இல்லை. முயல்கள், எலிகளை வேட்டையாடுவது இல்லை. மூத்திர நாற்றம் அடிக்கும் வைக்கோலை மாடுகள் மேய்வது இல்லை. வேதிப்பொருள் கலக்கப்பட்ட இனிப்புகளை எறும்புகள் சீண்டுவது இல்லை. கிடைக்கும் எல்லா மரங்களிலும் தூக்கணாங்குருவிகள் கூடுகட்டுவது இல்லை. ஒவ்வோர் உயிரினமும் தமக்கு எது தேவை எது தேவையில்லை என்பதைநன்குபகுத்தறிந்துதான்வாழ்கின்றன. யானையின் பகுத்தறிவைக்கண்டு எல்லா விலங்கியலாளர்களும் வியக்கின்றனர். நாய்களின் பகுத்தறிவு எவ்வளவு மேன்மையானது என்பது, நாய் வளர்ப்போர் அனைவருக்கும் தெரியும்.

மனிதகுலம் மட்டும் ஏன் துன்பங்களில் சிக்குகிறது... நோய்வாய்ப்படுகிறது என்றால், "ஏன்?" என்ற கேள்வியைக் கேட்காத உயிரினமாக மனிதர்கள் மாறிப்போனதுதான் என்பது என் எண்ணம்.

உங்கள் வீட்டில் உள்ள சிறுவர்களுக்கான தின்பண்டங்கள் மற்றும் ஊட்டச்சத்துப் பொருட்களை எடுத்துப் பாருங்கள். அவற்றில் என்னென்னவோ எழுதப்பட்டுள்ளன. அவை எல்லாம் நன்மை தரக்கூடியவை என நினைக்கின்றீர்கள்.

புரதம் (protein) எனும் ஒரு சத்துப் பொருளை முதலில் அறிந்து கொள்வோம். 'இதில் புரதம் உள்ளது' என்ற வாசகம் உங்களுக்குப் பிடித்தமானது. அந்தப் பொருளில் உள்ள புரதம் உண்மையில் எங்கு இருந்து எடுக்கப்பட்டது என உங்களுக்குத் தெரியுமா? அதில் உள்ள புரதத்தின் அளவு உங்கள் குழந்தைக்கு கூடுதலானதா?... குறைவானதா? எனத் தெரியுமா? எல்லாவற்றுக்கும் மேலாக, உங்கள் குழந்தை புரதக்குறைபாட்டால் அவதிப்படுகிறதா? 'ஆம்' என்றால், புரதத்தை வழங்கக் கூடிய உணவுகள் நம்மிடம் இல்லையென நினைக்கிறீர்களா? உங்கள் குழந்தையின் உடலில் புரதக் குறையாடு இல்லை என்றால், நீங்கள் வழங்கும் அந்த உணவு அல்லது தின்பண்டத்தில் உள்ள புரதம் குழந்தையின் உடலில் செய்யப் போகும் தீவினைகளைப் பற்றி அறிந்திருக்கிறீர்களா?

இவை எல்லாம் மனிதராகப் பிறந்த நாம் எழுப்ப வேண்டிய கேள்விகள். இவ்வாறாக கேள்விகளை எழுப்புவதும், இவற்றிற்கான விடை கிடைக்காவிட்டால் அந்தப் பொருட்களை நிராகரிப்பதும் தான் உண்மையான பகுத்தறிவு. 'நவீன அறிவியல் மேதைகள் எதைச் சொன்னாலும் அது சரியானது தான்' என நம்புவது மூடநம்பிக்கை.

குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் தின்பண்டங்களில் நிகழும் ஊட்டச்சத்து விளையாட்டுக்களின் ஆபத்துக்களில் வெகு சிலவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

உடல் இயக்கத்திற்கு துணைபுரியும் அமிலங்களில் அமினோ அமிலம் (amino acid) என்பது ஒருவகை. ஏறத்தாழ 500 வகையான அமினோ அமிலங்களை இதுவரை நவீனர்கள் கண்டறிந்துள்ளனர். அவற்றில் வெகுசில வகைகள் மட்டும் மனித உடலில் உள்ளன. அமினோ அமிலங்களின் ஒருவகையான கூட்டுச்சேர்க்கை தான் புரதம் எனும் சத்து. இந்த அமினோ அமிலக் கட்டு, பல்லியில் உண்டு. பாம்புகளிலும் உண்டு. இந்தப் புரதச் சத்து கரப்பான் பூச்சிகளில் உண்டு. நத்தையிலும் உண்டு.

குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கான உணவுகளில் அல்லது தின்பண்டங்களில் கலக்கப்படும் புரதம், எந்த வகை உயிரினங்களில் இருந்தும் எடுக்கப்படுகின்றது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா! புரதம் என்பது தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் செயற்கைப் பொருள் அல்ல. உயிருள்ள ஊட்டச்சத்து. புரதத்தின் மூலக்கூறுகளில் உள்ள அமினோ அமிலங்கள் மனித உடலின் இயக்கத்திற்குத தேவையானவை. 'பிராய்லர் கோழிகளில் அதிகப் புரதம் உள்ளது' என்று தொடர்ந்து விளம்பரம் செய்யப்படுகின்றது. பிராய்லர் கோழியில் உள்ள புரதம் அந்தக் கோழியின் உடலை வெறும் 33 நாட்களில் பருமனாக்கிவிடும் மூலக்கூறுகளைக் கொண்டுள்ளது. அந்தப் புரதம் மனிதர்களின் உடலில் சேர்ந்தால் அதன் மூலக்கூறுகளில் நிகழும் மாற்றங்களை இதுவரை முழுமையாக அளந்தவர் எவரும் இல்லை. ஆனால் மேலைநாடுகளில் இவ்வாறான இறைச்சிகளை அதிகம் உண்போர், மிகவும் பெருத்து, கனத்த உடல்களுடன் அவதிப்படுவதைக் காண்கின்றோம்.

சுண்ணாம்புச் சத்து (calcium) என்ற பெயரில் கலக்கப்படும் பொருட்களைப் பற்றியும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். நரம்புகளின் இயக்கம், மூளை நரம்புகளின் வழியாக கடத்தப்படும் செய்தித்தொடர்புகள், கருப்பையில் கரு தங்குவதற்கான சூழல் ஆகியவற்றை சுண்ணாம்புச்சத்தின் ஒருவகை தீர்மானிக்கின்றது. சுண்ணாம்புச்சத்துக்கள் மூன்று வகையில் கிடைக்கின்றனஞ். கல்சியம் கார்பனேட், கல்சியம் பாஸ்பேட், கல்சியம் சிட்ரேட் ஆகியவை. இவற்றில் முதல் வகையான கல்சியம் கார்பனேட்தான் மிக அதிக அளவில் கிடைக்கின்றது. சிப்பிகள், நத்தை ஓடுகள் போன்றவற்றில் இருந்தும் இன்னபிற உயிரிளங்களில் உடல் உறுப்புக்களில் இருந்தும் கல்சியம் கார்பனேட் உறிஞ்சப்படுகிறது. இந்தப் பொருளைச் சுத்திகரிப்புச் செய்து தான் உணவில் கலக்க வேண்டும் என்பது உலகெங்கும் உள்ள நல அமைப்புக்கள் வகுத்துள்ள விதி.

நன்கு சுத்திகரிக்கப்பட்ட சத்து தான் கல்சியம் சிட்ரேட். ஓரளவுக்குச் சுத்திகரிக்கப்பட்டது கல்சியம் பாஸ்பேட்.

நீங்கள் வாங்கும் தின்பண்டங்கள் மற்றும் உணவுகளில் உள்ள சுண்ணாம்புச்சத்து மேற்கண்டவற்றில் எந்த வகையை சேர்ந்தது என்று உங்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால்,'சுண்ணாம்புச் சத்து இருந்தால் தான் குழந்தையால் நன்கு வளர முடியும்' என்ற பரபரப்பை நீங்கள் நன்கு அறிவீர்கள். கல்சியம் கார்பனேட் எனும் வகை



நீங்கள் வாங்கும் தின்பண்டங்கள் மற்றும் உணவுகளில் உள்ள சுண்ணாம்புச்சத்து மேற்கண்டவற்றில் எந்த வகையை சேர்ந்தது என்று உங்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், 'சுண்ணாம்புச் சத்து இருந்தால் தான் குழந்தையால் நன்கு வளர முடியும்'

இரண்டு நாட்கள் எந்தவிதச் சச்சரவுகளுமின்றிக் கழிந்தன. மூன்றாவது நாள் ஒரு புகைப்படக்காரர் வீட்டிற்கு வந்திருந்தார். நான் ஹெலனிடம் நானும் அவளும் எனது சிற்றன்னை பெற்ற சகோதரிகளுமாகச் சேர்ந்து ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்வோமா எனக் கேட்டேன். இதுவரை நான் புகைப்படமெடுத்துக் கொண்டதேயில்லை. படத்தில் நான் எவ்வாறு இருப்பேனென்று பார்க்கவும் எனக்கு ஆவலாயிருந்தது. ஆனால் நிலைமை வேறுமாதிரியாக இருந்தது. புகைப்படக்காரர் ஹெலனை மட்டுமே படம் பிடித்தார். புகைப்படக்காரர் போனதுமே அப்பா தனது நண்பரின் மகனொருவன் ஹெலனை மணக்க விரும்புவதாக ஒரு செய்தியைச் சொன்னார். என்னால் இந்தச் செய்தியின் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஹெலன் வீடு திரும்பியதையிட்டு அப்பா மகிழ்கிறாரா? அல்லது கூடிய சீக்கிரத்தில் அவளை வீட்டைவிட்டு விரட்ட முயல்கிறாரா? ஹெலனிடம் வீட்டுப்பாடத்தில் உதவி செய்யும்படி கேட்டேன். அப்போது தான் நாங்களிருவரும் நிம்மதியாகபேசிக்கொள்ள முடியும்.

"அப்பா சொன்னவனை உனக்குத் தெரியுமா?"

"நான் இதுவரை அவனைப் பார்த்ததில்லை"

"முன்பின் தெரியாத ஒருவனை மணந்து கொள்ள உனக்குப் பயமாக இல்லையா?"

'பொஸ்' என நாங்கள் அழைக்கும் கிழவன் முன்பு என்னிடம் முறை தவறி நடந்து கொண்டதை நான் நினைத்துக்கொண்டேன்.

"ஹெலன் ஆண்கள் நல்லவர்களல்ல, அவர்களை நம்பமுடியாது. நீ அவனைக் கல்யாணம் செய்துகொண்டால் நடக்கக் கூடாதவை எல்லாம் நடக்கலாம்." என்னை ஒருமுறை உற்றுப் பார்த்துவிட்டு

"எக்காரணம் கொண்டும் நான் அவனை மணந்துகொள்ளப் போவதில்லை" எனக் ஹெலன் சொன்னாள்.

அப்பாவிடமும் இதே பதிலைத்தான் ஹெலன் சொன்னாள். அதிலிருந்து அப்பா எந்த நேரமும் அவளுடன் எரிந்து விழுந்து கொண்டும் அவளைத்துன்புறுத்துவதுமாகவே இருந்தார்.

ஹெலனின் வேலைப்பழு ஏறிக்கொண்டே போனது. ஓர் ஒட்டகம் மாதிரி அவள் வேலை செய்து கொண்டிருந்தாள். நான் பாடசாலை முடிந்து வந்ததும் என்னாலான உதவிகளை அவளுக்குச் செய்தேன். அப்பா வேலையால் திரும்பி வந்ததுமே ஹெலனை உணவு தயாரிக்கச் சொல்வார். எனக்குத் தெரிந்தளவில் கணவன் மனைவியைத் தான் சமையல் செய்யச் சொல்லவேண்டும். பிள்ளைகள் தண்ணீரோ தேனீரோ தரலாம். அவரது நடத்தை ஏதோ அவரின் மனைவி செத்து விட்டாள் என்பது போலிருந்தது. துரதிர்ஷ்டவசமாக அவரின் மனைவி



# குழந்தைப் போராளி

சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா

உயிருடன் தான் இருந்தார்.

ஒரு நாள் ஹெலன் பக்கத்து வீட்டுப் பெண்களுடன் எங்கேயோ வெளியே போயிருந்தாள். இரவுணவு தயாரிக்கும் நேரமாகியும் அவள் வீட்டுக்கு வரவில்லை. சிற்றன்னையே அன்றிரவில் முணுமுணுத்துக் கொண்டு சமையல் செய்தார். ஹெலன் திரும்பி வந்ததுமே அவர் தனது கோபத்தைக் காட்டினார். " பிசாசே எங்கே ஊர் மேயப் போனாய்?" எனச் சிற்றன்னை கொக்கரிக்க ஹெலன் கட்டுக்கடங்காத ஆத்திரத்துடன் சிற்றன்னையுடன் மோதினாள்.

"உனது கணவனுக்கு நீ தான் சமைத்துக் கொடுக்க வேண்டும். நான் அவரது மகள்... ஏன் நான் ஒவ்வொரு நாளும் அவரின் உணவைத் தயாரிக்க வேண்டும்? வாயைப் பொத்திக்கொண்டு போவதுதான் உனக்கு நல்லது." ஹெலனின் சீற்றம் சிற்றன்னையின் அகங்காரத்தைக் குறைக்காவிடினும் ஹெலன் சொல்வது ஓரளவு உண்மை எனபது அவருக்குப் புரிந்திருக்க வேண்டும்.

அப்பா வாசற்படியில் கால் வைத்திருக்க மாட்டார், சிற்றன்னை கண்ணீருடன் ஓடிப்போய் அவர் முன்னே நின்று முறையிட்டுப் புலம்பத் தொடங்கினார். நடந்ததற்கும் அவர் முறையிட்டுப் புலம்பியதற்கும் சம்பந்தமே இல்லை. அப்பா என்னைப் பார்த்து என்ன நடந்ததெனக் கேட்டார். 'நடந்த உண்மையைச் சொன்னால் நீ படாத பாடுகளைப் படுவாய்' எனச் சிற்றன்னையின் அனல் பறக்கும் கண்கள் என்னை எச்சரித்தன. இந்தச் சிக்கலிலிருந்து நான் தப்பிப்பதற்கான ஒரே வழி பொய் சொல்வதுதான். நான் இவர்களது சண்டையைப் பார்க்கவே இல்லையெனச் சாதித்தேன். இப்போது அப்பா ஹெலனைக் கூப்பிட்டார். அவளுக்குத் தண்டனை கொடுப்பதே அவரின் நோக்கம். ஹெலனோ கோபத்தின் அரசியாக நின்றிருந்தாள். ஒரு கூட்டம் தேனீக்களை உயிருடன் விழுங்கியவள் போல அவள் துடித்துக்கொண்டிருந்தாள்.

"நீ உனது மனைவியின் பொய்களை மாத்திரமே நம்புகின்றாய். நீ எப்படிப்பட்ட தகப்பன்? பிள்ளைகளைப் பற்றிய எந்தக் கவலையோ பரிவோ உனக்கில்லை, ஆனால் அடிப்பதற்கும் வதைப்பதற்கும் மாத்திரம் நீ என்றுமே பின் நிற்பதில்லை."

ஹெலனின் துணிவு என்னைப் பயத்தால் நடுங்கச் செய்தது. என்னால் நிமிர்ந்து பார்க்கவே முடியவில்லை. ஹெலனின் சீற்றத்திற்குப் பின் பெருமழை பெய்து ஓய்ந்தது போல அங்கே அமைதி நிலவியது. எனக்கு ஏன் எல்லோருக்குமே ஹெலன் உண்மையைத் தான் பேசிக்கொண்டிருக்கிறாள் என்பது புரிந்தது. ஒரு மாதிரியாகத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நான் பார்வையை அப்பாவிடம் உயர்த்தினேன். அப்பாவின் முகம் ஆத்திரத்தில் உப்பி வீங்கியிருந்தது. அதுவே அந்த இடத்திலிருந்து என்னைத் துரத்தப் போதுமானதாயிருந்தது. நான் மெதுவாக அங்கிருந்து நழுவ முற்பட்ட போது ஹெலன் அப்பாவை நோக்கி

"என்னை அடிப்பதற்கு மட்டும் நினைக்காதே! நான் இன்னும் சிறு பிள்ளையல்ல, நீ என்னை அடித்தால் நானும் உன்னைத் திருப்பி அடிப்பேன். இனி எப்போதும் என்னை அடிப்பதை நினைத்தும் பார்க்காதே!". எனச் சவால் செய்தாள்.

அப்பாவின் இருண்ட பக்கத்தை என் சகோதரியைத் தவிர வேறொருவரும் வெளிச்சம் போட்டுக் காட்டத் துணிந்ததில்லை. அப்பாவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. வெகு நேரமாக வெட்கத்துடன் போராடிக் கடைசியில் அவர் ஹெலனை வீட்டைவிட்டு வெளியேறும்படி கத்தினார். ஹெலனோ " முடியாது, நான் இங்கேதான் இருப்பேன். என்னைக் கொல்ல விரும்பினால் இப்போதே நீ என்னைக் கொல்லலாம்... நீ ஏன் என்னைப் பெற்றாய்? நீ எனது உண்மையான தந்தை இல்லையா? நீ எனது உண்மையான தந்தை இல்லையென்றால் எனக்கு மகிழ்ச்சி தான். நீ உண்மையான தந்தையாய் இருந்தால் நான் இங்கிருந்து போகப்போவதில்லை" எனப் பதிலுக்குக் கத்தினாள். தொடரும்...

---

மிகவும் விலை குறவாகவே கிடைக்கின்றது. ஆகவே சுத்திகரிக்கப்படாத நிலையில் உள்ள இந்தச் சுண்ணாம்புச்சத்தை தின்பண்டங்கள் மற்றும் உணவுப்பொருட்களில் கலப்பது பரவலாக உள்ள நடைமுறை.

ஒருவேளைக்கு 500 மில்லிலீற்றர் சுண்ணாம்புச்சத்து மட்டும் தான் மனித உடலில் சேர வேண்டும். அதற்கும் கூடுதலாகச் சேர்ந்தால் மோசமான விளைவுகள் உருவாகும் என்பது நவீன மருத்துவத் துறையின் அறிவிப்பு.

நீங்கள்வாரி வழங்கும் பொருட்களில் எவ்வளவு சுண்ணாம்புச்சத்து உள்ளது. எனப் பார்க்கிறீர்களா? 500 மில்லிகிராம் மட்டுமே உள்ளபொருட்களை, உங்கள் பிள்ளை சாப்பிடுவதாக வைத்துக் கொள்வோம். அதே தின்பண்டத்தைஅல்லது உணவைஅன்றாடம் சாப்பட்டால் அந்தக் குழந்தையின் உடலில் சேரும் சுண்ணாம்புச்சத்தின் அளவை எப்படிக்கண்காணிக்க முடியும்?

ஒருபொருளில் மட்டும் ஊட்டச்சத்துக்கள் இருந்தால், அதை தவிர்க்கலாம். இப்போதைய குழந்தைகளுக்கான உணவுகளிலும் தின்பண்டங்களிலும் ஊட்டச்சத்துக்களின் பெயர்கள் நீக்கமற நிறைந்துள்ளன. இவ்வளவு

**கல்சியம் கார்பனேட் வகை சுண்ணாம்புச்சத்து நீரில் எளிதாகக் கரையாது. இந்தச் சத்துக்களை உணவிலும் தின்பண்டங்களிலும் கலந்தால் அவற்றை சாப்பிடும் பிள்ளைகளுக்கு சிறுநீரக நோய்களும் கல்லீரல் தொல்லைகளும் மிகும்.**

பொருட்களில் இருந்தும் குழந்தைகளின் உடலில் சேகரமாகும் சுண்ணாம்புப் புரதமும் மற்றச்சத்துக்களும் என்னென்ன விளைவுகளை உருவாக்கும் என்பதை நவீன மேதைகள் கண்டுகொள்வதேயில்லை. நமக்கு பகுத்தறிவு உள்ளது. நாம் தான் அவற்றைப் பற்றிய கேள்விகளை எழுப்ப வேண்டும். எல்லா உயிரனங்களும் படைப்பின் விதிகளை எவ்வாறு புரிந்து கொண்டு வாழ்கின்றனவோ, அதேபோல நாமும் வாழ வேண்டும்.

சுண்ணாம்புச் சத்தும் புரதமும் மிகுந்த உடல்கள் தான் இப்போது பெருகியுள்ளன. கல்சியம்கார்பனேட் வகைசுண்ணாம்புச்சத்து நீரில் எளிதாகக் கரையாது. இந்தச் சத்துக்களை உணவிலும் தின்பண்டங்களிலும் கலந்தால் அவற்றை சாப்பிடும் பிள்ளைகளுக்கு சிறுநீரக நோய்களும் கல்லீரல் தொல்லைகளும் மிகும். இந்த இரு உறுப்புக்களும் சீரழியத்தொடங்கினால், பிள்ளையின் உடல் நலிவுற்று, நோய் எதிர்ப்பாற்றல் குறையும்.

நாம் நன்றாக வாழ்ந்த காலம் இருந்தது. அதிரசம், முறுக்கு, சீடை, தட்டை, கூழியம், கொழுக்கட்டை வகைகள், புட்டு வகைகள், எள் உருண்டை, கடலை உருண்டை, இலந்தை அடை, நெய்விளங்கா, கெட்டி உருண்டை, உள்ளிட்ட பலகாரங்களும் உணவுகளும் நம்மிடம் கொட்டிக்கிடந்த காலம் அது. இயற்கையான முறையில் விளைந்த தானியங்களும் பயிர்களும் அப்போது நம்மிடம் இருந்தன. இயற்கையான முறையில் எண்ணெய் ஆட்டும் செக்குகள் இருந்தன.


எந்தப் பருவத்தில் என்ன வகையான தின்பண்டங்களை உண்ண வேண்டும் என்ற முறையைக் கடைப்பிடிக்கத் தெரிந்த முன்னோடிகள் நம்முடன் வாழ்ந்தார்கள்.

'பருவம் எய்தாச் சிறுமிகள் எள்ளில் செய்த பலகாரங்களை அதிகம் உண்ணக் கூடாது. செரிமானம் குறைவாக உள்ள பிள்ளைகள் கெட்டி உருண்டையும் கடலை உருண்டையும் அதிகம் தின்னக்கூடாது' என்பது போன்ற அறிவுரைகளை அந்த முன்னோடிகள் வழங்கினார்கள்.

அந்தக் காலத்தில் நம்மிடம் தின்பண்டங்களுக்கான நிறுவனங்கள் இல்லை. ஊட்டச்சத்துக்கான வணிக மருத்துவர்கள் இல்லை. அந்தக் காலத்தில் நம் பிள்ளைகள் சேற்றில் இறங்கி ஆடினார்கள்; மழையில் நனைந்தார்கள்; வெயிலில் அலைந்தார்கள். நோய்களுமில்லை.

நீங்கள் விரும்பினால் அந்தக் காலத்தை மீட்டெடுக்க இயலும். இந்த சூழ்நிலையில் எனக்குத் தெரிந்த வழிகள் இரண்டு. ஒன்று, நவீன ஊட்டச்சத்து வல்லுனர்களிடம் கேள்விகளை எழுப்பி, தெளிவு பெறுவது; இன்னொன்று, நன்றாக வாழ்ந்த காலத்தை நோக்கிப் பயணிப்பது. உங்களுக்கு பகுத்தறிவு உள்ளது' நீங்கள் சுயமாக முடிவு எடுக்கலாம்.

திரும்புவோம்..



# “1990 ஒக்டோபர் 30”

## நினைவு நாள் வடக்கு முஸ்லிம் சிவில் சமூக செயற்பாடுகளில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்த வேண்டும்.

அ.அஸ்மின்

**1990** ஒக்டோபர் 30ம் நாள் வடக்கில் இருந்து ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களும் படிப்படியாக ஆயுதமுனையில் பலவந்தமாக இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்ட இறுதி நாளாகும். ஒவ்வொரு வருடமும் இதனை வடக்கு முஸ்லிம்கள் நினைவுகூர்ந்து வருகின்றார்கள். இவ்வாறான நினைவுகூறல்கள் இடம்பெறுவது அவர்கள் மீது இழைக்கப்பட்ட மனித உரிமை மீறலை நினைவுபடுத்தவும், அவர்களுக்கான நீதி நிலைநாட்டப்படல்வேண்டும் என்பதை உலகிற்கும் எடுத்துச்சொல்லவும், அதற்கும் அப்பால் இதுபோன்ற நிகழ்வு இனியொரு போதும் நிகழக்கூடாது என்பதை வலியுறுத் துவதற்குமேயாகும்.

1990களில் ஜனநாயகம் சிறையிடப் பட்டிருந்த சூழலில், ஆயுதங்களே எல்லாவற் றையும் தீர்மானிக்கின்ற சூழலில், சரியெது பிழையெது என்பதை சாதாரண காரணிகளின் அடிப்படையில் மக்களால் தீர்மானிக்க முடியாத சூழலில், உரிமைக்காகப் போராடுகின்ற ஒரு குழுவினர் இன்னுமொரு சமூகத்தின் உரிமைகள் குறித்து சற்றேனும் சிந்திக்காத சூழலில் வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டார்கள்.

1991 இலேயே முதல்முறையாக “கருப்பு ஒக்டோபர்” என்னும் வார்த்தையை சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் பயன்படுத்தினார். முதலாவது எதிர்ப்பு நிகழ்வு மருதானை பெரிய ஜும்ஆப் பள்ளிவாயல் முன்றலில் இடம்பெற்றது. கிழக்கிலங்கையின் முஸ்லிம் படுகொலைகள் மற்றும் வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றம் போன்ற அம்சங்களே அப்போது முக்கியத் துவப்பட்டிருந்தன. வடக்குக் கிழக்கு முஸ்லிம் களின் மீது தமிழ் ஆயுதக் குழுக்கள் பல்வேறு தாக்குதல்களை நடாத்தியிருந் தார்கள். மறுபுறத்தில் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் தமிழ் மக்களின் மீதும் வன்முறைகள் அரங்கேற்றப்பட்டிருந்தன. இரு சாராரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக்கொண்டார்கள். கூடுதல் குறைதல்கள் இருந்தபோதிலும் கிழக்கிலங்கையில் இரண்டு தரப்பிலும் வன்முறைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

ஆனால் வடக்கு முஸ்லிம்கள் முழுமை யான நிராயுதபாணிகளாகவே இருந்தார்கள். வடக்கில் முஸ்லிம் மக்களால் தமிழ் ஆயுதக் குழுக்களுக்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ எவ்விதமான வன்முறைகளும் நிகழ்ந்தேறியதாக ஒரு பதிவுகளும் இல்லை. இதுவே வடக்கு முஸ்லிம்களின் மீது இழைக்கப்பட்ட அநீதி மிக மிக கொடியது என்று சொல்வதற்குப் போதுமானதாகும். இது ஒரு பாரிய மனித உரிமை மீறல். அது மட்டுமன்றி அவ்வாறான ஒரு நிகழ்வு இலங்கையில் இனியெப்போதும் இடம்பெறக் கூடாது என்பதையும் உறுதிப்படுத்தவேண்டிய பொறுப்போடு அத்தினத்தை நாம் நினைவு கூர்கின்றோம்.

2009 யுத்த நிறைவு வரை “பலவந்த வெளியேற்றம்” குறித்த நினைவு தினங்கள் அனுஷ்டிக்கப்பட்டன. ஆனால் அடுத்தது என்ன என்பது பற்றிய தெளிவில்லாத சூழ்நிலையிலேயே அவை நிகழ்ந்தேறின. ஆனால் 2009ற்குப் பின்னர் குறித்த நினைவு தினங்கள் வடக்கு முஸ்லிம்களின் விடயத்தில் முக்கியத்துவப்பட்டிருக்கின்றது. எமது தாயக மண்ணிலே மீளக்குடியேறுவதற்கான வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றது. தமிழ் மக்களோடு உறவாடக்கூடிய சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. யுத்தம் ஏற்படுத்திய பொதுவான பாதிப்புக்களில் இருந்து வடக்கு மக்கள் அனைவரும் மீளவேண்டும் ஒரு புதுவாழ்வை நோக்கி அவர்கள் நகரவேண்டும் என்பது இங்குள்ள எல்லா மக்களின் விருப்பமுமாக மாறியிருக்கின்றது.



எனவேதான் 2009களின் பின்னர் முஸ்லிம் களின் வெளியேற்றம் குறித்த நினைவுதினங்கள் கூடுதல் முக்கியத்துவம் பெறுகின்றது.

2009களில் யாழ்ப்பாணத்திலே மௌலவி சுபியான் அவர்கள் ஒக்டோபர் 30ஐக் குறிக்கும் நிகழ்வொன்றினை முன்னைய நாள் அமைச்சர் டக்ளஸ் தேவனந்தாவை பிரதம விருந்தினராக அழைத்து ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த நிகழ்விற்கு “கௌரவமான மீள்குடியேற்றம்” என்ற கருப்பொருள் அமைக்கப்பட்டிருந்தது. அங்கு உரை நிகழ்த்திய டக்ளஸ் தேவனந்தா உங்களுடைய மண்ணிலே நீங்கள் உரிமை யோடு வந்து குடியேறவேண்டும், இதனை கௌரவமான மீள்குடியேற்றம் என்று சொல் லக்கூடாது உரிமையுடனான மீள்குடியேற்றம் என்று சொல்லவேண்டும் என்று குறிப்பிட் டார்.

2010 களிலே யாழ்ப்பாண முஸ்லிம் சமூக அமைப்புக்களின் கூட்டமைப்பு அவ்வாறான ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. அந்நிகழ்விற்கு யாழ் மாநகரசபையினுடைய முன்னைய நாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா பிரதமவிருந்தினராக அழைக்கப் பட்டார். அவர் அங்கு உரை நிகழ்த்தும்போது பாசிசப் புலிகளே முஸ்லிம்களை வெளி யேற்றினார்கள், தமிழ் மக்கள் அல்ல. புலிகளுக்கு எதிராகவும் புலிகளை வளர்த்த வர்கள் ஆதரித்தவர்களுக்கு எதிராகவும் உங்களுடைய மீள்குடியேற்றத்தை வெற்றி கரமாக நிறைவேற்ற வேண்டும் என்று பகிரங்கமாக அழைப்பு விடுத்தார்

2011இலே யாழ்ப்பாணம் கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் ஏற்பாட்டிலே அவ்வாறான ஒரு நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டது. இந்த நிகழ்வில் பேராசிரியர் சிவச் சந்திரன் கலந்து சிறப்பித்தார். தமிழ் முஸ்லிம் உறவைக் கட்டியெழுப்புவதன் தேவையை அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

2012இலே அமைச்சர் றிஷாத் பதியுத்தீன் கொழும்பிலே ஒரு பிரமாண்டமான நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார். பிரதம விருந்தினராக மஹிந்த ராஜபக்ஷ அழைக்கப்பட்டிருந்தார். வெளிநாட்டுத்தூதுவர்கள் என பல முக்கியஸ்தர்கள் அழைக்கப்பட்டி ருந்தார்கள். வடக்கு முஸ்லிம்களின் மீள்குடி யேற்றத்தேவைகளை குறித்த பிரமாண்டமான அவையிலே முன்வைப்பதுவே குறித்த நிகழ்வின் பிரதான நோக்கமாக இருந்தது. மஹிந்த ராஜபக்ஷ வடக்கு முஸ்லிம்களை முழுமையாக மீள்குடியேற்றியே தீருவேன் என்று இதில் உறுதிமொழியளித்தார்.

2013இலே யாழ்ப்பாணத்தில் அவ்வாறான ஒரு நிகழ்வு “தகவல் வழிகாட்டல் மத்திய நிலையம் யாழ்ப்பாணம்” என்னும் நிறுவனத் தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனது பிரதம பேச்சாளராக வடக்கு மாகாணசபையின் போனைத்தலைவருமாகிய சீ.வி.கே சிவஞானம் அழைக்கப்பட்டிருந்தார். சீ.வி.கே சிவஞானம் உரை நிகழ்த்தும்போது “நான் மனம் விட்டு ஒரு சில விடயங்களைப் பேச விரும்புகின்றேன். வடக்கின் ஏனைய பிரதேசங்களில் இருந்து முஸ்லிம்களை இயக்கம் போகச் சொல்லியிருக்கும் செய்தியை நான் அறிந்து அதுகுறித்து விசாரிப்பதற்காக இயக்கத்தின் உள்ளூர் தலைவர்களை அணுகி யிருந்தேன். அவர்கள் அது “தலைமைப் பீடத்தின் முடிவு” என்ற வார்த்தையோடு நிறுத்திக் கொண்டார்கள். அப்போது யாழ்ப்பாணத்து முஸ்லிம்களை வெளியே போகச் சொல்லமாட்டார்கள்தானே என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கும் இயக்கத்துக்கும் நெருக்க மான தொடர்புகள் இருந்தன. அது எனக்கு நன்கு தெரியும், மறுநாள் பிற்பகல் நேரத்தில் இயக்கத்திடமிருந்து ஒரு தகவல் வந்தது யாழ்ப்பாண முஸ்லிம்களை நாளை எழும்பப் போகின்றோம் என்பதுவே அந்தத் தகவல். உடனே நான் சைக்கிளை எடுத்துக்கொண்டு பொறுப்பதியில் இருந்த இயக்கத்தின் அலுவலகத்திற்குச் சென்றேன். நிலைமைகளை விசாரித்தேன். அப்படிச் செய்ய வேண்டாம் என்று வாதிட்டேன். காக்குவாதப் பட்டேன். எனது பேச்சுக்கு மதிப்பு இருக்கவில்லை. நான் முஸ்லிம் மக்கள் வாழ்ந்த பகுதிக்கு வந்தேன். என்னால் அந்தத் தகவலை வெளிப்படையாகச் சொல்ல முடியாது. அது சரியானதாக இல்லை. நான் சுல்தானுடைய வீட்டுக்கு வந்தேன். அவர் தேனீர் போடச் சொன்னார். இந்த நேரத்திலே வரமாட்டார்களா ஏதாவது பிரச்சினையா

என்று கேட்டார். நான் ஒரு பிரச்சினையும் இல்லை, ஆனால் ஏதாவது நடந்துவிடுமோ என்று எதிர்பார்த்துக்கொண்டுதானே இருக்க வேண்டும். இன்றைய சூழலில் எதுவும் நடக்கலாம் என்றுதானே இருக்கின்றது என்று கூறினேன்.

அந்த மோசமான நிகழ்வு இடம்பெற்றது. 1998இலே முஸ்லிம் வர்த்தகர்கள் யாழ்ப்பாணம் வரவேண்டும் என்று எனக்குச் செய்தி அனுப்பியபோது அவர்கள் வருவதற்கான அனுமதிக் கடிதத்தை இயக்கத்திடம் இருந்து பெற்றுக்கொடுத்து. யாழ்ப்பாண வர்த்தகர்களை ஒன்றுகூட்டி, பலாலியில் இருந்து பஸ்ஸிலே அவர்கள் வந்து இறங்கிய போது அவர்களை வரவேற்று செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தவனும் நானே.

எனவே ஒரு கசப்பான நிகழ்வு எம்முடைய கட்டுப்பாட்டையும் மீறி நடந்திருக்கின்றது. அதற்காக நாம் மனம் வருந்துகின்றோம். உங்களையும் எங்களது உறவுகளாக ஏற்று மீண்டும் இங்கேவந்து குடியேறுமாறு அன்போடு அழைக்கின்றோம்" என்றார்.


2014இலே மன்னார் மாவட்டத்திலே நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் ஏற்பாட்டிலே அவ்வாறான ஒரு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கள் தன்சார்பாக ஒரு பிரதிநிதியை அனுப்பியிருந்தார். அங்கும் தமிழ் முஸ்லிம் உறவின் முக்கியத்துவம் குறித்தே வலியுறுத்தப்பட்டது.

2015இலே யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்திலே நல்லிணக்கத்திற்கான மக்கள் அமைப்பு என்னும் அமைப்பினால் ஒரு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்நிகழ்வில் உரைநிகழ்த்திய பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமையானது ஒரு தவறு என்றும், அது மனித உரிமை மீறல் என்றும், அது ஒரு இனச்சுத்திகரிப்பு நடவடிக்கை என்றும் மிகவும் ஆணித்தரமாக எடுத்துரைத்தார். அதுமட்டுமன்றி கிழக்கில் முஸ்லிம் ஆயுததாரிகளால் அப்பாவித் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் தாக்குதல்களையும் கண்டிக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். அத்தோடு எங்களுடைய மக்களுக்காக உரிமை வேண்டும், நீதிவேண்டும் என்று கேட்கின்ற நாங்கள் இன்னுமொரு சமூகத்திற்கு அநீதியிழைக்க முடியாது.

எமக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்று பிரேரணை நிறைவேற்றுகின்ற வடக்கு மாகாணசபை வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது தவறு என்றும், அவர்கள் மீளவும் குடியேற்றப்படவேண்டும்என்றும் பிரேரணை நிறைவேற்றாமை வெட்கக்கேடான விடயம் என்றும் குறிப்பிட்டார்.

நான் மேலே குறிப்பிட்ட நிகழ்வுகள் வேறுபட்ட நபர்களால், வேறுபட்ட நோக்கங்களுடன், வேறுபட்ட தளங்களிலே நடாத்தப்பட்ட நிகழ்வுகளாகும். 2009-2015 வரையான காலப்பகுதியில் நிகழ்த்தப்பட்ட 7 நிகவுகளுமே அவையாகும். இந்த நிகழ்வுகள் வடக்கு முஸ்லிம்களாகிய எம்மைக் கடந்து போயிருக்கின்றனவே தவிர எம்மை நகர்த்திச் செல்லவில்லை என்ற மிகப்பெரிய உண்மையை இவ்விடத்தில் சொல்வது பொருத்தமாக இருக்கும். வடக்கு முஸ்லிம்களின் பேசுபொருள், அவர்களது பிரச்சினைகள், அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள், அவர்களது வாழ்வு, அவர்களும் வாழும் சூழலில் அவர்களோடு வாழ்கின்ற மக்களுடனான உறவுகள் என எல்லா விடயங்களிலும் ஒருவிதமான தேக்க நிலை நிலவுவதை நாம் உணர்கின்றோம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எமது வெளியேற்றத்தை தவறு என்று ஏற்றுக் கொள்கின்றார்கள், முஸ்லிம் மக்கள் மீள்குடியேறவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார்கள், சமூக நல்லிணக்கம் பற்றி சாதகமான கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். ஒட்டுமொத்த தமிழ் மக்களும் இதற்குத் தயாராக இல்லாவிட்டாலும் பெரும்பாலான தமிழ் மக்கள் எம்மை அரவணைக்கத் தயாராகவே இருக்கின்றார்கள். இதனைத்தான் நான் மேலே சுட்டிக்காட்டிய 7 நிகழ்வுகளும் எமக்கு உணர்த்தி நிற்கின்றது.



கடந்த 7வருடங்களில் எவ்விதமான மீள்குடியேற்றத் திட்டமிடல்களும் வடக்கு முஸ்லிம் மக்களை மையப்படுத்தி முழுமையாக இடம்பெறவில்லை. ஆனால் மீள்குடியேற்றம் குறித்து குறைகூறுகின்ற சமூகமாகவே நாம் இன்றுவரை இருக்கின்றோம். இந்த ஆக்கம் எழுதப்படும்வரை வடக்கிலே மீள்குடியேற வேண்டிய முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை என்ன என்பது பற்றி எவ்விதமான அதிகாரபூர்வமான தாவுகளும் எம்மிடையே கிடையாது. காணியற்றோர் எத்தனைபேர், எத்தனை பேருக்கு வீடுகள் தேவையென்றும் முறையான மதிப்பீடுகள் எமக்கு மத்தியிலே கிடையாது. இதுவரைக்குமான அரச பதிவுகள் அனைத்தும் மீள்குடியேற்றத்திற்காக விருப்பத்தோடு வந்து பதிவு செய்த ஒரு தொகுதியினருடையது மாத்திரம்தான். இன்னும் ஏராளமானவர்கள் அவ்வாறான பதிவுகளை மேற்கொள்ளவேண்டிய தேவையுடையவர்களாக இருக்கின்றார்கள் இவ்வாறாக வடக்கு முஸ்லிம் மக்களுடைய மீள்குடியேற்றம் மற்றும் இதர விடயங்கள் சீராகக் கையாளப்படாத சூழ்நிலையில் 2016 ஒக்டோபர் 30ம் எம்மை நோக்கி இன்னுமொருதடவை வந்திருக்கின்றது.

முன்னைய நிகழ்வுகளைப் போன்று இதனையும் ஒரு நிகழ்வாக மாத்திரம் நோக்காமல் வடக்கு முஸ்லிம்களின் சமூகச் செயற்பாடுகளில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்துகின்ற நிகழ்வாக இதனை நாம் நோக்கவேண்டும். அந்தவகையில் 2016ம் ஆண்டு ஒக்டோபர் 30 நினைவு நிகழ்வை வடக்கு முஸ்லிம் சிவில் சமூகம் ஏற்பாடு செய்திருக்கின்றது. இது வரவேற்கத்தக்க ஒன்றேயாகும். இதுவரைகாலமும் இடம்பெற்ற நிகழ்வுகளை விடவும் இம்முறை இந்நினைவு நிகழ்வு சற்று வித்தியாசமாக ஒழுங்கமைக்கப்படுதல் சிறப்பானது என்றே கருதுகின்றேன்.

வடக்கு முஸ்லிம்களுடைய விவகாரங்கள் பல்தொகுதிகளைக் கொண்டிருக்கின்றது. இதனை முழுமையாகப் புரிந்துகொள்வதும், அதற்கேற்ற திட்டமிடல்களையும் நகர்வுகளையும் முன்னெடுப்பது காலத்தின் தேவையுமாகும். வடக்கு முஸ்லிம்களுடைய விவகாரங்களைப் புரிந்துகொள்வதிலும் மேற்கொண்டு முன்னெடுக்கப்படவேண்டிய விடயங்கள் குறித்து ஆராய்வதற்கும் பின்வரும் விடயங்கள் எமக்கு துணை நிற்க முடியும்;

- வடக்கின் பூர்வீக முஸ்லிம்கள் யார்? அவர்களின் தற்போதைய எண்ணிக்கை என்ன? இதனை முழுமையாக வரையறுக்க முடியாவிட்டாலும், வடக்கில் இருந்து 1990களிலே வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் அனைவரும், அவர்களது சந்ததியினர் அனைவரும் வடக்கில் தாம் வாழ்ந்த பூர்வீக பிரதேசங்களில் தம்மை அரச அங்கீகாரமுள்ள நிறுவனத்தினூடாக பதிவு செய்தல் அவசியம் என்பதை வலியுறுத்தி நிற்கின்றது.
- 1990களிலே வடக்கிலே வாழ்விடக் காணிகளை, வாழ்வாதாரக் காணிகளை, விவசாயக் காணிகளை, பொதுத்தேவைக்கான காணிகளைக் கொண்டிருந்த வடக்கு முஸ்லிம்கள் அனைவரும் தம்முடைய காணிகளை நிலத்தை மீளவும் பெற்றுக்கொண்டுள்ளார்களா? அப்படி இல்லையெனின் அது குறித்து சிந்தித்து அவர்களுடைய காணிகளைப் பெற்றுக்கொள்தல் அவசியம், அதே போன்று வடக்கு முஸ்லிம்களில் காணித் தேவையுடைவர்களின் அளவு என்ன? இதன்மூலமாக எமது பூர்வீக நிலங்களில் எமக்கிருக்கின்றன காணிசார்ந்த இருப்பு சார்ந்த உரிமையை எம்மால் உறுதி செய்ய முடியும். எனவே எமது பூர்வீக நிலத்திலே காணிகளுக்கான கோரிக்கையை வடக்கு முஸ்லிம்கள் மிகப்பலமாக முன்வைக்க வேண்டும்.
- வாக்குரிமை குறித்து எமது நிலைப்பாடுகள் என்ன? வடக்கின் அனைத்து முஸ்லிம் வாக்காளர்களும் வடக்கிற்கே உரியவர்கள், அவர்களுடைய அனைத்து வாக்குகளும் வடக்கிலே பதிவு செய்யப்படுதல் அவசியம், அவர்கள் மீளக்குடியேறினாலும், அல்லது மீளக்குடியேற்றத்திற்கான விருப்பை வெளிப்படுத்தினாலும், அவர்களது வாக்குரிமை அவர்களது சொந்த மண்ணில் இருப்பதை உறுதி செய்யவேண்டும். இதற்கான பொறிமுறைகள் குறித்து நாம் ஆராய்ந்து அதற்கான தீர்வினை முன்வைத்தல் அவசியமாகும்.
- இழப்பீடுகள் குறித்த எமது மக்களினதும் தலைவர்களினதும் நிலைப்பாடுகள் எவ்வாறானவை, 1990களில் வெளியேற்றப்பட்டபோது எமது உடமைகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன, எமது வாழ்வாதாரம் அபகரிக்கப்பட்டது, எமது வாய்ப்புகள் இல்லாமலாக்கப்பட்டன, இவை எமது வாழ்வில் பல்வேறு எதிர்மறையான மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன, இவற்றுக்கான முழுமையான பொறுப்பினை இத்தகைய ஒரு மனித உரிமை மீறலை எம்மீது ஏற்படுத்தியவர்களும், அத்தகைய மனித உரிமை மீறல் நிகழ்ந்தபோது அதனைத் தடுக்காதிருந்த இலங்கை அரசாங்கமுமே ஏற்றுக்கொள்தல் வேண்டும். அந்த வகையில் இரண்டு தரப்பினரும் எமக்கான இழப்பீடுகளை முழுமையாகப் பெற்றுத்தருதல் வேண்டும்.
- மீள்குடியேற்ற உதவித்திட்டங்கள் அனைத்திலும் மீள்குடியேறுகின்ற முஸ்லிம் மக்கள் முழுமையாக உள்வாங்கப்படுதல் அவசியமாகும். வீடமைப்பு, வாழ்வாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி, சுகாதாரம் போன்ற விடயங்களில் குறிப்பாக கவனம்செலுத்தப்படுதல் வேண்டும்.
- சமூக நல்லிணக்கம் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படுதல் அவசியமாகும். வடக்கின் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் முரண்பாடுகளைக் கொண்டிருக்கின்ற சமூகங்கள் அல்ல, நிறையவே உடன்பாடுகளைக் கொண்டிருந்த சமூகங்களாகும். முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட அநீதிகள் ஒருபோதும் தமிழ் மக்களால் மேற்கொள்ளப்பட்டவையாக நோக்கக் கூடாது. தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் பலமான பரஸ்பரப் புரிந்துணர்வை அதிகப்படுத்துவதன் மூலம் நிலைமைகளைச் சீர்செய்தல் சாத்தியமே.
- மேற்படி விவகாரங்களை வடக்கு முஸ்லிம் சிவில் சமூகத்தினர் அரசியலுக்கு அப்பால் பொதுநோக்கோடு உடன்பாடு காணுதலும், ஒருமித்து செயற்படுதலும் அவசியமாகின்றது. ஆரம்பமாக இதற்கான ஒரு பொறிமுறை வடக்கு முஸ்லிம் சிவில் சமூகமட்டத்தில் உருவாக்கப்படுதல் அவசியமாகின்றது.
- மேற்சொல்லப்பட்ட ஒழுங்கில் வடக்கு முஸ்லிம்களின் விவகாரங்கள் முதன்மையாக வடக்கு முஸ்லிம் சமூகமட்டத்திலும், அடுத்து வடக்கின் தமிழ் மக்கள் மத்தியிலும், இலங்கை அரசாங்கத்தோடும், சர்வதேச சமூகத்தோடும் விரிவாக கலந்துரையாடப்பட்டு, வடக்கு முஸ்லிம்கள் விடயத்தில் சீரான புரிதலை அனைத்துத் தரப்பினரிடையேயும் ஏற்படுத்துதல் அவசியமாகும்.
- வடக்கு மாகாணசபையினூடாக உள்ளூராட்சி மன்றங்களினூடாக, மத்திய அரச நிறுவனங்களினூடாக, தொண்டு நிறுவனங்களினூடாக என பல்வேறு தளங்களில் வடக்கு முஸ்லிம்களுக்கான ஒரு விஷேட மீள்குடியேற்றப் பொறி முறையினை செயற்படுத்த முடியும்
- இவ்வாறான ஒருபொறிமுறை உருவாகின்ற போது வடக்கு முஸ்லிம்களின் விவகாரங்கள் எவருக்கும் பாதிப்பில்லாதவகையிலும், எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியவிதத்திலும் கையாளப்பட முடியும். எனவே மேலே குறிப்பிட்ட விடயங்களின்

அடிப்படையில் வடக்கு முஸ்லிம் சிவில் சமூகம் தன்னுடைய நகர்வுகளை முன்னெடுப்பதோடு, குறித்த "1990 ஒக்டோபர் 30" நினைவு தின நிகழ்வுகளை திறம்பட முன்னெடுப்பது சிறப்பானதாகும்.






இந்த ஸ்ரைல் எல்லோருக்கும் பொருந்தும். அதிகமாக மெல்லிய முகத் தோற்றமுடையவர்களை விட பரந்த முகத் தோற்றம் உள்ளவர்களுக்கு தான் அதிகம் அழகாக இருக்கும். சாதாரணமாக கொட்டுன் சாறிகள் சல்வார்கள் ஜீன்ஸ் ரொப் அணியும் பொழுது இந்த கெயாஸ்ரைலினை போட்டு கொள்ள முடியும்.

# வீட்டிற்கு இது அழகு

வீட்டுக்கு வெள்ளை நிற பெயின்ட் எந்த ஒரு வசீகரத்தையும் கொடுப்பதில்லை. ஆனால் அதை உங்கள் கற்பனை திறன் கொண்டு அலங்கரித்தால் அழகு கூட்ட முடியும்.

வெள்ளை நிற பூச்சு பூசுவதால் இயற்கையான வெளிச்சம் வீட்டிற்கு கிடைக்கும், வீடு சற்றே பெரியதாக காணப்படும், எல்லாவற்றையும் விட சுத்தமாக காணப்படும். இந்த வெள்ளை நிறத்தை இன்னும் அழகுப்படுத்த இதோ சில டிப்ஸ். உங்கள் வீட்டின் வெள்ளை நிறத்தின் மீது உங்கள் கற்பனையை செலுத்துங்கள். உங்கள் கடந்த காலத்து நினைவாக வைத்திருக்கும் பொருட்களைக் கொண்டு அலங்காரம் செய்யுங்கள். இவ்வாறு செய்யும் பல வித கற்பனைகள் உங்கள் வீட்டின் அழகை மேலும் கூட்டும் என்பதில் சந்தேகம் இல்லை. இப்பொழுது வெள்ளை நிற சுவற்றை அலங்கரிக்கும் சில கற்பனை வழிகளைப் பார்ப்போமா.

மனம் கவர்ந்த நினைவுகள் நீங்கள் ஆசையாக எடுத்து கொண்ட புகைப்படங்கள் உங்கள் நினைவுகளை மகிழ்ச்சிப்படுத்துபவை. அவற்றை சேகரித்து வீட்டின் சுவர்களை அலங்காரம் செய்யுங்கள். புகைப்படங்களின் சட்டங்களை மின் விலக்குகள் கொண்டு அலங்காரம் செய்தல் கூடுதல் அழகை கொடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.




# பலாக்காய் கறி

**தேவையான பொருட்கள்:** பிஞ்சுப் பலாக்காய் 01, தேங்காய் 01, மஞ்சள் 1துண்டு, இஞ்சி 1துண்டு, உள்ளி 35பல்லு, மிளகு 1 தே.கரண்டி, சின்ன சீரகம் 1தே.க, தேங்காய்ப்பூ 2மே.க, புளி 1சிறு உருண்டை, மிளகாய் தூள் 2மேசை.க, தேங்காயெண்ணை 3மே.க, மாசிக்கருவாட்டு தூள் 1மே.க, மசாலாத் தூள் 1மே.க, கடுகு 1தே.க, சிறிதாக வெட்டிய வெங்காயம் 3மே.க, சிறிதாக வெட்டியப பச்சை மிளகாய் 1மே.க, கறிவேப்பிலை 1நெட்டு, ரம்பை 2துண்டு

**செய்முறை:** பிஞ்சு பலாக்காயை கழுவி நான்கு சம பகுதியாக பிளந்து தோல் சீவி 3நீளமான நீள்சதுரத் துண்டுகளாக வெட்டி அத்துண்டுகளின் நடுவே சிறு சிறு பிளவுகளாக கொத்திப் பாத்திரத்திலிட்டு நீர் விட்டு அவித்து நன்கு அவிந்த பின் நீரை வடித்து ஊற்றி கொள்க. மஞ்சள்இ உள்ளிஇ இஞ்சிஇ மிளகு என்பவற்றிற்கு அளவாக நீர் சேர்த்து பசுந்தையாக அரைத்தெடுக்குக சீரகம் தேங்காய்ப்பூ என்பவற்றை ஓரளவாக வாசம் வரும் வரைக்கும் வறுத்து நீர் சேர்க்காது அரைத்தெடுத்துக் கொள்க. தேங்காயைத் துரவி 1 1/2 ரம்ளர் முதல் பாலைப் பிழிந்து அதற்குள் புளியினை 1/2 மணி நேரம் வரை ஊற வைத்த பின்னர் கரைத்து கொள்க. பின்பு பலாக்காய் பாத்திரத்தினுள் மிளகாய்தூள் அரைத்த உள்ளிக்கூட்டுஎன்பவற்றையிட்டு பாலை விட்டு குலுக்கிச் சேர்த்து வையுங்கள்.

தாச்சியில்எண்ணெயைவிட்டுகொதித்ததும் கடுகையிட்டு வெடிக்கவைத்து அதனுள் வெட்டிய வெங்காயம் பச்சை மிளகாய் என்பவற்றையிட்டு வதங்கவிட்டு வதங்கிய பின்னர் கறிவேப்பிலை ரம்பை என்பவற்றைச் சேர்த்து பலாக்காய் கலவையைக் கொட்டி மசாலாத்தூள் வறுத்திடித்த சீரகம் தேங்காய்பூ மாசித்தூள் என்பவற்றையிட்டு சேர்த்துக் கறி திரளத் தொடங்கியதும் இறக்கி கொள்க .

சுவையான பலாக்காய் கறி தயார்.






# முத்து பழசு இது புதுசு

முத்து பதித்த ஆசுபரணங்கள் என்றாலே அரச ககாலங்களிலும் பண்டைய கதைகள் கூறும் அரச பரம்பரையை உள்ளடக்கிய ராம படங்களிலும் தான் முதன்மை வகித்து வந்தது. ஆனால் இப்போ தங்கத்தை விட பித்தளையை விட முத்தினை விரும்பி அணிகின்றனர் நமது பெண்கள். இந்த முத்தாபரணம் இப்பொழுது மணப் பெண்ணின் அலங்காரத்திலும் முதன்மை வகிக்கின்றது.

ஆபரணக் கடைகளிலே முத்தாபரணங்களை தாராளமாக விதம் விதமான அழகுடையனவாக பெற்று கொள்ள முடியும். இவை அணிவதற்கு அழகாகவும் பார்ப்பதற்கு எழுப்பமாகவும் இருக்கும். பெண்களின் சாறி அழகை இன்னும் மெரகூட்டும் வகையில் இந்த ஆபரணங்கள் வருகை பெறுகின்றன.


பேண்கள் திருமணம் பூப்புனித நீராட்டு விழா போன்றவற்றிற்கு போகும் பொழுது எழிமையான அழங்காரமுடைய புடவைகளை அணிந்து இந்த முத்து நெக்லஸ் மற்றும் அதோடு வரும் தோடு அல்லது சிமிக்கி அணிந்து கொண்டால் அழகு அள்ளி கொள்ளும் என்றால் பாருங்களேன். . நீங்களும் அணிந்து உங்கள் அழகை மெருகூட்டி பாருங்கள். அதன் பின் உங்கள் கணவனுக்க நீங்கள் தான் தேவதை.



# விரல் சூப்பினால் நீட்டு பல் வளரும்

குழந்தைகளுக்கு பற்கள் அழகாக வளருவது மிக அவசியம். அப்பொழுது தான் அழகான பற்கள் முக அழகை மெருகூட்ட அமையும். சின்ன வயதில் பற்கள் நீண்டு வளர ஆரம்பித்தால் பின்னர் எதிர்காலத்திலும் அவற்றின் அமைப்பை முழுமையாக மாற்றுவது கடினம். ஆகையால் முக அமைப்பின் அழகு குன்றி விடும். உங்கள் குழந்தைகளின் முக அழகு அபாத்திர லட்சமாக உருவெடுக்கும்.


எனவே உங்கள் பிள்ளைகளின் பற்களின் அழகை சரியாக வழிநடத்த பிள்ளைகள் விரல் சூப்புவதை தவிருங்கள். பால் பற்கள் விழுந்து நிரந்தரமான பற்கள் வளரும் பருவத்தில் இந்த பழக்கம் தொடரும் போது பற்களின் நேரான வளர்ச்சிக்கு விரல்கள் இடையூறாக இருப்பதால் பற்கள் தம் இயல்பை விட்டு விரல் சூப்பும் நிலைக்கேற்ப நீண்டு வளர ஆரம்பிக்கும். எனவே மூன்றில் இருந்து நான்கு வயது வரைக்கும் குழந்தைகள் விரல் சூப்பினால் பறவாயில்லை. அதற்கு மேல் அந்த பழக்கத்தை அனுமதிக்க கூடாது. பால் பற்களை பாதுகாத்து குழந்தைகளை ஆரோக்கியமாகவும் அழகாகவும் வளர்த்தெடுப்போம்.



# ஆண்களின் சருமம் அழகு பெற

அழகு என்பது பால் வேறுபாடின்றி ஆண் பெண்ணிற்கு இன்றியமையாதது. எனவே ஆண்களும் உங்கள் சருமு அழகில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

1. சுத்தமான சந்தனத்தை பாதாம் எண்ணெயில் குழைத்து முகத்தில் பூசி இந்த கலவை காய்ந்ததும் முகத்தை கழுவலாம் .
2. தக்காளியை நன்றாக பிசைந்து அதனோடு 4 5 துளிகள் எலுமிச்சை சாறு கலந்து முகம் கழுத்து பகுதி கைகளில் பூசிக்கொள்ளலாம்.
3. முகத்தை கழுவியபிறகு சிறிதளவு பாலை உள்ளங்கையில் எடுத்து முகத்தில் பூசவும். இவ்வாறு தொடர்ந்து 2 3 வாரங்கள் வரை செய்துவந்தால் உங்கள் சருமம் பொலிவடைந்திருப்பது கண்கூடாக தெரியும்.
4. சிறிதளவு இளநீரை முகம் கழுத்து பகுதி கைகளில் பூசிவந்தால் சருமட நிறம் மாறும்.
5. சீரகம் மற்றும் முள்ளங்கியை ஆகியவற்றை தனித்தனியே தண்ணீரில் கொதிக்கவைத்து அந்த தண்ணீரில் முகத்தை கழுவினால் மாசுகள் அகற்றப்பட்டு முகம் பிரகாசமாக தோன்றும்.
6. புதினா மற்றும் எலுமிச்சை சாறுகளை கலந்து முகத்தில் தடவலாம்
7. முட்டையின் வெள்ளை கருவை வாரம் இருமுறை முகத்தில் பூசிவந்தால் சரும நிறம் சிகப்பாக மாறுவதோடு மிருதுவாகவும் மாறும்.
8. அன்னாசி பழத்தின் சாறு, தர்பூசிணி மற்றும் பப்பாளி பழ சாறுகளும் சரும நிறத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.



# பெண்கள் மாதவிடாய் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டியவை

1. முதலில் மனதில் தோன்றும் வெறுப்பை மாற்றிக்கொள்ள வேண்டும்.
2. மாதவிடாய் தோன்றும் நாட்களை கவனத்தில் கொண்டு அந்த காலங்களில் வெளியூர் பயணம், மற்ற கடின வேலைகளை தவிர்க்க வேண்டும்.
3. மாதவிடாய் காலத்தில் மென்மையான எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவுகளை உண்ண வேண்டும்.
4. எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவுகளைத் தவிர்த்தல் நல்லது.
5. அதிக நார்ச்சத்துள்ள பழங்களை சாப்பிட வேண்டும். பழங்கள் மலச்சிக்கலைப் போக்குவதுடன் உடலுக்கு வலுவைத் தரும்.
6. அதிக உதிரப்போக்குள்ள காலத்தில் தலைக்கு தண்ணீர் ஊற்றி குளிப்பதை தவிர்க்க வேண்டும். பருத்தியினால் ஆன உடைகளை அணியவேண்டும்.
7. ஓய்வு மிகவும் அவசியம். உதிரப்போக்கு காரணமாக சிலருக்கு களைப்பு ஏற்படும். ஓய்வும், உறக்கமும் நல்லது. தலை வலி, எரிச்சல், இருந்தால் மருத்துவரை அணுகி பரிசோதனை செய்து கொள்ளுங்கள். மருத்துவரின் ஆலோசனையின்றி மருந்துகளோ, மாத்திரைகளையோ உபயோகிக்கக் கூடாது.
8. கோபி குளிர்பானங்களை தவிர்க்க வேண்டும். குளிரூட்டப்பட்ட உணவுகளை சாப்பிடக் கூடாது.
9. காய்ச்சி ஆறவைத்த நீரை அருந்துவது நல்லது.
10. வாசனை திரவியங்களை உபயோகப் படுத்த வேண்டாம்.
11. மாதவிலக்கின் போது வயிற்று வலியிருந்தால் பத்து கிராம் சீரகத்துடன் 50 மி.லி. தண்ணீர் சேர்த்து நன்கு காய்ச்சி அது பாதியாக வந்தவுடன் வடிகட்டி அதனுடன் சிறிது பெருங்காயத்தூள் சேர்த்து காலை, மாலை அருந்தி வந்தால் வயிற்று வலி நீங்கும். இந்தக் காலங்களில் உணவில் அதிக அளவு பெருங்காயம் சேர்த்துக்கொண்டால் அது நரம்புகள் மற்றும் மூளையின் செயல்பாட்டை புத்துணர்வு பெறச் செய்யும்.
12. மாதவிலக்கின் போது முறையற்ற உதிரப்போக்கு இருந்தால் இரண்டு ஸ்பூன் கருப்பு எள்ளைக் கழுவி எடுத்துக்கொண்டு அதில் ஒரு ஸ்பூன் பனைவெல்லம் கலந்து தண்ணீரில் காய்ச்சி வடிகட்டி அந்த தண்ணீரை ஆறவைத்து குடித்து வந்தால் உதிரப்போக்கு சீராக இருக்கும்.
13. மாதவிலக்கின்போது கடுமையான உபாதைகள் தோன்றினால் மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுவது நல்லது.

# தலை முடி பத்திரம்

நல்லெண்ணெயை காய்ச்சி இறக்கியதும் 50 கிராம் பச்சை கருவேப்பிலையை போட்டு மூடி விடுங்கள். மறு நாள் இந்த எண்ணெயை மிதமாக சூடு பண்ணி தலையில் நன்றாக தேய்த்து சியாக்காய் போட்டு அலசுங்கள். வாரம் இரு முறை இப்படி குளித்துவர நரை முடிகள் கருமை மாறிவிடும்.

இளநரைக்கு இன்னொரு சிகிச்சை ஒரு பிடி கருவேப்பிலையை அரைத்து அந்த சாறில் 3டீஸ்பூன் வெந்தய பவுடர் கலந்து தலைக்கு பேக் போட்டு காய்ந்த பிறகு அலசுங்கள். வாரம் ஒரு தடவை இப்படி செய்தால் நரை மறைந்து விடும்.

சோற்று கற்றாழை ஜெல்லுடன் சம அளவு கறிவேப்பிலை சேர்த்து அரைத்து கொள்ளுங்கள். அந்த விழுதை பேக் போட்டு 15 நிமிடம் கழித்து தலையை கழுவுங்கள். வாரம் 2முறை. இதை செய்தால் தலை குளிர்ச்சியாகவும் முடி வளர்ச்சியும் தூண்டப்படும்.

வித்து நீக்கிய நெல்லிக்காய் செம்பருத்தி பூ கருவேப்பிலை மூன்றையும் சம அளவில் எடுத்து தண்ணீர் சேர்த்து அரைத்து கொள்ளுங்கள். அதனுடன் வடித்த கஞ்சியை கலந்து தலையில் நன்றாக தேய்த்து அலசுங்கள். வாரம் ஒரு முறை இப்படி செய்தால் போதும் பிசுபிசுப்பு நீங்கி விடும்.



## விடுகதை

கூவி அழைப்பான் கூடி உண்ணுவான் அவன் யார்?

- காகம்

அவனுக்கு வீடு மற்றவர்களுக்க வலை அது என்ன?

- சிலந்தி

கண்ணீர் விட்டே கடைசிவரை ஒளி தருவான் அவன் யார்?

- மெழுகுதிரி

ஆட்டுவித்தால் ஆடாமல் இருக்காது அது என்ன?

- ஊஞ்சல்

வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ எது?

- சிரிப்பு

தலையை சீவினால் கறுப்பு நாக்கை நீட்டுவான் அவன் யார்?

- பென்சில்

வாள் நீண்ட குருவிக்கு வாயுண்டு வயிறில்லை அது என்ன?

- அகப்பை

தூக்கம் வந்தால் தானாக மூடும் கதவுகள் அவை எவை?

- கண்கள்

வாழ் நாள் முழுக்க வாயை மூடாதவன் அவன் யார்?

- கிணறு

செம்பு நிறைய சிவப்பு முத்துக்கள் அது என்ன?

- மாதுளம்பழம்

*அ.கோபிகாந்*
*தரம்4*
*இருபாலை சீ.சீ.தக*
*பாடசாலை*

## ஒரு நாள் உணவுக்கு

பக்தர் ஒருவர் இறை அடியார்களுக்கு தினமும் உணவளித்து வந்தார். ஒரு நாள் வயது முதிர்ந்த பெரியவர் ஒருவர் வந்து அன்னம் வேண்டினார். அந்த பக்தர் முதியவரை உணவருந்த உள்ளே அழைத்துச் சென்றார். முதியவரோ கைகளைக் கழுவாமல், உடனே அமர்ந்து சாப்பிடத் தொடங்கினார்.

அதைக் கண்ட அந்த பக்தர் முதியவரிடம், 'கை கால்களைச் சுத்தம் செய்து இறைவனை வேண்டிய பிறகே உணவருந்த வேண்டும்' என்றார். அந்த முதியவர் அதை லட்சியம் செய்யாமல் சாப்பிட்டு விட்டுச் சென்றார். அன்றிரவு கடவுள் பக்தரின் கனவில் தோன்றி, 'இத்தனை வருடம் அந்த முதியவருக்கு யார் உணவளித்தார்கள்?' என்று கேட்டார். பக்தர், 'எல்லாம் தங்கள் அருள்' என்று பதிலளித்தார்.

கடவுள், 'இத்தனை வருடமும் நான் அவருக்கு எந்த நிபந்தனையும் விதிக்கவில்லையே? ஒரு நாள் உணவளித்த நீ நிபந்தனை விதிக்கலாமா?' என்று கேட்டார். அதைக் கேட்டு வருத்தமடைந்த பக்தர் இறைவனிடம் மன்னிப்பு கேட்டார்.




## குழந்தைகள் தீபாவளி

தீபாவளி வந்துவிட்டால் ஆனந்தம் குழந்தைகளுக்கு தான். சந்தோசங்களை ஏழைகள் பணக்காரர் என்று பாகுபாடு இன்றி மனதில் கள்ளம் கபடம் இன்றி சாதி மத பேத வேறுபாடு தெரியாமல் ஒன்றினைந்து ஒருவரை ஒருவர் பாசத்தால் சின்ன சின்ன பருசுகளை கொடுத்து ஆனந்தத்தை வெளிப்படுத்தும் குட்டீஸ்களை பார்க்கும் பொழுது இப்படியான பண்டிகைகள் இவர்களுக்காக தான்; உருவாகியிருக்குமோ என்று என்னத் தோன்றும்.

எமது சின்ன பிள்ளைகளிடம் காலம்



காலமாக இருந்து வரும் ஒரு பழக்கம் தீபாவளி என்றால் தீபாவளி அட்டைகளை பரிசளித்து சந்தோசமடைவது. புது ஆடை அணிவது பட்டாஸ் கொழுத்துவது கோவிலுக்கு உறவுகள் வீடுகளுக்கு போவது. பலகாரங்களை பகிர்ந்து உண்பது. இது சின்ன சின்ன பிள்ளைகளுக்கு மிகவும் பிடித்தவை. இவை தமக்கு அந்த நாளில் கிடைக்காத பொழுது மனம் சோர்ந்து போய்விடுகின்றனர் நமது பிள்ளைகள்.

இதில் பாடசாலை மாணவர்கள் தீபாவளி வாழ்த்து அட்டைகளை புத்தங்களுக்குள் ஒழித்து வைத்து பகிர்ந்து கொள்வது எல்லோருமே பாடசாலை காலத்தில் அனுபவித்திருப்பீர்கள். அப்படி தான் இவர்களும். இவர்கள் இருவரும் நல்ல நண்பர்கள். அடி பட்டு ஒருவரை ஒருவர் எப்பொழுதும் திட்டி கொண்டே இருப்பார்களாம். ஆனால் இருவரும் கதைக்காமல் இருப்பதில்லையாம் தீபாவளி தைப்பொங்கள் என்றால் இருவரும் மாறி மாறி இருவாது புத்தகங்களுக்குள்ளும் வாழ்த்து அட்டைகளை வைத்து இன்ப அதிர்ச்சி கொடுத்து மகிழ்வோம் என்று ஆரவாரம் கொள்கிறார்கள். தீபாவளியை வரவேற்று வாழ்த்துகளை சொல்லிய படி.



## நாய்கள் பற்றி அறிவீர்களா?

நாய் அனைத்துண்ணி பாலூட்டி வகையைச் சேர்ந்த ஒரு விலங்கு இனமாகும். இன்று பெரும்பாலும் மனிதர்களோடு வாழ்கின்றது. இன்றுள்ள வளர்ப்பு நாய்கள் ஏறத்தாழ 17,000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதன் ஓநாய்களைப் பழக்கி நாயினமாக வளர்த்தெடுக்கப்பட்டவை என்று கூறப்படுகிறது

நாய்கள் மனிதர்களை விரும்பி, மனிதர்களை அண்டி வாழ்கின்றது. நாய்கள் மனிதனின் நண்பன் என்று பரவலாக கருதப்படுகிறது. நாய்கள் மனிதர்களுக்குக் காவல் நாய்களாகவும், ஆடுமாடுகளை மேய்க்கப் பயன்படும் மேய்ப்பு நாய்களாகவும், வேட்டையாட உதவும் வேட்டை நாய்களாகவும், பனிப்பகுதிகளிலே சறுக்குப்பொதிகளை இழுத்துச் செல்வது போன்று பணிபுரியும் நாய்களாகவும் , கண்பார்வை இழந்தவர்களுக்குத் துணையாக வழிகாட்டு நாய்களாகவும், பல்வேறு வழிகளிலே துணை நிற்கின்றன. சீனா போன்ற சில நாடுகளில் நாய் இறைச்சி, உணவாக உட்கொள்ளப்படுகிறது.

நாய்களுக்கு ஓரளவுக்கு அறிவுத்திறனும் மிக நல்ல மோப்பத் திறனும் உண்டு. மிகக்குறைந்த அதிர்வெண் கொண்ட ஒலிகளையும் மிக அதிக அதிர்வெண் ஒலிகளையும் கேட்க வல்லவை. நாய்களுக்கு காணும் திறத்தில்,கருப்பு வெள்ளையாக இருநிறப் பார்வை மட்டும் தான் உள்ளது என்று கருதுகிறார்கள். நாய்களுக்கு 220 மில்லியன் நுகர்ச்சிக் கண்ணறைகள் இருப்பதாகக் கண்டுள்ளனர்.

## பண்புகளை குழந்தைகளிடம் இப்படி கற்று கொடுங்கள்

1. தன்னிடம் இருக்கின்ற ஒரு பொம்மையை வசதி குறைந்த அல்லது பெற்றோரை இழந்த மற்றொரு குழந்தைக்கு கொடுப்பதன் மூலமாக சேவையின் பெருமையை நமது குழந்தை கற்றுக் கொள்கிறது.
2. நாம் விளையாட்டிற்காக அல்லது பொழுது போக்கிற்காக செலவழிக்கும் நேரத்தையும், பணத்தையும் மற்றவர்களுக்கு உதவிசெய்ய செலவழிப்பது மிகவும் உயர்ந்தது. நமது உடனடித் தேவைகளை விட மற்றவர்களின் பசியை கண்ணீரைப் போக்குவது மிகவும் உயர்ந்த செயல் என்பதை இதன் மூலமாக குழந்தைகள் வெகு எளிதாக கற்றுக் கொள்வார்கள்.
3. வறுமையைத் தாங்குதல், தேவையைக் குறைத்தல், செலவழிப்பதற்கு முன் அதன் அவசியம் போன்ற குணங்களை குழந்தைகள் கற்றுக் கொள்ள அவர்களை நாம் சமூகசேவைகள் செய்ய அனுமதிக்க வேண்டும்.
4. பலதரப்பட்ட வாழ்க்கைத் தரங்களில் உள்ள மனிதர்களுடன் அவர்கள் பழக இது வழி ஏற்படுத்தும். ஏற்றத்தாழ்வுகள் மிகுந்த சமுதாயம் கவனிக்கப்படாதவர்கள் வசதி வாய்ப்புக்களைப் பெறாதவர்கள் கல்வி அறிவு பெறாதவர்கள் வயதானவர்கள், பெற்றோர்களினால் ஒதுக்கப்பட்ட குழந்தைகள், பள்ளிக்குச் செல்லும் வாய்ப்புப் பெறாத குழந்தைகள், வயதானவர்கள் என்று பலதரப்பட்ட மக்களை அவர்கள் சந்திக்கும் போது வாழ்க்கையின் பலவிதமான சூழ்நிலைகளையும்இ துன்பங்களையும், தொல்லைகளையும் அவர்கள் அறிந்து கொள்ள முடியும்.
5. இதன் மூலமாக நாம் இவர்களை விட நல்ல நிலையில் இருக்கிறோம். நமக்கு உதவி செய்ய பெற்றோர், உடன் பிறந்தவர்கள், உறவினர்கள் இருக்கிறார்கள். நாம் மிகவும் அதிஷ்டம் செய்தவர்கள். நம்மிடம் இருக்கின்ற வசதிகளை வைத்துக் கொண்டு சந்தோஷமாக வாழ வேண்டும். இவற்றை ஏற்படுத்திக் கொடுத்த கடவுளுக்கும், பெற்றோர்களுக்கும் நன்றி தெரிவிக்கவேண்டும். இல்லாதவற்றை பெரிதாக நினைத்து சலிப்படைவதோ, எரிச்சல் அடைவதோ, குறை கூறுவதோ அல்லது துன்பப்படுவதோ, அதற்காக குடும்பத்தில் சச்சரவு செய்வதோ கூடாது என்பதை குழந்தைகள் கற்றுக் கொள்வார்கள். இவையெல்லாம் பெற்றோரால் ஆசிரியர்களால் முதியவர்களால் பாசமாகவும் நேசமாகவும் கற்று கொடுக்கப்படும் பொழுது அந்த குழந்தைகள் கற்றுக் கொள்கின்றனா். ஆகையினால் குழந்தைகளுக்கு நாம் கற்றுக் கொடுக்க வேண்டும். நல்ல பண்புகளை.




அன்னை தெரசா அவர்களுக்கு உலகப் புகழ் பெற்ற 'நோபல் பரிசு' 1979 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. இந்தப் பரிசினைப் பெறுவதற்காக அன்னை தெரசா சுவீடன் நாட்டிற்குச் சென்றார்.

நோபல் பரிசு பெறுபவர்களுக்கு ஆடம்பர விருந்து அளித்துப் பாராட்டிப் பரிசு வழங்குவது வழக்கம்.

இதையறிந்த அன்னை தெரசா பரிசுக் குழுவினரிடம் சென்றார். 'இவ்வளவு பெருந்தொகை செலவழித்து ஏன் விருந்து வைக்க வேண்டும்? அந்தத் தொகையினை என்னிடம் வழங்கினால் அதைக் கொண்டு மேலும் பல ஏழைகளுக்குப் பசி போக்கிட உதவ முடியும்' என்றார் அன்னை தெரசா.

அன்னை தெரசாவின் பேச்சு விழாக் குழுவினரை நெகிழ வைத்து விட்டது.

அவரது வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, விருந்துக்காக ஒதுக்கப்பட்டதொகை முழுவதையும் அன்னை தெரசாவிடமே வழங்கினர்.

# நான் பானுஜன் அல்ல; மோனிஷா!

## ஒரு திருநங்கையின் வாழ்வியல் தொடர் 7



மோனிஷா

வடக்கு கிழக்கில் யாழ்ப்பாணத்தில்தான் திருநங்கைகள் ஓரளவு வெளிப்படையாக செயற்படுகிறார்கள். முழுமையான அமைப்பாக அல்லாவிட்டாலும் ஓரிரண்டு அமைப்புக்கள் திருநங்கைகள் சார்ந்து யாழில் இயங்குகின்றன. திருநங்கைகளை முழுமையாக ஒருங்கிணைக்க, கல்வி தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியாவிட்டாலும் திருநங்கைகளை ஒன்றுதிரட்ட, சமூகத்தில் சிறிய அசைவை ஏற்படுத்த அவற்றால் முடிந்திருக்கிறது.

கிளிநொச்சியில், மன்னாரில், வவுனியாவில், கிழக்கில் திருநங்கைகள் பகிரங்கமாக அடையாளத்தை வெளிப்படுத்த தயங்கும் நிலைமையே உள்ளது. இந்த பகுதிகளிலுள்ள திருநங்கைகள் சிலர் யாழ்ப்பாணத்திற்கு வருகிறார்கள். இங்குள்ள திருநங்கைகளுடன் இணைந்திருக்கிறார்கள்.

திருநங்கைகள் எதிர்கொள்ளும் பெரிய சவால் வேலை வாய்ப்பு. திருநங்கை அடையாளத்தை வெளிப்படுத்திய நாளில் இருந்து அவர்கள் பாடசாலைக்கு செல்ல முடியாத நிலைமை. நான் பாடசாலையில் நீடிக்க முடியாததை போன்ற நிலைமைதான் ஒவ்வொரு திருநங்கைக்கும். போதிய புரிதல் இல்லாத சமூகம், ஆசிரியர்கள், கேலி பேசும் மாணவர்கள் என திருநங்கைகள் எதிர்கொள்ளவே முடியாத சவால் பாடசாலை. கல்வியை நிறுத்தியவர்களிற்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை.

வீட்டில் அங்கீகாரம் கிடைப்பதில்லை. உதவிகளும் கிடைக்காது. திருநங்கை அடையாளத்தை பிள்ளை சுமந்த கோபத்தில் பெற்றோரும் எதிர்நிலையில் இருந்திருப்பார்கள். பின்னர் புரிதல் கிடைத்து, பிள்ளையை ஏதாவதொரு தொழில்கல்விக்கு தயார்படுத்த முயற்சிக்கும் போதுதான் சிக்கல் ஆரம்பிக்கிறது.

திருநங்கைகளிற்கு தமிழர்களின் உயர் கல்வி, தொழில்கல்வி நிலையங்கள் எதுவும் திறக்கப்படவில்லை. பெண், ஆண் அடையாளத்துடன்தான் அங்கு செல்ல முடியும். திருநங்கைகள் எங்கு உட்கார்வதென பதில் கேள்வி கேட்பார்கள்.

உழைப்பு என்பதற்காக எல்லாவித வாய்ப்பையும் சமூகம் திருநங்கைகளிடமிருந்து பறிக்கிறது. எந்த வாய்ப்பையும் வழங்காமல், பிறரில் தங்கியிருக்கும் அடையாளம் அற்றவர்களாக திருநங்கைகள் இருக்க வேண்டுமென சமூகஅமைப்பு விரும்புகிறது. அவர்களை போகப்பொருளாகவும் பாவனை செய்கிறது. அதனால்த்தான் திருநங்கைகளை பெரும்பாலான ஆண்கள் பாலியல் சீண்டலிற்கு உள்ளாக்குகிறார்கள்.

கல்வியை முழுமையான நிறைவு செய்தாத நான் தொழில் பிரச்சனையை இப்பொழுது எதிர்கொள்கிறேன். ஒருமுறை கச்சேரியடியில் உள்ள விடுதி ஒன்றில் வேலைக்கு போனேன். துப்பரவு பணி எனக்கு கிடைத்தது.

இரண்டு வாரங்கள் சாதாரணமாக கடந்தது. ஒருநாள் விருந்தினர் தங்கியிருக்கும் அறைகளை சுத்தம் செய்ய சென்றேன். அறையொன்றில் தங்கியிருந்து விருந்தினன் ஒருவன் என்னை அழைத்து ஆபாசமாக பேசி, உறவிற்கு அழைத்தான்.

சாதாரணமாக ஒரு பெண்ணை யாரும் இப்படி அணுகுவதில்லை. பெண்கள் சமூகத்தில் சந்திக்கும் நெருக்கடிகள் அதிகமென்றாலும், இப்படியான பகிரங்க சீண்டல்கள் கிடையாது. திருநங்கைகள் என்றால் எப்படியும் நடக்கலாம், அவர்கள் குரலற்றவர்கள் என்றுதான் பெரும்பாலானவர்கள் நினைக்கிறார்கள்.

பிறகொருநாள் விடுதியில் தங்கியிருந்த சிங்கள பயணியொருவர் தன்னுடன் உறவிற்கு வருமாறு சிறிய துண்டில் எழுதி இன்னொருவர் மூலம் கொடுத்தனுப்பியிருந்தார். அந்த துண்டை கொண்டு வந்தவர்தான் எழுதுவதில் உதவியிருக்கலாம்.

இந்த விவகாரத்தை முதலாளி, என் வீட்டில் சொல்ல முடியாது. சொன்னால், நீ இப்பிடி திரிஞ்சால் கண்டவனும் சேட்டை விடுவான்தானே என இலகுவாக கடந்து செல்வார்கள். இப்படியான நெருக்கடிகளால் அந்த வேலையை தொடர முடியவில்லை. பின்னர் புடைவைக்கடை ஒன்றில் வேலைக்கு சேர்ந்தேன். நிறையப்பையன்கள் கடைக்கு முன்பாக கூடத் தொடங்கினார்கள். 'அலியை பார்க்கப் போறம்' என கூச்சலிடுவார்கள். கடையில் வேலை செய்த மற்றைய பெண்கள் முகம் சுளிக்க தொடங்க, முதலாளி என்னை வேலையிலிருந்து நிறுத்தினார்.

திருநங்கைகளின் எதிர்காலம் எப்படியிருக்கும், பத்து வருடத்தின் பின் என் வாழ்க்கை எப்படியிருக்கும் என்றெல்லாம் எனக்கு தெரியவில்லை. எனக்கு ஆறுதலாக உள்ள வெகுசிலரும் பத்துவருடத்தின் பின் உயிருடன் இருப்பார்களா தெரியவில்லை. அவர்கள் இல்லாத உலகத்தை நினைக்கவே நடுக்கமாக இருக்கிறது. எப்படியோ திருநங்கைகளின் உலகம் இறக்கும்வரை போராட்டம்தான்.

**பத்து வருடத்தின் பின் என் வாழ்க்கை எப்படியிருக்கும் என்றெல்லாம் எனக்கு தெரியவில்லை. எனக்கு ஆறுதலாக உள்ள வெகுசிலரும் பத்துவருடத்தின் பின் உயிருடன் இருப்பார்களா தெரியவில்லை.**

கடந்த ஆறு இதழ்களில் திருநங்கைகளின் உலகம் பற்றிய எனது சிறு அனுபவங்களை எழுதியுள்ளேன். திருநங்கைகள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களை இந்தவகையான எழுத்துக்கள் முற்றாக நிறுத்துமென நான் கற்பனை செய்யவில்லை. ஆனால், சிறிய விழிப்புணர்வையாவது உண்டாக்கியிருக்குமென நம்புகிறேன்.

அப்படியேதும் நிகழ்ந்திருந்தால் அந்த மகிழ்ச்சியை நான் மட்டுமே உரித்தாக்கி கொள்வது முறையல்ல. தீபம் பத்திரிகைதான் இந்த வாய்ப்பை உருவாக்கி தந்தது. அது இல்லாவிட்டால் இப்படியொரு வாய்ப்பே கிடைத்திருக்காது. அடுத்ததாக, என்கதையை எழுதுவதில் ஒத்தாசையாக இருந்த தீபத்தின் பிரியந்தினி, சியா ஆகியோருக்கும் நன்றியுடையவனாக இருப்பேன்.

இந்த உலகம் பெரியதுதான். அதில் ஏராளம் ஜன்னல்களும், கதவுகளும் இருக்கலாம். ஆனால், சாவிகள்தான் எமக்கு கிடைக்கவில்லை.

**(முற்றும்)**





இரசிகர்களாக இருப்பார்களா? வெறியர்களாக இருப்பார்களா?



இந்தியாவில் நடந்த சம்பவம். 17 வயது யுவதியை ஒருவன் பாலியல் வன்முறை செய்துள்ளான். அவன் அடையாளம் காணப்பட்டு வழக்கு விசாரணை நடந்துள்ளது. இந்த நிலையில் யுவதியின் தந்தையிடம் சென்று, வீடு வாங்கித்தருகிறேன், சமரசம் செய்து கொள்ளலாம் என கூறியுள்ளான். தந்தையும் சம்மதிக்க, வீட்டை காண்பிக்க அழைத்து சென்றுள்ளான். பாதிவழியில் வாகனத்தை நிறுத்தி, குற்றவாளியை மரத்தில் கட்டிவைத்து கையை வெட்டியுள்ளார்.












இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 30.10.2016 அன்று வெளியிடப்பட்டது.